ஜனவரி 28, 2001 ~~ரூபா 14.00~~ அறிமுக விலை ரூபா 12.00

GISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI සුඩර් ඔළි

வார மலர்



முதல் முஸ்லிம் பெண் அமைச்சர் பேரியல் அஷ்ரப் இத்தா முடிந்து வருகிறார்

## எல்லாப் பகுதிகளுக்கும் நேரடி விஜயங்கள் உடனடி நடவடிக்கைகள்

# ஐ.தே.க.வில் பெண்களுக்கு அடித்திருக்கிறது யோகம்

பெண்கள் இல்லாத உலகத்திலே கண்களினாலே என்ன பயன்? என்று அன்று சினிமாவுக்குப் பாட்டெழுதினான் ஒரு கவிஞன்.

இன்று "பெண்கள் இல்லாத கட்சியினாலே நாட்டுக்கு என்ன பயன்?" என்றே பாடத் தோன்றுகிறது. ஏன் என்று கேட்கிறீர்களா?

நாட்டின் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி முன்னர் ஒருபோதும் இல்லாதவாறு இப்பொழுது பெண்களுக்கு இடமளிக்கத் தொடங்கியுள்ளது. கட்சியின் செயற்குழுவில் ஒரு பெண்கள் பட்டாளமே சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது.

ஐ.தே.க.வின் செயற்குழுவுக்குப் புதிதாக நியமிக்கப்பட்ட பெண்களில் திருமதி உலக அழகு ராணியான ரோஸி சேனாநாயக்கா குறிப்பிடப்பட வேண்டியவர். முன்னாள் அமைச்சரான அமரர் ஐ.எம். ஆர்.ஏ.ஈரியகொல்லையின் மகளான இந்திராணி ஈரியகொல்லை, பியூலா முனசிங்க, காந்தி கன்னங்கர முன்னாள் எம்.பிக்களான ரேணுகா ஹேரத், இராஜமனோகரி புலேந்திரன் ஆகியோரும் இடம்பெற்றுள்ளனர்.

ஐ.தே.க.வின் முன்னைய செயற்குழுவில் இருந்த பெண்களின் தொகை நான்கு. இத்தொகை இப்பொழுது பத்தாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த அதிகரிப்பிற்கான காரணம் என்ன? கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்க அண்மையில் நடந்த கூட்டமொன்றில் இதற்கான விளக்கத்தை அளித்துள்ளார்.

சிறுபான்மையினருக்கும் பெண்களுக்கும் செயற்குழுவில் ஆகக்கூடியளவு பிரதிநிதித்துவம் வழங்க நாம் முதலில் தீர்மானித்துள்ளோம். இதன் மூலம் அவர்கள் கட்சிக்குள் குரல் எழுப்ப சந்தர்ப்பம் வழங்கியுள்ளோம். சிறுபான்மையினருக்கு ஆகக்கூடியளவு பிரதிநிதித்துவம் வழங்குவது இதன் மற்றொரு முக்கிய நடவடிக்கையாகும். இதற்கேற்ப தமிழர் பிரதிநிதித்துவத்தை ஆறில் இருந்து ஒன்பதாக அதிகரித்தோம். முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை ஐந்தில் இருந்து எட்டாக அதிகரித்துள்ளோம்.

செயற்குழுவில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை இருபது சதவீதமாக அதிகரிக்க நான் தீர்மானித்தேன். முதல் நடவடிக்கையாக இது பத்துவீதத்தால் அதிகரிக்கப்பட்டது. பின்னர் இருபது சதவீதமாக இது அதிகரிக்கப்படும்.

ஐ.தே.க. தலைவர் இவ்வாறு தனது நடவடிக்கைக்கு விளக்கமளித்துள்ளார்.

கட்சித் தலைவரே இந் நடவடிக்கையை மேற்கொண்டுள்ள போதிலும் கட்சிக்குள் அதற்கு எதிர்ப்புக் கிளம்பாமல் இல்லை.

கட்சிக்குள் இருக்கும் பெண்களின் தொகை போதாதா? எதற்காக அதிகரிக்க வேண்டும்? அந்த வாய்ப்பைக் கட்சியில் இருக்கும் வேறு ஆட்களுக்கு வழங்கினால் என்ன? என்பது போன்ற கேள்விகள் ஐ.தே.க. வுக்குள் எழுந்தன.

செயற்குழுக் கூட்டத்துக்கு ஆண் உறுப்பினர்களின் வருகையை உறுதிப்படுத்தவே இந்த நடவடிக்கை என்று ரோஸி சேனாநாயக்காவின் நியமனத்தைக் குறிப்பிட்டு கட்சிக்குள் குத்தல் பேச்சுக்களும் எழுந்துள்ளன.

பெண்களுக்கு நாடாளுமன்றத்திலும் கூடுதலான இடமளிக்கப்பட வேண்டும் என்ற ஒரு கோரிக்கையையும் சில காலத்துக்கு முன்பிருந்தே எழுப்பப்பட்டு வருகிறது. ஆனால் அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படும் வழியை இன்னமும் காணவில்லை.

இலங்கைக்கு அயல் நாடான இந்தியாவிலும் பெண்களுக்கு நாடாளுமன்றத்தில் கூடுதல் இடம் ஒதுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை பல மாதங்களாக எழுப்பப்பட்டு வருகிறது. இக் கோரிக்கையின் பலனாக இந்திய நாடாளுமன்றத்தில் பெண்களுக்கு 33 சதவீத இடங்கள் ஒதுக்கப்பட கட்சிகள் ஒப்புக்கொண்டு சட்டமூலம் தயாரிக்கப்பட்டது. ஆனால், அந்த சட்டமூலம் இன்னமும் இழுபறி நிலையிலேயே இருந்து வருகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் எவ்வாறு பேச வேண்டும் என்பதற்கான ஒரு பயிற்சியையும் ஐ.தே.க ஒழுங்கு செய்துள்ளது. பயிற்சி வழங்குபவர் வேறு யாருமல்லர். நடிகை அனோஜா வீரசிங்கவே. கடந்த பொதுத் தேர்தலில் இவர் ஐ.தே.கவை ஆதரித்தவர்.

நடிப்புடன் கூடிய பேச்சை ஐ.தே.க எம்.பிக்கள் இனி நாடாளுமன்றத்தில் நடத்துவார்களோ, என்னவோ?

இந்த புதிய நியமனங்கள் குறித்து ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர்கள் மத்தியிலும் பலத்த அதிருப்தி நிலவுகிறது. "இப்பொழுது ஒரு 'பியுட்டி குயின்' இருக்கிறார். 'மொடல்கள்' ஓரிருவர் நியமிக்கப்பட்டால் இந்த 'அச்சாறு' பூர்த்தியாகி விடும்" என்று ஒரு மூத்த எம்.பி கூறியுள்ளார். முன்னாள் முதல் பெண்மணியான ஹேமா பிரேமதாஸ மீது கவனம் செலுத்தப்படாதது குறித்து கவலைப்படுவோரும் உள்ளனர்.

— எட்வேர்ட்

# யுத்தத்துக்கு யுத்தம் மூலமே முடிவு காண வேண்டும்

— மகாநாயக்கதேரர்

யுத்தத்தை நிறுத்த வேண்டும். பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். தமிழ் மக்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண வேண்டும் நிலையான சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும். இது தான் எல்லோருடைய விருப்பம்.

ஆனால் யுத்தத்தை நிறுத்துவது எப்படி? அதில் தான் கருத்து வேறுபாடு.

யுத்தத்துக்கு யுத்தத்தின் மூலமே முடிவு காணவேண்டும். இப்படி முடிந்த முடிவாகக் கூறுகிறார் மல்வத்தை பீட மகாநாயக்கர் ஸ்ரீ ரம்புக்வெல்லே விபஸ்ஸி தேரர்.

மகாசங்கம் எப்பொழுதும் இந்தக் கருத்தையே கொண்டிருக்கிறது. தம்மை சமீபத்தில் சந்தித்த அமெரிக்கத் தூதுவர் அஸ்லி வில்லிடம் இதை மகாநாயக்கர் உறுதிப்படுத்தினார்.

தூதுவர்: இந்த நாட்டில் கடந்த 18 வருடங்களாக யுத்தம் நடைபெற்று வருகின்றதல்லவா? இந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர நீங்கள் எவ்வாறான கருத்தைக் கொண்டிருக்கிறீர்கள்.

மகாநாயக்கர்: இந்த யுத்தம் முடிவுற வேண்டும். என்றாலும் என்னைப் பொறுத்த மட்டில் நான் யுத்தம் செய்பவன் அல்லன்.

தூதுவர்: அவ்வாறானால் இந்த யுத்தத்தை எவ்வாறு தான் முடிவுக்குக் கொண்டு வரலாம் எனக் கருதுகிறீர்கள்?

மகாநாயக்கர்: இந்த யுத்தத்தை யுத்தமாகவே வெற்றி கொள்ள வேண்டும். இதற்கு மேலாக எனக்கு எதையும் கூற இயலாது.

தூதுவர்: வெளிநாடுகளில் இருப்பவர்களின் பலரது எண்ணம் இந்த யுத்தத்தை யுத்தம் ஊடாக வெல்ல முடியாது என்பதாகும்.

மகாநாயக்கர்: இப்படிக் கூறுபவர்கள் வெளிநாடுகளில் இருப்பவர்களே. இது எமது நாட்டில் நடைபெறும் யுத்தம் அல்லவா? பலரது அபிப்பிராயங்களையே நான் இங்கு கூறுகிறேன். பிறநாடுகளில் இருப்பவர்களின் அபிலாஷைகளுக்கு ஏற்ப இலங்கை மக்கள் வாழ இயலாது. உலகில் உள்ள நாடுகள் ஏனைய நாடுகள் கூறுவது போன்று வாழவும் இயலாது.

தூதுவர்: இன்றைய பிரச்சனையை யுத்தத்தின் மூலம் வெற்றி கொண்டு தீர்க்கலாம் எனக் கருதுவோரும் இருக்கின்றனர். வேறு சிலர் பேச்சுவார்த்தைகள் மூலமாகவே தீர்க்கலாம் எனவும் கருதுகிறார்கள்.

மகாநாயக்கர்: இவ்வாறு கூறுவோர் எல்லோரும் அல்லர். அது நாட்டின் ஒரு பகுதியினரது கருத்தாக இருக்கலாம்.

தூதுவர்: நான் இலங்கைக்கு வந்து மூன்று மாதங்கள் மாத்திரமே மிக முக்கியமாக நாம் உரையாடல் நடத்தும் விடயம் இது. எனவே இந்த விடயம் சம்பந்தமாக நீங்கள் கூறும் அபிப்பிராயம் என்ன?.

மகாநாயக்கர்: நான் இது தொடர்பாகக் கடைப்பிடிக்க வேண்டிய புதிய விதிகள் எதுவும் இல்லை. இந்த யுத்தத்துக்கு யுத்தத்தின் மூலமாகவே முடிவு காணவேண்டும்.

தூதுவர்: சிங்கள மக்களுக்குள்ள உரிமைகள் போன்று தமிழ் மக்களின் உரிமைகள் பற்றி நீங்கள் என்ன நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறீர்கள்?

மகாநாயக்கர்: இந்த நாட்டுக்கு உரித்துடையவர்கள் சிங்களவர்கள். இந்த உரிமைக்காக வரலாற்று ரீதியாக சிங்கள அரசர்கள் யுத்தம் புரிந்திருக்கின்றனர். எமக்கு இங்கு நீண்ட வரலாறு இருக்கிறது.

என்றாலும் இந்தப் பிரதேசங்களில் இனவாத யுத்தம் இல்லை. முன்னர் இந்த நாட்டில் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் ஆகியோர் ஒற்றுமையாகவே வாழ்ந்து வந்திருக்கின்றனர். வெளிநாடுகள் தலையீட்டால்தான் இந்தக் குழப்ப நிலை இங்கு ஏற்பட்டுள்ளது.

தூதுவர்: அது எந்த நாடு?

மகாநாயக்கர்: எந்தெந்த நாடு என வகைப்படுத்திக் கூற இயலாது. இனவாதத்தை உருவாக்கிப் பிரச்சனைகளுக்குத் தூபம் இடுவோர் அரசியல் வாதிகளே. அதிகார ஆசையால் இனவாதத்தைப் பலரும் விதைக்கின்றனர்.

தூதுவர்: உலகில் பல்லின மக்கள் வாழும் நாடுகள் பல உண்டு. அத்தகைய நாடு கடைப்பிடிக்கும் அதிகாரப் பகிர்வு போன்று இங்கும் அவ்வாறான நடைமுறையை உருவாக்குவது பற்றி நீங்கள் என்ன கருதுகிறீர்கள்?

மகாநாயக்கர்: அது எனக்குச் சொந்தமான விடயம் அல்ல. அதற்குத் தாராளமாக அரசியல்வாதிகள் இருக்கின்றனர்.

இந்த உரையாடலின் போது பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் பேராசிரியர் அனுராதா செனவிரத்னவும் கலந்து கொண்டார்.

— கண்டியூர்க் காவலன்

# மாணவர்களின் புத்தகச் சுமை

பாடசாலைக்குப் படிக்கச் செல்லும் சிறார்கள் அளவுக்கு அதிகமாகவே பாரம் சுமக்கிறார்கள். இந்தியாவில் நடைபெற்ற ஒரு ஆய்வின் மூலம் இது தெரிய வந்திருக்கிறது. இலங்கையிலும் இந்த நிலைதான். அதிலும் இலங்கை மாணவர்கள் சுமக்கும் சுமை அதை விட அதிகம் என்று சொல்லலாம்.

ஒரு ஆண்டு காலத்தில் ஒரு பாடசாலை மாணவன் சுமக்கும் புத்தக எடை 6 ஆயிரம் கிலோ என்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

பள்ளிக்கூடங்களுக்குச் செல்லும் மாணவர்கள் சுமக்கும் புத்தக எடை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அந்த வகையில் ஒரு ஆண்டுக்கு ஒரு மாணவன் சுமக்கும் புத்தகச் சுமை எவ்வளவு என்பது பற்றி ஆய்வு நடத்தப்பட்டது.

இந்தியாவின் மத்தியப்பிரதேச மாநிலம் இந்தூரில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. ஒரு மாணவன் ஒரு ஆண்டுக்கு 6 ஆயிரம் கிலோ சுமப்பது தெரிய வந்தது. இது ஒரு லொறியில் ஏற்றப்படும் எடைக்குச் சமமாகும்.

ஒரு மாணவன் தினசரி 20 கிலோ எடையை 20 முதல் 40 நிமிட நேரம் வரை சுமப்பதும் தெரிய வந்துள்ளது.

அதிக சுமை காரணமாக 30சதவீத மாணவர்களுக்குத் தலைவலி ஏற்படுகிறது. 7 சதவீதத்தினருக்குக் கழுத்து வலி, 8 சதவீதத்தினருக்குத் தோள் வலி, 10 சதவீதத்தினருக்கு முதுகு மற்றும் இடுப்பு வலி ஏற்படுகின்றன.

30 கிலோ எடையுள்ள மாணவன் ஒருவன் 15 கிலோ புத்தகங்களைச் சுமப்பதும் தெரிய வந்தது. அரச பாடசாலைகளை விட தனியார் பாடசாலை மாணவர்களுக்கு அதிக புத்தகச்சுமை உள்ளது.

இந்தப் புத்தகச் சுமையைக் குறைக்கத் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாநில அரசுக்கும், மனிதஉரிமை கமிஷனுக்கும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# ஆனையிறவு படை நகர்வில் புலிகளது ஆர்ட்டிலறியின் பங்கு

கடந்த 16 ஆம் திகதி ஆனையிறவைக் கைப்பற்றும் நோக்கில் 'கினிஹிர' IX இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகியது.

பல முனைகளில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை புலிகளின் கடுமை யானதும் துல்லியமானதுமான குறுந்தூர, மத்திய தூர ஆர்ட்டிலறித் தாக்குதல்களினால் அதே தினத்தன்று மாலை 5 மணியளவில் நிறுத்தப்பட்டது. மறுநாள் காலை, இராணுவத்தினர் மேற்கொண்ட முன்னேற்ற முயற்சிகளும் முற்றாகத் தடைப்பட்டன.

ஆக மொத்தம் இரண்டு நாள் நடவடிக்கையின் பின் கினிஹிர IX அதன் நோக்கம் முற்றாக நிறைவேறாத நிலையில் புலிகளின் மோட்டார், ஆர்ட்டிலறி மற்றும் பல் குழல் ராக்கெட் தாக்குதல்களின் நெருக்கடியால் கைவிடப்பட்டது.

தாக்குதல்களின் முடிவில் பொன்னார், அவரைக்காடு பகுதிகளை உள்ளிட்ட சுமார் ஒரு சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பைத் தான் கைப்பற்றியதாக இராணுவம் அறிவித்தது.

கைப்பற்றப்பட்ட பகுதிகளில் இரண்டரை கிலோமீற்றர் நீளமான நிலப்பகுதியை யாழ்.- கண்டி (A9) பிரதான வழங்கல் பாதையில் படையினர் கைப்பற்றினர்.

புது வருடத்தில் படையினரால் மேற்கொள்ளப்பட்ட முதலாவது தாக்குதலில் அதிக எண்ணிக்கையான படை வீரர்கள் உயிர் இழக்கவும் காயமடையவும் நேர்ந்தது.

இராணுவத் தரப்புப் புள்ளிவிவரங்களின்படி 2 அதிகாரிகள் உட்பட 54 படையினர் கொல்லப்பட்டனர். 22 அதிகாரிகள் உட்பட 248 படைவீரர்கள் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களின் உண்மையான எண்ணிக்கை சற்று அதிகம் என்றே தகவலறிந்த வட்டாரங்களில் இருந்து அறியப்படுகிறது.

எவ்வாறாயினும் சுமார் 356 இற்கும் மேற்பட்ட படைவீரர்கள் யுத்த களத்திலிருந்து வெளியேற்றப்பட புலிகளின் ஆர்ட்டிலறி, மோட்டார் தாக்குதல்கள் வழி செய்திருக்கின்றன. புலிகளின் வன்னிச் செய்திகளின்படி நூற்றிற்கும் மேற்பட்ட படையினர் கொல்லப்பட்டும், 400 க்கும் மேற்பட்ட படைவீரர்கள் காயமடைந்தும் இருக்கிறார்கள்.

புலிகளின் தரப்பில் கொல்லப்பட்டோர்களின் எண்ணிக்கையை இராணுவம் 54 என்று குறிப்பிட்டது. ஆனால் புலிகள் தமது அறிக்கையொன்றில் தமது தரப்பில் 70 போராளிகள் கொல்லப்பட்டனர் என்று அறிவித்திருந்தனர்.

மொத்தத்தில் கினிஹிர IX நடவடிக்கை இராணுவத்தினர் எதிர்பார்த்த பலனைக் கொடுக்கவில்லை. இது படைத் தலைமைக்கு ஏமாற்றத்தை அளித்தது. புலிகள் தங்கள் யுத்த நிறுத்த காலத்தில் தம் மீதான தாக்குதல்களைச் சமாளித்தவிதம் ஆச்சரியமடைய வைத்தது.

பலவீனமடைந்த காரணத்தினால்தான் புலிகள் பின்வாங்குகின்றனர் என்றும் யுத்தநிறுத்த அறிவிப்பை விடுக்கிறார்கள் என்றும் கூறிவந்த இராணுவ மற்றும் அரசியல் தலைமைகளுக்கு யுத்த களத்தில் ஏற்பட்ட இழப்புக்கள் ஒரு பலமான அடியாக அமைந்தன.

கினிஹிர IX நடவடிக்கையில் ஏற்பட்ட இழப்புக்களையும் தோல்விகளையும் ஈடுசெய்ய அடுத்த இராணுவ நகர்வொன்றிற்காக திட்டங்களை கூட்டுப்படைத் தலைமையகம் தயார் செய்தது. இதனை முற்றிலும் ஒரு தந்திரோபாய நகர்வாக மேற்கொள்வதென்று திட்டமிடப்பட்டது.

இதன்படி, கினிஹிர IX இன் இரண்டாவது கட்ட நகர்வு கடந்த 22 ஆம் திகதி இரவு மேற்கொள்ளப்பட்டது. பல முனைகளில் இராணுவத்தின் கொமாண்டோ படையணிகள் இரவோடிரவாகப் புலிகளின் முன்னரங்கப் பாதுகாப்பு நிலைகளை நோக்கி நகர்ந்தன.

முகமாலைப் பகுதியில் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த புலிகளுக்கு இந்த நகர்வு பற்றி அதிகாலை வரை தெரியாமலேயே இருந்தது. அவர்கள் தம்மை சுதாகரித்துக்கொண்டு எதிர்த்தாக்குதலில் ஈடுபட முன்னர் படையினர் முகமாலையைப் பல முனைகளில் சுற்றிவளைத்திருந்தனர்.

நள்ளிரவிற்கு சற்று முன்னராக மேற்கொள்ளப்பட்ட இந்த நகர்வு அடுத்த 4 மணி நேரத்தில் முகமாலையில் அமைந்திருக்கும் புலிகளின் முன்னணிக் காவல் நிலையையும் தாண்டி, சுமார் 2 கிலோமீற்றர் தூரம் வரை சென்றிருந்தது.

முன்னரங்கக் காவல் நிலையங்களில் காவலில் நின்றிருந்த புலிகளில் 20 பேர் கொல்லப்பட்டனர் என்று இராணுவம் தெரிவித்தது. அவர்களில் 5 பேரின் சடலங்களைக் கைப்பற்றியதாகவும் அறிவித்தது.

நிலைமையை உணர்ந்து கொண்ட புலிகள் தமது மோட்டார், ஆர்ட்டிலறித் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தினர். இருதரப்பினரும் கடுமையான தாக்குதல்களில் ஈடுபட்டனர்.

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் விடுத்த அறிக்கை இந்தப் படை நடவடிக்கை மூலம் கடந்த நவம்பர் மாதம் 26ஆம் திகதி ஓயாத அலைகள் 4 மூலம் புலிகள் கைப்பற்றியிருந்த அனைத்துப் பகுதிகளையும் படையினர் கைப்பற்றி விட்டனர். அத்துடன் புலிகளின் ஓயாத அலைகள் 4 தற்போது முற்றாகத் தோல்வி கண்டுள்ளது. 206 புலிகள் கொல்லப்பட்டும், மேலும் 288 பேர் காயமடைந்தும்




உள்ளனர். இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உண்மையிலேயே ஓயாத அலைகள் 4 அழித்தொழிப்பு நடவடிக்கையைப் புலிகள் செப்டெம்பர் 26ஆம் திகதியன்றே ஆரம்பித்தனர். அன்றுதான் நீர் கூட அருந்தாமல் உண்ணாவிரதம் இரு[illegible] உயிர் நீத்த புலிகளின் முன்னாள் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் லெப். கேணல் திலீபனின் 13ஆவது சிரார்த்த தினம். இழந்த போராளிகளின் நினைவாகப் படையினரின் நிலைகள் மீது தாக்குதல் நடத்தி அழிவுகளை உண்டு பண்ணுவதன் மூலம் தமது தோழர்களை நினைவு கூருவது புலிகளின் பாணியாக இருந்து வருகிறது. இதன் ஒரு பகுதியாகவே யாழ். கோட்டை மீதும் புலிகள் தாக்குதல் நடத்தி அதனை வெற்றி கொண்டனர்.



முகமாலை பகுதியில் படையினர் காவல்

கடந்த செப்டெம்பர் 26ஆம் திகதி அதிகாலை இராணுவத்தினர் கினிஹிர II இராணுவ நடவடிக்கை மூலம் வலிகாமத்திலிருந்து புத்தூர் கனகம்புளியடிச் சந்தியினூடாக கினிஹிர I நடவடிக்கை மூலம் கைப்பற்றப்பட்ட சாவகச்சேரி நகரத்தில் நிலை கொண்டுள்ள படையினருக்கான சுமுகமான வழங்கற் பாதையைத் திறந்தனர்.

அதுவரை காலமும், தற்காலிக கிறவல் பாதையூடாகவே அவர்களிற்கு வலிகாமத்தில் இருந்து வழங்கல் மேற்கொள்ளப்பட்டு வந்தது.

ஆனாலும் பருவப் பெயர்ச்சி மழை ஆரம்பித்து இருந்ததால் எந்நேரத்திலும் அந்தத் தற்காலிகக் கிறவல் பாதையை வெள்ளம் ஆக்கிரமிக்கலாம் என்பதை நன்குணர்ந்த இராணுவம் இந்த நகர்வை மேற்கொண்டிருந்தது.

இதற்கு முதல் இராணுவம் பல தடவைகள் இப்பாதையைக் கைப்பற்ற முனைந்த போதிலும் புலிகளின் தாக்குதல் மற்றும் கொமாண்டோ படையினரின் வலுவான எதிர்த்தாக்குதலால் அவை கைவிடப்பட்டன.

அசகாயசூரன் என்று சிங்கள மக்களால் கருதப்படும் மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா கூட இந்தப் பாதையைக் கைப்பற்றுவதற்குப் பலதடவை முயன்றார். அவராலும் முடியவில்லை.

ஆனால் செம்டெம்பர் 26ஆம் திகதி ஆரம்பமான கினிஹிர II மூலமாகப் படையினர் இப்பகுதியைக் கைப்பற்ற முயன்றபோது புலிகள் அடையாள எதிர்ப்பை மட்டுமே காட்டி விட்டுப் பின்வாங்கி விட்டனர்.

அதிகாலையில் ஆரம்பமான படைநகர்வு காலை 9 மணியளவில் மட்டுவில் வடக்கையும் சரசாலை மேற்கையும் கனகம்புளியடிச் சந்தியுடன் இணைத்ததுடன் முடிவுற்றது. 13 படையினர் கொல்லப்பட 45 படைவீரர்கள் பலத்த காயங்களிற்கு உள்ளானார்கள்.

கனகம்புளியடிச் சந்தியைக் கைப்பற்றிய வெற்றிக் களிப்பில் மூழ்கியிருந்த படைத்துறைக்குப் புலிகளின் ஓயாத அலைகள் 4 தாக்குதலை ஆரம்பமாகப் போவது பற்றி எதுவும் தெரிந்திருக்கவில்லை.

சரியாக அதே தினத்தன்று மாலை 4 மணியளவில் புலிகள் ஓயாத அலைகள் 4 கிளாலி, நாகர்கோவில், முகமாலை இராணுவக் கடற்படைக் கூட்டுமுகாம் மீது கட்டவிழ்த்து விட்டனர்.

ஆறு முனைகளில் "மனித அலை" (Human wave) வடிவில் புலிகளின் விசேட தாக்குதல் பிரிவுக்குள் வரும் கொமான்டோக்கள் தாக்குதலில் ஈடுபட்டனர். இதன் மூலம் முகமாலைப் பகுதியில் அமைந்திருந்த நூற்றுக்கு மேற்பட்ட இராணுவ காவல் நிலையங்களையும், மினிமுகாம்களையும் துவம்சம் செய்து அப்பகுதியைத் தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர். 150இற்கும் மேற்பட்ட படை வீரர்கள் இத்தாக்குதலில் கொல்லப்பட்டனர்.

ஆனால் இவற்றையெல்லாம் தவற விட்டுவிட்டு இப்போது மட்டும் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் விடுதலைப்புலிகள் நவம்பர் 26ஆம் திகதி ஓயாத அலைகள் 4 நடவடிக்கை ஆரம்பித்ததாக புதிய வரலாறு படைக்கப் பார்க்கிறது.

விடுதலைப் புலிகள் ஓயாத அலைகள் 4இல் 206 போராளிகளை இழந்தனர். 288 பேர் காயமடைந்தனர்.

படையினர் ஓயாத அலைகள் 4 நடவடிக்கை மூலமும் மொத்தமாக 200க்கு மேற்பட்ட துருப்பினரை இழந்துள்ளனர். அத்துடன் 750 படைவீரர்கள் காயமடைந்துள்ளனர்.

எப்படியிருப்பினும் படையினரின் சத்தமில்லாத இரவு நகர்வு புலிகளை ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. கினிஹிர IX இன் இரண்டாம் கட்ட நகர்வின் மூலம் யாழ் - கண்டி A9 வீதியில் பளையை நோக்கிய பகுதியில் இரண்டரை கிலோமீற்றர் தூரத்தையும் முகாமாலையை உள்ளடக்கியதாகச் சுமார் 8சதுர கி.மீ பிரதேசத்தையும் படைகள் கைப்பற்றியதாகப் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

ஆனாலும் புலி களின் கடுமையான மோட்டார், ஆர்ட்டிலறித்தாக்குதல்களினால் படை நடவடிக்கைகள் தற்காலிகமாகத் தடைப்பட்டிருக்கின்றன.

இதேவேளை கடந்த செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணியளவில் முகமாலையில் புதிதாகக் கைப்பற்றிய பிரதேசங்களில் இருந்தும் கண்ணி வெடிகள், மிதி வெடிகள் ஆகியவற்றைக் கண்டுபிடித்துச் செயலிழக்க வைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த படை அணியொன்று புலிகளின் பொறிக் கண்ணி வெடி ஒன்றில் (Booby - trapped land mine) சிக்கியது. இதில் 3 அதிகாரிகளும் 8 படைவீரர்களும் அதே இடத்தில் கொல்லப்பட்டனர். மேலும் ஒரு அதிகாரி உட்பட ஆறு படையினர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இந்நிலையில் தான் ஜனவரி 23 அன்று காலை புலிகளின் வன்னி நடவடிக்கைத் தலைமைச் செயலகம் புலிகளால் அனுஷ்டிக்கப்பட்டு வரும் ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தம் மேலும் ஒரு மாதத்தால் நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவித்தது.

ஆனையிறவைச் சென்றடைய 20 கி.மீ தூரமே மீதமுள்ள நிலையில் புலிகளின் யுத்த நிறுத்த காலத்தை இராணுவ நடவடிக்கை மூலம் புலிகளைப் பலவீனப் படுத்த அரசு முற்படுமா, அல்லது நோர்வேயின் சமாதான முயற்சிக்கு சாதகமான முறையில் நடந்து கொள்ளுமா?


## திருமண சேவை

எமது திருமணச் சேவையினால் விதவைப் பெண்கள், சீதனம் கொடுத்துத் திருமணம் செய்ய வசதியில்லாதபடியால் திருமணம் செய்யாமல் இருப்பவர்கள், பெற்றோர் இல்லாத ஏழைப்பெண்கள்.

கிறிஸ்தவர்கள், இந்து சமயத்தவர்கள், முஸ்லிம் மதத்தவர்கள் ஆகியோருக்கு திருமணம் செய்வதற்கு உதவிகள் செய்து தர முடியும்.

C/O. Thurai Trade Centre,
3A, Jeyawardana Mawatha,Galle Road, Dehiwela .
Tel : 074-200458, 074-204534 Fax. 0094-74200458

சுடர் ஒளி

28 ஜனவரி, 2001

36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 501409/ 599834

# யுத்த நிறுத்தம் பற்றி யுத்தம்

அரசாங்கப் படைகளின் மூர்க்கத்தனமான தாக்குதல்களுக்கு முகம் கொடுத்துக் கொண்டே தமிழீழ விடுதலைப் புலிகள் நத்தாரை யொட்டி கடந்த டிசம்பர் 24முதல் இம்மாதம் 24ஆம் திகதி வரை யுத்த நிறுத்தத்தை அனுஷ்டித்து வந்தார்கள்.

அந்த ஒருதலைப்பட்ச யுத்த நிறுத்தத்தைப் புலிகள் இப்போது இன்னும் ஒரு மாதத்துக்கு நீடித்திருக்கிறார்கள்.

எதற்கு?

- சமாதானம் வேண்டி நிற்கும் தமிழினத்தின் அபிலாஷையைப் பூர்த்தி செய்வதற்கு.
- நெருக்கடிக்குச் சமாதான வழிகள் மூலம் தீர்வுகாணப்பட வேண்டும் என்று சர்வ தேச சமூகம் விரும்புகிறது. எனவே சர்வ தேச சமூகத்தின் விருப்பத்தை நிறை வேற்றுவதற்கு.
- சமாதானத்தின் மீது புலிகள் தமக்குள்ள உண்மையான, இதய சுத்தியான அக்கறையையும், நெருக்கடியைச் சமாதான வழியில் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்பதில் தமக்குள்ள பற்றுறுதியையும் காட்டுவதற்கு.
- பேச்சுவார்த்தை நடப்பதற்கு ஏற்ற சமாதானமும் வழமை நிலையும் கொண்ட சமூக சூழ்நிலை ஏற்பட வழி செய்வதற்கு.

இவற்றிற்காகத்தான் யுத்த நிறுத்த நீடிப்பு என்று புலிகள் அறிவித்திருக்கிறார்கள்.

புலிகளின் இந்த யுத்த நிறுத்த நீடிப்பைத் தமிழ் மக்கள் வரவேற்கிறார்கள்.

பதினொரு தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு வரவேற்றிருக்கிறது.

சர்வதேச சமூகம் வரவேற்றிருக்கிறது.

அரசாங்கத்தையும், புலிகளையும் பேச்சுவார்த்தையில் ஈடுபட வைப்பதற்கு அனுசரணை வழங்க இணங்கியுள்ள நோர்வே நாட்டின் விசேஷ தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் வரவேற்றிருக்கிறார்.

ஆனால் மகா சங்கத்தினரும் பேரினவாதிகளும் வரவேற்கவில்லை.

அவர்கள் வழிநின்று அரசாங்கமும் வரவேற்கவில்லை. மாறாக யுத்த நிறுத்தத்தைக் கொச்சைப்படுத்துகிறது.

புலிகளின் யுத்த நிறுத்தத்துக்கு எதிர்த் தரப்பில் கற்பிக்கப்படும் காரணங்கள் எவை?

- புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத இயக்கம் என்று பிரிட்டிஷ் அரசு தடை செய்வதில் கவனம் செலுத்திவருகிறது.
- 'பிரபாகரன்' பொட்டு அம்மான் போன்றவர்களைக் கொலைக் குற்றவாளிகள் என்று முத்திரை குத்தி அவர்களைத் தேடப்படுவோர் பட்டியலில் சேர்த்திருக்கிறது சர்வதேசப் பொலிஸ் நிறுவனம்.
- புலிகள் தாம் சமாதானப் பிரியர்கள் என்றுசர்வதேச சமூகத்துக்குக் காட்டி அதன் ஆதரவைப் பெறப் பார்க்கிறார்கள்.
- புலிகள் இப்போது போரில் அடுத்தடுத்து தோல்வி கண்டு வருவதால் ஆட்களையும் ஆயுதங்களையும் இழந்து பலவீனம் அடைந்து இருக்கிறார்கள். ஆயுதப் படைகளுக்கு முன்னால் இப்போது அவர்களால் தாக்குப் பிடித்து நிற்க முடியவில்லை.
- தங்களைப் பலப்படுத்திக்கொள்வதற்கு அவர்களுக்குக் கால அவகாசம் தேவைப்படுகிறது. அதனாலேயே யுத்த நிறுத்தம்.

இவ்வாறாகக் கூறி அரசு தொடர்ந்து போர் செய்வதிலேயே முனைப்பாக இருக்கிறது.

யுத்த நிறுத்தம் பற்றியும் இன்று தனியாக ஒரு யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது.

புலிகளிடம் தாம் இழந்த ஆனையிறவை மீட்கும் வரை ஓயப் போவதில்லை என்று குறிப்பை அரசு காட்டுகிறது.

புலிகள் யுத்த நிறுத்தத்தை அனுஷ்டித்து வந்தாலும் தற்பாதுகாப்பு நடவடிக்கைகளில் தீவிரமாகவே இருக்கிறார்கள். அதிலிருந்து அவர்களின் பலம் தெரிகிறது.

அரச படைகள் காலம் கடந்தேனும் ஆனையிறவைக் கைப்பற்ற முடிந்தால் அதன் பிறகு அரசு ஒருவேளை போர் நிறுத்தம் செய்து விட்டுப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்வரலாம்.

அதுவரை மக்களின் துன்ப துயரங்கள் தீரவழியில்லை. நாடு எல்லா வழிகளிலும் நலிவடைவதைத் தவிர்க்கவும் மார்க்கம் இருப்பதாகத் தெரியவில்லை. அழிவுதான்!

"யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே!"

# சிறிமா வழியில் பேரியல் இன்று முதல் தேச சேவை

இலங்கையின் முதலாவது முஸ்லிம் பெண் அமைச்சர் பேரியல் அஷ்ரப், வீட்டுக் கடமையை முடித்துக் கொண்டு நாட்டுச் சேவைக்காகப் புறப்பட்டுவிட்டார்.

முன்னாள் அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் தேசிய ஐக்கிய முன்னணியின் ஸ்தாபகரும் தலைவருமான எம்.எச்.எம். அஷ்ரப்பின் பாரியார் தான் பேரியல் அஷ்ரப்.

அஷ்ரப் கடந்த வருடம் அக்டோபர் 16 ஆம் திகதி ஹெலி விபத்தில் அகால மரணம் அடைந்ததை அடுத்து பேரியல் அஷ்ரப் இஸ்லாமிய சமய ஆசாரப்படி கடந்த 4 மாதங்கள் 10 நாட்களாக "இத்தா" (துக்கம்) அனுஷ்டித்து வந்தார்.



சிறிமா

'இத்தா' அனுஷ்டித்த காலத்திலேயே அம்பாறை மாவட்ட மக்கள் அஷ்ரப்பின் நினைவாகப் பேரியலைத் தமது நாடாளுமன்றப் பிரதிநிதியாகத் தெரிவு செய்து கொண்டார்கள்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் பேரியலை விட்டுவிடவில்லை. தன்னுடைய அமைச்சரவையிலே கிழக்கு மாகாண அபிவிருத்தி, புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் கிராமிய வீடமைப்புக்குப் பொறுப்பான அமைச்சராக்கிக் கொண்டார்.

எம்.பியும் அமைச்சருமான பேரியல் அஷ்ரப் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இணைத் தலைவர்கள் இருவரில் ஒருவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

இந்தப் பொறுப்புக்களை எல்லாம் சுமந்து கொண்டிருந்தபோதும் சமயாசாரத்தில் சிறிதும் தவறாமல் வீட்டில் இத்தா அனுஷ்டித்து விட்டு இப்போது விரிவாக நாட்டுப்பணியாற்றுவதற்கு வெளியே வந்துவிட்டார்.

சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கும் பேரியல் அஷ்ரப்புக்கும் பல விடயங்களில் ஒருமைப்பாடு காணப்படுகிறது.

சிறிமாவோ பண்டாரநாயக்கா இலங்கையின் அத்துடன் உலகின் முதலாவது பெண் பிரதமர்.

பேரியல் இலங்கையின் முதலாவது பெண் முஸ்லிம் அமைச்சர்.

இந்தியாவைப் போல் இங்கே சிறுபான்மை இனத்தவரான ஒரு தமிழரோ முஸ்லிமோ பிரதமராகவோ ஜனாதிபதியாகவோ வரக்கூடிய வாய்ப்பு இல்லை. ஆகக் கூடுதலாக அமைச்சராகவோ, எதிர்க்கட்சித் தலைவராகவோ (அதுவும் முன்னர் இப்போது அல்ல) அல்லது சபாநாயகராகவோ தான் வரமுடியும்.



பேரியல்

சிறிமாவின் கணவர் முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கா பௌத்த பிக்கு ஒருவரால் அநியாயமாகச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

பேரியலின் கணவரான அஷ்ரப்பும் ஹெலி விபத்தில் அகால மரணமானார்.

பண்டாரநாயக்காவின் மரணத்துக்குப் பின்னர் சிறிமா, 'வேண்டாம், வேண்டாம்' என்று மறுத்தும் கூட மிகவும் வற்புறுத்திக் கேட்டு அவர் அரசியலுக்கு இழுத்து வரப்பட்டார்.

அதுதான் பேரியலுக்கும் நடந்தது. கணவரின் மரணத்துக்குப் பின்னர் அவரும் நினையாப் பிரகாரம் அரசியலுக்குக் கொண்டுவரப்பட்டார்.

சிறிமா இந்த நாட்டு அரசியலில் சாதனை படைத்தவர். சர்வதேச அரசியலிலும் முத்திரை பதித்தவர்.

அப்படியான பெருமைகளை அடைவதற்கு உரிய அனைத்து தகுதிகளையும் திறமையையும் உடையவர் பேரியல்.

இத்தா முடிந்து வெளியே வந்ததும் அம்பாறை மாவட்டத்துக்குச் சென்று எல்லோருக்கும் நன்றி தெரிவிப்பதை முதல் கடமையாகக் கொண்டிருக்கிறார்.

அமைச்சு அலுவலகத்துக்குச் சென்று பணியாற்றத் தொடங்கியதும் நாட்டின் எல்லா மாவட்டங்களுக்கும் அடிக்கடி விஜயம் செய்ய இருக்கிறார்.

மக்களின் குறைபாடுகளைக் கேட்டறிந்து உடனுக்குடன் தகுந்த நடவடிக்கைகளை எடுக்கத் திட்டமிட்டு இருக்கிறார்.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு சுய தொழில் வாய்ப்பு.

விதவைகளுக்கும் மற்றும் பெண்களுக்கும் குடிசைக் கைத்தொழில்கள்.

நெசவுத் துறை நவீன முறையில் அபிவிருத்தி.

விவசாயம், மீன்பிடித் தொழில்களில் புதுமுறைகள்.

கிராமங்கள் தோறும் சிறந்த வீடமைப்புத் திட்டங்கள்.

பிரதேச அலுவலகத்துக்கு மாதம் ஒருமுறை சென்று நடமாடும் சேவை.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக அஷ்ரப்பின் கனவுகளை நிறைவேற்றுவதே தனது தலையாய கடமையாகக் கொண்டிருக்கிறார் பேரியல்.

தென்கிழக்கு பல்கலைக்கழகம், ஒலுவில் துறைமுகம், கரையோர மாவட்டம் அமைப்பு இவை தொடர்பான பணிகளை முன்னெடுத்துச் சென்று குறுகிய காலத்தில் வெற்றி காண்பதில் உறுதியாக இருக்கிறார் பேரியல் அஷ்ரப்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய ஐக்கிய முன்னணி ஆகியவை அஷ்ரப்பின் காலத்தில் எப்படிக் கொடி கட்டிப் பறந்தனவோ அந்த நிலைக்கு அவற்றை மீண்டும் கொண்டு வரமுடியும் என்று பேரியல் அஷ்ரப் திடமாக நம்புகிறார்.

# வன்னிப் பயணத்துக்கு விசேஷ ஏற்பாடு

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னியிலிருந்து வவுனியாவுக்கு வந்தவர்கள் வன்னிக்குத் திரும்பிச் செல்வதில் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள்.

பலர் வன்னிக்குச் செல்லும் வழியில் பிரமனாளங் குளத்தை அடைந்ததும் பல்வேறு காரணங்களால் அங்கிருந்து வவுனியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டு விடுகிறார்கள். அவர்கள் வவுனியாவில் பலநாட்கள் தங்கியிருந்து பரிதவிக்கிறார்கள்.

இவர்கள் கூறிய சோகக் கதை 11ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

வன்னி செல்வதற்கு மூவாயிரத்துக்கு மேற்பட்டோர் இப்போது வவுனியாவில் காத்திருக்கிறார்கள்.

இவர்களை வன்னிக்கு அனுப்பி வைக்க அரச அதிபர் கே. கணேஷும் படையதிகாரிகளும் முயற்சி செய்து, சர்வதேச செஞ்சிலுவை சங்கத்துடன் பேசி புலிகளும் அதற்கு இணங்கிய நிலையில் விசேஷ ஏற்பாடு செய்துள்ளனர்.

இதன்படி இனிமேல் வழமையைபோல் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் மட்டுமல்லாமல் மேலதிகமாக சனிக்கிழமைகளிலும் பயணிகளை வவுனியாவிலிருந்து வன்னிக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமைகளில் பயணிகள் வவுனியாவிலிருந்து அனுப்பப்படுவார்களே தவிர புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள வன்னியிலிருந்து வவுனியாவிற்கு எவரும் வர அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

கடந்த 20ஆம் திகதி சனிக்கிழமை 700 பயணிகளை அனுப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. ஆயினும் போதிய முன்னறிவித்தல் இல்லாத காரணத்தால் 300 பயணிகள் மட்டுமே அனுப்பப்பட்டனர்.

வவுனியாவில் தங்கியுள்ள 3 ஆயிரத்து 500 பயணிகளும் அனுப்பி வைக்கப்படும் வரை சனிக்கிழமைகளில் பயணிகளை அனுப்பும் நடவடிக்கையைத் தொடர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதை வவுனியா அரச அதிபர் கே.கணேஷ் 'சுடர்ஒளி'க்குத் தெரிவித்தார்.

பிரமனாளங்குளம் பகுதியில் சோதனை நடவடிக்கைகளால் ஏற்படும் தாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு வவுனியா செயலக வளவில் வைத்தே பயணிகளின் பொதிகளைச் சோதனையிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா அரச அதிபர் படை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி இதற்கான இணக்கத்தைப் பெற்றிருக்கிறார்.

படையினரும் செயலகத்திற்கு வந்து சோதனை நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்வதெனப் பார்வையிட்டுச் சென்றிருக்கின்றனர்.

- வன்னி மைந்தன்

## சொல்ஹெய்ம் திங்கள் வருகிறார்



*நோர்வேயின் விசேஷ தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் திங்கட்கிழமை கொழும்பு வருகிறார்.*

*அவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுடன் இம்முறை காத்திரமான பேச்சுவார்த்தை நடத்த இருக்கிறார்.*

*யுத்த நிறுத்தம் செய்து புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு அவரின் சம்மதத்தை இம்முறை எப்படியும் பெற்று விடலாம் என்று சொல்ஹெய்ம் நம்புகிறார்.*

*அவர் லண்டனில் புலிகளின் ஆலோசகர் அன்டன் பாலசிங்கத்தைச் சந்தித்துவிட்டே கொழும்பு வருகிறார்.*

# 'சுடர் ஒளி' செய்திக்கு டக்ளஸ் விளக்கம்

'சுடர் ஒளி'ச் செய்திக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆட்சேபனை தெரிவித்து விளக்கமும் தந்திருக்கிறார்.

"மட்டக்களப்பு விபுலானந்தர் இசை நடனக் கல்லூரி கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்துடன் இணைப்பு! அமைச்சர் டக்ளஸின் அறிவிப்பு புஸ்வாணம்!" என்ற தலைப்பில் கடந்த 14 ஆம் திகதி 'சுடர் ஒளி'யில் வெளிவந்த செய்திக்கட்டுரைக்கே அமைச்சர் தேவானந்தா விளக்கம் அளித்திருக்கிறார்.

செய்தி உண்மைக்கு மாறானதும் விஷமத்தனமானதும் என்று ஆட்சேபனை தெரிவித்தே விளக்கம் தந்திருக்கிறார். அவருடைய விளக்கத்தை அமைச்சர் டக்ளஸின் தகவல் தொடர்புச் செயலாளர் 'சுடர்ஒளி'க்கு அனுப்பியிருக்கிறார். இணைப்புப் பற்றி விளக்கத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது :-

'மட்டக்களப்பு விபுலானந்தர் இசை நடனக்கல்லூரி கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது விடயம் தொடர்பாக வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு புனரமைப்பு, வடக்கு கிழக்கு தமிழ் விவகார இந்து கலாசார அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா கல்வி அமைச்சர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினர் உட்பட உயரதிகாரிகள் பலருடனும் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளை அடுத்து இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு இணைப்பு மேற்கொள்வதற்கான திட்ட அமுலாக்கல் அமைச்சின் ஒப்புதல் தற்போது நாடப்பட்டுள்ளது.

எனினும் இத்தகைய பணிகள் இரவோடிரவாகவோ, ஒரு சில நாட்களுக்குள்ளாகவோ, எடுத்த எடுப்பிலோ நிறைவேற்றி முடிக்கப்படக் கூடியவையல்ல.

இதனால் இசை நடனக் கல்லூரியின் செயற்பாடுகளில் எதுவித தடங்கல்களும், தாமதங்களும் இல்லாமல் தொடரப்படுகின்றன. இக்கல்லூரிக்கு மாணவர்களைச் சேர்க்கும் விளம்பரமும் இவ்வகையிலேயே கோரப்பட்டுள்ளது' இப்படி அமைச்சரின் தகவல் தொடர்புச் செயலாளர் தெரிவித்திருக்கிறார்.

# இராணுவ பலத்தால் தமிழரின் எழுச்சியை அடக்க முடியாது

## பல்கலைக்கழக மாணவர்களின் பொங்கு தமிழ் நிகழ்வு நிரூபித்து விட்டது

பல்கலைக்கழக மாணவர்கள் சாதனை படைத்து விட்டார்கள்.

போர் நிறுத்தத்துக்காக, சமாதானத்துக்காக, பிரச்சினைத் தீர்வுக்காக, தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைக்காக என்ன செய்ய வேண்டும் என்று நினைத்தார்களோ அதை வெற்றிகரமாகச் செய்துமுடித்துவிட்டார்கள்.

யாழ் பல்கலைக்கழக உபவேந்தர், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், கல்வி சாரா ஊழியர்கள், மனித நேய



பொங்கு தமிழ் நிகழ்வில் பதாகைகள் சகிதம் கிழக்கு பல்கலை மாணவிகள்.
படங்கள்: சத்துருக்கன்

அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள் மதகுருமார் மற்றும் தமிழ்ப்பொதுமக்கள் ஆகிய அனைத்து தரப்பினரின் பூரண ஒத்துழைப்பு பல்கலைக்கழக மாணவர்களுக்குக் கிடைத்தது.

அதனால் பாதுகாப்புப் படையினரின் தடையையும் மீறி அனைவரும் வியக்கும் வகையில் வரலாறு படைத்துவிட்டார்கள்.

எங்குமுள்ள தமிழர்கள் எண்ணிப் பெருமைப்படும் வகையில் கடந்த 17ஆம் திகதி பொங்கு தமிழ் நிகழ்வைப் பல்கலைக்கழக மாணவர்கள் வெகுசிறப்பாக நடத்தியதையே இங்கு குறிப்பிடுகின்றோம்.

இந்த நிகழ்வைத் தமிழ் மக்களின் நேரடிப் பங்களிப்போடு வீதிக்கு வந்து விமரிசையாக நடத்தப் பல்கலைக்கழக மாணவர்கள் ஏற்பாடு செய்தார்கள்.

ஆனால் யாழ்ப்பாணத்தில் குவிந்திருக்கும் இராணுவம் அதற்கு அனுமதி அளிக்க முடியாது என்று அறிவித்தது. நிகழ்வில் பொதுமக்கள் பங்குபற்றுவது அவர்களுக்கு ஆபத்தாக முடியும் என்று பயங்காட்டவும் செய்தது.

பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சுவதில்லை.

அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் நிகழ்வில் கலந்துகொள்ள வேண்டும் என்று தமிழ்மக்கள் துடிப்பாக இருந்தார்கள்.

நிகழ்ச்சி நாள் நெருங்க நெருங்கத் தமிழ்மக்களின் உணர்ச்சி வேகமும் உரிமை வேட்கையும் அதிகரிக்கத் தொடங்கின.

படையினர் மற்றும் பொலிஸார் ஆகியோரின் பாதுகாப்பு நடவடிக்கைகளும் தீவிரமடைந்தன.

பல்லைக்கழகத்தைச் சுற்றி இரும்பு வேலி போடப்பட்டது போல் பாதுகாப்புப் படையினர் காவலுக்கு நிறுத்தப்பட்டனர். பல்கலைக்கழக நுழைவாயில்களில் முட்கம்பித் தடுப்புகள் வேறு.

தமிழ்மக்களின் உணர்ச்சி அலை ஒரு புறம். மறுபுறத்தில் படையினரின் பிடிவாதமான தடுப்பு அரண்.

பல்கலைக்கழக மாணவர்கள் நிகழ்வு நடக்கவேண்டும் என்பதில் கரிசனையாக இருந்தார்கள். பொதுமக்கள் கலந்துகொண்டால் படையினரால் அசம்பாவிதங்கள் ஏற்படக்கூடும். அது பொதுமக்களுக்குக் கஷ்டத்தைக் கொடுக்கும். அதேவேளை நிகழ்வு நடப்பதற்கு குந்தகமாகவும் அமையலாம்.

எனவே பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் நிகழ்வை நடத்தி முடிக்கவும் வேண்டி, பொதுமக்களை நிகழ்வில் கலந்துகொள்ள வரவேண்டாம் என்று பல்கலைக்கழக மாணவர்கள் கடைசி நேரத்தில் வேண்டுகோள் விடுத்தனர். வீடுகளில் இருந்தவாறு சுயநிர்ணய உணர்வு அலைகளை வெளிப்படுத்துங்கள். பிரார்த்தனையில் ஈடுபடுங்கள் என்றும் கேட்டுக்கொண்டனர்.

வயதான பொதுமக்கள் அப்படியே நடந்துகொண்டார்கள். ஆனால் இளம் இரத்தங்கள் கேட்கவில்லை.

படையினரின் கட்டுக்காவல் பலமாக இருக்க பல்லைக்கழக வளாகத்துக்குள் மூலை முடுக்குச் சுவர்களால் ஏறிப்பாய்ந்தும் வேறு விதங்களிலும் உள்ளே நுழைந்துவிட்டார்கள்.

இத்தனைக்கும் உள்ளே செல்ல நேர்வழியாகச் சென்ற மதகுருமார்கள் கூடத் திருப்பி அனுப்பப்பட்டார்கள்.

பல்கலைக்கழக மாணவர்களும் அங்கே தொழில் செய்பவர்களும் மட்டும் கடும் சோதனையின் பின் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டார்கள்.

17ஆம் திகதி நண்பகல் ஐயாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் கூடியிருக்க பொங்குதமிழ் நிகழ்வு ஆரம்பமானது. பல்கலைக்கழக உபவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை ஆசியுரை வழங்கி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

வெளியே நின்ற படையினர் நிகழ்வுகளைப் படம் எடுக்க முனைந்தார்கள். முடியவில்லை. பல்கலைக்கழக மாணவர்கள் விஷயமறிந்து மறைப்புப் போட்டுவிட்டார்கள்.

யாழ்குடாநாடு ஒரு திறந்த வெளிச் சிறைச்சாலை என்று காட்ட பொங்கு தமிழ் நிகழ்வு நடந்த இடத்திலே ஊர்தி ஒன்று வைக்கப்பட்டு இருந்தது. அதில் சங்கிலிகள் பிணைக்கப்பட்டு இருந்தன. கம்பி வேலியும் இருந்தது. மொத்தத்தில் ஒரு திறந்த வெளிச் சிறைச்சாலை எப்படி இருக்குமோ அப்படித்தான் அந்த ஊர்தி இருந்தது.

பொங்குதமிழ் நிகழ்வின் இறுதியில் வெளியிடப்பட்ட பிரகடனம் நிகழ்வின் நோக்கத்தைத் தெளிவாக எடுத்துக்காட்டுவதாக இருந்தது.

பிரதான வாசகங்கள் இவைதாம்:-

இந்தப் பொழுதில் இங்கு திரண்டிருக்கும் எங்களின் ஆத்மாவின் குரலை ஒரே சுருதியில் வெளிப்படுத்துகிறோம்.

அரசு இந்தக் கொடிய யுத்தத்தினை நிறுத்த வேண்டும்.

அர்த்தமும் நீதியுமான பேச்சுவார்த்தையினை அரசு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் உடனே ஆரம்பிக்க வேண்டும்.

இதன் மூலம் தமிழ் மக்களின் நீண்டகால ஆத்ம வெளிப்பாட்டினை, பெரு விருப்பினை, அபிலாஷைகளைப் பிரதிபலிக்கும் தமிழ்த் தேசியம், மரபுவழித் தாயகம், சுயநிர்ணய உரிமை - இவற்றினை அங்கீகரிக்கும் நீதியானதோர் அரசியல் தீர்வினை நாம் காண வேண்டும்.

*சர்வதேச சமூகமே! நீண்டகால அடக்கு முறைக்குள் பாய்ந்து உறைந்து போயுள்ள எமது மக்களின் உண்மையான மன உணர்வுகளை. அபிலாஷைகளை உரியவாறு நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.*

நீதியான, அமைதியான எமது வாழ்வுக்காக உங்கள் மனச்சாட்சி உரியவாறு பேச வேண்டும்.

இப்படித்தான் அந்தப் பிரகடனம் அமைந்து இருந்தது.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்காகக் குரல் கொடுப்பது யாழ் பல்கலைக்கழகத்துக்குப் புதிய விஷயம் அல்ல. அங்கே உயர் கல்வி கற்கும் மாணவர்கள் பலர் இந்த விஷயத்தில் கைதேர்ந்தவர்கள்.

காலஞ்சென்ற சிறிமா அம்மையாரின் ஆட்சிக்காலத்தில் பல்கலைக்கழகப் பிரவேசத்தோடு பின்னிப் பிணைந்த தரப்படுத்தல் கொண்டு வரப்பட்டது. அது தான் தமிழ் மாணவர்களிடையே முதன்முதலில் அமைதியின்மையை ஏற்படுத்தி அவர்களைத் தீவிரவாத சிந்தனைக்குத் திருப்பியது.

தமிழ் மாணவர் பேரவை, இளைஞர் பேரவை ஆகியவை தமிழ் இளைஞர்களிடையே போராட்ட உணர்வை ஏற்படுத்தி வளர்த்தன. எனவே யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தமிழ் உணர்வு, உரிமை வேட்கை, போராட்ட முனைப்பு - இவையெல்லாம் பழைய பாடங்கள். சோடை போக மாட்டார்கள்.

தமிழ் மக்கள் என்ன குறைந்தவர்களா? 17ஆம் திகதி யாழ் பல்கலைக்கழக மைதானத்தில் பொங்குதமிழ் நிகழ்வு நடந்தபோது பகல் 12.30 மணிக்கு ஆலயங்கள் எல்லாவற்றிலும் ஒரே நேரத்தில் மணிகள் ஒலித்தன.

வீடுகளில் இருந்தவாறே மக்கள் பொங்குதமிழ் நிகழ்வில் மனதாரப்பங்கு கொண்டனர். உரிமை உணர்வலைகளை வெளிப்படுத்தினர்.

வேலைக்குச் செல்பவர்கள் அன்று செல்லாமல் விட்டு விட்டார்கள். பாடசாலைகளுக்கு மாணவர்களும் போகவில்லை.

வீதிகளில் வாகனங்கள் வெகுவாகக் குறைந்து விட்டன.

கடைகள் திறக்கப்படவில்லை. சந்தைகள் என்ன, அவை கூடக் கூடவில்லை.

அப்படித் தமிழ் மக்களிடையே தமிழ் உணர்வும், உரிமை வேட்கையும் மேலோங்கி இருந்தன.

இப்படியான ஒரு உணர்வுபூர்வமான நிலையை யாழ்ப்பாணத்தில் 1974 ஜனவரியில் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின்போது காணக் கூடியதாக இருந்தது. அந்த மாநாட்டிலே 9 தமிழர்கள் அநியாயமாகப் பலி கொள்ளப்பட்டது வேறு கதை.

1961 சத்தியாக்கிரகத்தின் போதும் யாழ் மக்கள் உணர்ச்சி மேலிட்டவர்களாகவே இருந்தார்கள். உரிமைக்கான அஹிம்சைப்போராட்டம் யாழ் கச்சேரிக்கு முன்னால் தமிழரசுத் தந்தை செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற காலம் அது.

1987இல் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கப் போராளிகளில் ஒருவரான திலீபன் இயக்கத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் அனுமதி பெற்று இன உரிமைக்காக நல்லூர் ஆலய வீதியில் உண்ணா விரதம் இருந்து உயிர் விட்டார்.

இன உரிமைக்காக அஹிம்சைப் போரில் திலீபன் தன்னுயிர் நீத்தாரே என்று தமிழ் மக்கள் உருகிப் போனார்கள். அப்போது யாழ்ப்பாண மக்களிடையே மட்டுமென்ன நாட்டின் ஏனைய பகுதிகளிலும் உலகெங்குமுள்ள தமிழர்கள் மத்தியிலும் எழுந்த உணர்வலைகளைச் சொல்ல முடியாது.

அப்படியான ஒரு நிலை தான் 17ஆம் திகதி பொங்குதமிழ் நிகழ்வின் போதும் ஏற்பட்டது.

யாழ்பல்கலைக்கழகத்தில் மட்டுமல்ல வவுனியா பல்கலைக்கழகக் கல்லூரியிலும் மட்டக்களப்பு வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழகத்திலும் மாணவர்கள் பொங்குதமிழ் நிகழ்ச்சியை நடத்தினார்கள். இரு இடங்களிலும் உணர்ச்சிப் பேரலை.

பொங்குதமிழ் நிகழ்ச்சி சில உண்மைகளை அனைவருக்கும் உணர்த்தி விட்டது.

யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்தி புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்க அரசு தயார் என்றால், அதை அமைதியான முறையில் வலியுறுத்தும் பொங்குதமிழ் நிகழ்வைப் படையினர் தடை செய்ததும் பொது மக்களை அதில் கலந்து கொள்ளக் கூடாது என்று மிரட்டியதும் ஏன்?

தென்னிலங்கையில் சமாதானப்பேச்சு வேண்டாம், யுத்தம் தொடரட்டும், நோர்வே விசேஷதூதுவரின் அனுசரணைப்பணி தேவை இல்லை, அவர் திரும்பிப்போகட்டும் என்றெல்லாம் வற்புறுத்தி ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றனவே, அவை தடை செய்யப்படவில்லை.

இங்கே யுத்தம் வேண்டாம், சமாதானம் வரட்டும் என்று கேட்பதற்குத் தடை. இது எதைக் காட்டுகிறது?

யாழ் குடாநாட்டைப் படையினர் தொடர்ந்து ஒரு திறந்த வெளிச் சிறைச்சாலையாகவே வைத்திருக்க விரும்புகிறார்கள் என்றுதானே எண்ண வேண்டியிருக்கிறது!.

படையினரின் நடவடிக்கையால் பொங்குதமிழ் நிகழ்ச்சி உலகம் முழுவதற்கும் யாழ் நிலைமையை வெளிச்சம் போட்டுக் காட்டி விட்டது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா சமீபத்தில் யாழ்தமிழ் மக்களுக்கு செய்மதி மூலம் உரை நிகழ்த்திய போது 80 சதவீதமான தமிழர்கள் தம் பக்கம் இருப்பதாகச் சொன்னார். பிரபாகரன் யுத்தம் செய்து கொண்டிருக்கும் போதே, தனது அழைப்பை ஏற்று தம்முடன் பேச்சுவார்த்தைக்கு வரும்படி அவரைத் தூண்டுங்கள் என்றும் கேட்டுக் கொண்டார்.

அவர் சொன்னது சரியா?' அவர் கேட்டுக்கொண்டபடி நடக்கத் தமிழ் மக்கள் தயாரா? பொங்குதமிழ் நிகழ்வின் போது தமிழ் மக்கள் தாம் நடந்து கொண்ட விதத்தால் பதில்




இங்கே கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள்

அளித்து விட்டார்கள்.

யுத்த நிறுத்தம், சமாதானம், பேச்சுவார்த்தை வேண்டும் திம்புக் கோட்பாட்டின் அடிப்படையில் சுயநிர்ணய உரிமை உட்பட அனைத்து உரிமைகளையும் வழங்க வேண்டும். இவையே தமிழ் மக்கள் இன்று அரசிடமிருந்து எதிர்பார்ப்பவை. இராணுவ பலத்தால் அவர்களின் எழுச்சியை அடக்கி விட முடியாது. குரலை நசுக்கி விடவும் இயலாது. சம்பந்தப்பட்டவர்கள் இவற்றை இன்னும் உணரவில்லை என்றால் எப்படி?

முடி மீது கங்கையைச் சூடி அண்ட சராசரங்களையும் அடக்கி ஆளுபவர் எம்பெருமான் கைலைநாதர் என்பார்கள் ஆனால் இந்தப் படத்தில் காணப்படும் மலைச்சாமியோ தமது நாவிலிருந்து அருவியைச் சொட்டச் செய்கிறாரே. சரியான போட்டிதான்!.

# முடி மீது கங்கையை சூடியவருக்குப் போட்டி



ஆளைப் பார்த்தால் மேல் லோகத்திலிருந்து வந்தவர் போன்ற தோற்றம். ஆனால், கையில் செய்மதித் தொலைபேசிக் கருவி இருப்பது விசித்திரமாக இல்லையா?இவர் முகத்தில் ஏன் இந்தக் குதூகலம்? சொர்க்க லோகத்திலிருந்து அழைப்பு வந்திருக்கிறதோ?




# சொர்க்கத்திலிருந்து அழைப்பு வந்துவிட்டதா?

# சேலைத்தலைப்பில் குழல் ஊதும் கண்ணன்

கண்ணன் குழல் ஊத இரு கோபியர்கள் சூழ நின்று அபிநயம் பிடிப்பது போன்ற உணர்வு இந்தப் படத்தைப் பார்த்ததும் ஏற்படுகிறது அல்லவா? பெண்கள் சேலைத் தலைப்பில் குத்திக் கொள்ளும் ''புறோச்'' எனப்படும் ஊசி நவீன கலை வடிவில் தங்க நகைகளாக உருவாக்கப் படுகிறது. இந்த நவீன மயமான ''புறோச்'' கள் 4500 ரூபா முதல் 30,000 ரூபா வரை விற்பனை யாகின்றன.



மஞ்சள் நிற மலர்கள் பூத்துச் செழித்துள்ள பகுதியில் நடந்து செல்வது ஒரு இனிமையான அனுபவம் தான். அதிலும் மலை முகட்டின் மீது மஞ்சள் பூக்கள் இதழ் விரித்திருக்கும் பின்னணியில் இரு பெண்கள் நடந்து சென்றால் அந்தக் காட்சியை விவரிக்க முடியுமா?



# மலை முகட்டின் மீது மஞ்சள் பூ இதழ்விரிப்பு

# ஒளிந்திருக்கும் முகம் எது?

ஜனவரி 14ஆம் திகதி சுடர் ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகர் மணிவண்ணனுடையது. சரியான விடையைக் கண்டு பிடித்து 'சுடர் ஒளி'க்கு எழுதி அனுப்பிய வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு

1. சீ. மனோஜ், கிருளப்பனை



2. ஏ.சி.எம். முஸம்மில், குளியாப்பிட்டி

3. மு. துஷியந்தன், மட்டக்களப்பு


சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவரையும் பாராட்டுகிறோம். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

கடந்த வாரம் (21-01-2001) மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகத்திற்குரிய நடிகர் யார்? சரியான விடையைத் தபால் அட்டையில் எழுதி அனுப்பும் வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களின் பெயர் விவரம் அடுத்த வாரம் இப்பகுதியில் வெளியிடப்படும்.

இந்த வாரம் பிரசுரமாகியிருக்கும் முகம் தெரியாத உருவம் யாருடையது? நகைச்சுவை நடிகையாக இருந்து குணசித்திர நடிகையாக உயர்ந்தவர். அம்மா வேடம் தாங்கினால் அசல் ஆச்சிதான்.

இந்த முகத்திற்குரிய நடிகையைக் கண்டு பிடித்து அவருடைய பெயரைத் தபால் அட்டையில் எழுதிப் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

''சுடர் ஒளி''
36/2, பிரெட்ரிகா வீதி,
கொழும்பு -06



# பானம் அருந்தி மகிழ கண்ணாடிக் கிண்ணங்கள்

திராட்சை ரச மதுவை விதம் விதமான கண்ணாடிக் கிண்ணங்களில் நிறைத்து சுவைத்து மகிழ்வதில்தான் சிலருக்கு எத்தனை ஆனந்தம். அவர்களுக்குக் குதூகலத்தைத் தரும் விதத்தில் உருவாக்கப்பட்டுள்ள நவீன கண்ணாடிக் கிண்ணங்களில் சில இவை. ஆயினும் இவற்றின் அருகில் அந்த வெள்ளிக் கிண்ணம் தனக்கென ஒரு கௌரவத்தைப் பெற்றுக் கொண்டு விட்டதே.





# சம்பந்தர் முதலிற் கண்ட இறைவனின் திருக்கோலம்

உலகியலின்படி எந்த இடம் அமங்களம் என்று சொல்லப்படுகின்றதோ அங்கே மங்கள வடிவினனாகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கிறான். பரமசிவன் எல்லாவற்றையுமே நீறாக்கி, யாவுமே சுடுகாடாக நிற்கும் இடத்தில் தாண்டவம் புரிகிறான்.

அதற்குச் சர்வ சங்கார தாண்டவம் என்று பெயர். அப்போது எல்லாமே சூனியமாகச் சுடுகாடாக நிற்கிறது. எலும்பையும், மண்டையோட்டையும் அணிகலனாகவும் சுட்ட நீற்றைச் சாந்தமாகவும் அணிந்து கொண்டு இறைவன் தனித் தாண்டவம் புரிந்து நிற்கிறான்.

குழந்தைகள் எல்லாம் நன்றாகத் தூங்கியபோது தனியே இருந்து தனக்கு விருப்பமான செயலைச் செய்கின்ற தாயைப் போல ஆண்டவன் ஆகின்றான். அவன் பிரபஞ்சங்களையெல்லாம் அழித்தாலும் உயிர்களை அழிப்பதில்லை. அவற்றைத் தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கிறான்.

எல்லாம் அழிந்து ஒழிந்த நிலையில் சுடுகாடு என்னும் சர்வ சூனியத்தில் எல்லாத் தத்துவங்களையும் தன்னுள் நடத்திக் கொண்டு யாவும் ஒழிந்தபின் ஒழியாது நின்றதைத் திருமேனியிற் பூசிக்கொண்டு ஆனந்தத் தாண்டவமாடும் இறைவன், என்றும் பொன்றாத நிலையை உடையவன் என்ற நிலையைக் காட்டுகிறான்.

இறைவன் சம்பந்தப் பெருமானுடைய உள்ளத்தைக் கவர்ந்தவன். இறைவனுடைய திருமேனியில் பல வண்ணப் பொருட்கள் இருக்கின்றன. இருந்தாலும் சம்பந்தப் பிள்ளையார் முதன் முதலாக இறைவனிடத்தில் கண்ட பொருள் எல்லாம் வெண்மை நிறமுடையவையாக இருக்கின்றன. அவன் காதில் அணிந்திருக்கும் தோடு அல்லது ஒலைச் சுருள் வெண்ணிறமுடையது.



அவன் ஊர்ந்து வரும் தரும தேவதையாகிய இடபம் வெண்ணிறம் உடையது. "வெள்ளை எருதேறி" என்பர். பின்னே அவன் சூடியிருக்கும் பிறையே தூய வெண்மதி.

அவன் திருமேனி முழுவதும் பூசியிருக்கும் நீறோ வெண்பொடி. இப்படி வெள்ளை வண்ணப் பொருள்களையே கண்டு தம் மனதைப் பறி கொடுத்திருக்கிறார் சம்பந்தர்.

அவருடைய உள்ளம் சுத்த தத்துவம் நிறைந்ததாக மலர்ந்து விட்டது. உடம்பால் இளங் குழந்தையாக இருந்தாலும் அறிவால் பழுத்து நிற்கின்றார்.

ஒருவரை முதல் முதலாகக் காணும் போது நம்முடைய உள்ளத்தில் தோற்றும் எண்ணம் அழுத்தமாக நிலை நிற்கும். "முதலில் உண்டாகும் எண்ணமே சிறந்த எண்ணம்" என்று உள நூல் வல்லார் கூறுவர்.

அந்த முதல் பார்வையில் சம்பந்தப் பெருமான் சிறப்பான காட்சியைக் காண்கிறார். எல்லாம் சத்துவமயமான காட்சி. வெண்மை நிறம் படைத்த பொருள்களின் கூட்டம்.

தோடும், விடையும், மதியும், பொடியும் ஆகிய நான்கு வெள்ளை வண்ணப் பொருள்களை இறைவனிடத்தில் முதல் முதலாகக் காணுகின்றார் சம்பந்தப் பெருமான்.

அதற்குப் பின்பு வண்ண வண்ணக் காட்சிகளை எல்லாம் கண்டு பாடினாலும் முதலில் அவர் உள்ளத்தில் பதிந்தது சுத்த சத்துவக் காட்சி.

கண்ணாடியில் சுத்த வெள்ளையாக ரஸத்தைப் பூசி விட்டால் அதன் பிறகு எல்லாப் பொருள்களின் வடிவத்தையும் வண்ணத்தையும் அதில் தெளிவாகக் காணலாம்.

# இயேசுவின் ஐந்து ஏழு அருள் வார்த்தைகள்

இயேசு சிலுவையில் தொங்கிய போது மொழிந்த ஏழு அருள் வார்த்தைகள் திருமறையிலே முக்கிய இடத்தை வகிக்கின்றன.

தனது சரீரத்தில் ஏற்பட்ட காயங்களோடு, குற்றுயிராக இயேசு மொழிந்த இந்த வார்த்தைகள் தியானத்துக்கு உகந்தவை.

முதலாம் வார்த்தை திருமறையிலே லூக்கா 23-34 இல் அமைந்துள்ளது.

அப்பொழுது இயேசு, "பிதாவே, இவர்களை மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே!" என்றார். ரோம சேவகர்கள் புடைசூழ, அவருடைய பகைவர்கள் அவரை நிந்தித்து, பரிகசித்து அவமானப்படுத்த தனக்கு பாதகமாக ஒரு சூழ்நிலையிலே நம் ஆண்டவர் இவ் வார்த்தையைக் கூறுகிறார்.

இரண்டாம் வார்த்தை "இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசில் இருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். இந்த வார்த்தையை திருமறையிலே லூக்கா 23-43 இல் காண்கிறோம்.

இயேசு சிலுவையில் அறையப்பட்ட போது அவரோடு கூட இரண்டு கள்வர்களும் இரு பக்கங்களிலேயும் அறையப்பட்டார்கள். அந்த நேரத்தில், சிலுவையில் அறைப்பட்டிருந்த ஒரு கள்வன் அவரை இகழ்ந்தான். மற்றக் கள்வனோ "ஆண்டவரே" நீர் உமது இராஜ்யத்தில் வரும் போது அடியேனை நினைத்தருளும் என்று மன்றாடினான். அதற்கு நமதாண்டவர் கொடுத்த பதில் "இன்றைக்கு நீ என்னுடனே கூட பரதீசிலிருப்பாய் என்பதே பாவிக்காய் உயிர் கொடுக்கும் அன்பர் அவர்.

மூன்றாம் வார்த்தை திருமறையிலே யோவான் 19-26-27 பகுதியில் அமைந்துள்ளது.

இயேசு தம்முடைய தாயையும், அருகே நின்ற தமக்கு அன்பாயிருந்த சீடனையும் கண்டு தம்முடைய தாயை நோக்கி, அம்மணியே அதோ உன் மகன் என்றும் சீடனை நோக்கி "அதோ உன் தாய்" என்றும் கூறுகிறார். இயேசு சிலுவையில் தொங்கிய போதும் தன்னுடைய் பெற்றோர் குறித்து எவ்வளவு அக்கறையுடையவராய் இருந்தார்.

நான்காம் வார்த்தை திருமறையிலே மத்தேயு 27-46 இல் அமைந்துள்ளது. என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்?

பிதாவாகிய தேவன் ஏன் குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை சிலுவையில் வைத்து கைவிட வேண்டும்.

அதற்குள் ஆழ்ந்த இரகசியம் அடங்கியிருக்கிறது. இறைவனின் பிள்ளைகளாகிய நாம் கைவிடப்படக் கூடாது என்பதற்காகவே இறைமகன் இயேசு கிறிஸ்து சிலுவையில் எங்கள் பாவங்களைச் சுமந்து இறைவனால் கைவிடப்பட்டார்.

எங்களுடைய பாவச் சுமையை அவர் சுமந்து எங்களைப் பாவத்திலிருந்து வெளியே எடுத்து அவருடைய இரத்தத்தினாலே எங்களைக் கழுவி பிதாவாகிய தேவனோடு எங்களை இணைத்திருக்கிறார்.



ஐந்தாம் வார்த்தை திருமறையிலே யோவான் 19-28 இல் "நலமாயிருக்கிறேன்" என்று இயேசு கூறுவதாக அமைந்துள்ளது.

இயேசு கிறிஸ்து இவ்வுலகிலே மனித குமாரனாகவும் தெய்வகுமாரனாகவும் வாழ்ந்தார் என்பதை நாம் மறக்கக் கூடாது.

அவரிடத்திலே தெய்வீக சுபாவமும் இருந்தது. மனுஷ சுபாவமும் இருந்தது. சிலுவையில் அவர் தெய்வகுமாரனாகவும், மனிதகுமாரனாகவும் தொங்கினார்.

ஆகவே அவருக்கு மனுஷீக தாகமும், தெய்வீக தாகமும் இருந்தன. அவர் காயப்பட்டார். நொருக்கப்பட்டார். இரத்தம் வழிந்தது.

ஒரு மனிதனுக்கு இரத்தம் வெளியேறினால் அவனுக்குத் தாகம் ஏற்படும் என்று டாக்டர்கள் கூறுகிறார்கள். ஆகவே இயேசுவுக்கு அந்த மனுஷீக தாகம் ஏற்பட்டது. அதே வேளையில் தெய்வீக தாகமும் ஏற்பட்டது.

ஆறாம் வார்த்தை திருமறையிலே யோவான் 19-30 இல் "முடிந்தது" என இயேசு கூறுவதாக அமைந்துள்ளது.

இது தோல்வியின் வார்த்தை அல்ல வீர முழக்கம். பிதா கொடுத்த காரியத்தை, வேலையை, கடமையைச் செய்து முடித்து விட்டதாக வீரமுழக்கம் இடுகிறார்.

எவைகளை அவர் முடித்தார் எனப் பார்ப்போம். சிலுவையிலே அவரது சீர வாழ்க்கையை முடித்தார். அவரை குறித்து திருமறையிலே எழுதி வைக்கப்பட்ட தீர்க்கதரிசனங்களை சிலுவையிலே நிறைவேற்றி முடித்தார். பிதா அவருக்குக் கொடுத்த வேலையை நிறைவேற்றி முடித்தார். பிதாவை வெளிப்படுத்தும் வேலையை முடித்தார். கடைசியாக மகத்தான இரட்சிப்பின் வேலையை முடித்தார்.

ஏழாம் வார்த்தை லூக்கா 23-46 இல் இயேசு பிதாவே உம்முடைய கைகளில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன் என்று சொல்வதாக அமைந்துள்ளது.

"பிதாவே" என்று ஆரம்பித்தவர். "பிதாவே" என்று முடிக்கிறார். தமது ஆவியை இறைவனுடைய கரத்திலே ஒப்புவிக்கிறார்.

எப்பொழுதும் பிதாவுக்குப் பிரியமாய் நடந்து கொண்ட இறைமகன் முடிவிலே சந்தோஷமாக பிதாவின் கையில் தமது ஆவியை ஒப்புவிக்கிறார்.

சமாதானத்தோடும், அமர்ந்த சிந்தனையோடும் மகிமையில் பிரவேசிக்கிறார். நமது முடிவும், மரணமும் எப்படியிருக்க வேண்டும் என்பதற்கு அவர் மாதிரியாக இந்த வார்த்தையைச் சொல்லுகிறார்.

மனிதன் தன்னுடைய கடைசி நேரத்தில் இறைவனிடத்தில் போக வேண்டும் என்று ஆசைப்படுகிறான்.

நம்முடைய வழி சரியாயிருந்தால் நாம் சேரும் இடமும் சரியாயிருக்கும்.








# பொது வீதிகளில் பிரசவம்: மட்டக்களப்பில் பரிதாபம்!

பொது வீதிகளிலும் துறைகளிலும் கர்ப்பிணித் தாய்மார் குழந்தைகளைப் பிரசவிக்கிறார்கள். இந்தப் பரிதாபம் எங்கே தெரியுமா? மீன்பாடும் தேனாடு என்று பெருமை பெற்ற மட்டக்களப்பில்! அதுவும் இந்த நூற்றாண்டில்.

விவரம் அறிய ஆவலா? வாருங்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பகுதி படுவான்கரை.

இங்கே வைத்தியசாலை எதுவும் இல்லை. ஒரு வீட்டில் ஒருவருக்கு நோய் கண்டுவிட்டால் அந்த வீட்டில் உள்ளவர்கள் என்ன, ஊர் மக்கள் அனைவருமே பதறிப் போவார்கள்.

எந்த அவசர சேவைக்கும் இந்த ஊரிலே வைத்திய வசதி கிடையாது.

படுவான்கரைப்பகுதி விடுவிக்கப்படாத பகுதி என்று அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டது. அதனால் எவ்விதமான அபிவிருத்திப் பணிகளை இங்கே மேற்கொள்வதானாலும் அதற்கு இராணுவத்தினரின் அனுமதி பெறப்பட வேண்டும் என்பது விதி.

இவ்விதியினால் படுவான்கரை வாழ் சாதாரண மக்கள் பெருமளவில் பாதிக்கப்படுகிறார்கள். இங்கே மகப்பேற்று வைத்திய மனை இல்லாமையால் கர்ப்பிணித்தாய்மார் பிரசவத்துக்காக ஆரையம்பதி, மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி, வைத்தியசாலைகளுக்குச் செல்லுகிறார்கள். செல்லும் வழியில் பலருக்கு வீதிகளிலும், துறையடிகளிலும் பிரசவம் நிகழ்ந்து விடுகிறது.

கடந்த 2000 ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையில் வீதியிலும் துறைகளிலும் நடந்த பிரசவங்களின் விபரம் வருமாறு:–

மண்முனைத்துறையடியில் நான்கு குழந்தைகள்

அம்பிளாந்துறையில் இரண்டு குழந்தைகள்.

வீதிகளில் இரண்டு குழந்தைகள்.

பிரசவ வேதனை ஏற்பட்டபோது சிகிச்சை இல்லாத காரணத்தால் நான்கு தாய்மார்கள் இறந்துமுள்ளனர்.

பாம்புக்கடிக்கு இலக்கான அறுபேரும் உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்ல முடியாததன் காரணமாக இறந்துள்ளனர்.

ஷெல்லடி, குண்டு வெடிப்பு விபத்துக்கள் காரணமாகவும் பல பொது மக்கள் சிகிச்சை அளிப்பதற்கு வைத்தியசாலைகள் இல்லாததன் காரணத்தாலும் பல கஷ்டங்களை எதிர் நோக்கியுள்ளனர்.

மகிழடித்தீவு மகப்பேற்று வைத்தியசாலையில் கட்டில்கள் மட்டுமே உள்ளன. அந்தக் கட்டில்களும் துருப்பிடித்துள்ளன. சாதாரண காய்ச்சல் மாத்திரைகள் கூட இங்கு இல்லை.

வேண்டிய எண்ணிக்கையில் ஊழியர்கள், தாதிகள், மருத்துவ மாதர்கள் இன்னும் நியமிக்கப்பட வில்லை.

மகிழடித்தீவு வைத்தியசாலையைத் தரம் உயர்த்துவதற்காகக் கடந்த பல வருடங்களாக அரசியல் பிரமுகர்கள் கொக்கரித்தனர். ஆனால் இப்போது மௌனமாகிவிட்டனர் என்று இப்பகுதியில் உள்ள பொது மக்கள் 'சுடர் ஒளி'க்குத் தெரிவித்தனர்.

கடந்த பொதுத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிட்ட 168 வேட்பாளர்களில் குறைந்தது 100 பேராவது மகிழடித்தீவு வைத்தியசாலையைத் தரம் உயர்த்துவதாக உறுதி அளித்தனர்.

தற்போது நாடாளுமன்ற உறுப்பினர்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியில் ஜோசப் பரராஜசிங்கம் பொன் செல்வராசா ஆகியோர் தெரிவாகியுள்ளனர். பொதுஜன ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் இனவிவகார பிரதி அமைச்சரான சோ.கணேசமூர்த்தி. ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அலி சாகிர் மௌலானா இவர்கள் மகிழடித்தீவு வைத்தியசாலையின் குறைகளை நிவர்த்தி செய்து அதை ஒரு சிறந்த வைத்திய சாலையாக மாற்றித் தரப்போவதாகக் கூறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

***

## முற்பணம் எப்போது?

மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களின் வீடுகளைத் திருத்துவதற்கு வட்டியில்லாத சம்பள முற்பணமாக பத்துமாத சம்பளத்தையும் பெறமுடியும் என மட்டக்களப்பிற்கு வருகை தந்த சமூக சேவை அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோ மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் கூறியிருந்தார்.

ஆனால் இதையிட்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்களில் கடமைபுரியும் அரச ஊழியர்கள் தமது திணைக்களத் தலைவர்களிடம் கேட்டபோது இதற்கான சுற்றுநிருபம் தமக்குக் கிடைக்க வில்லை எனக் கையை விரிக்கின்றனராம்.

பாதிக்கப்பட்ட வீடுகளுக்கான மதிப்பீட்டைக் கிராம சேவையாளர் உறுதிப்படுத்தி பிரதேச செயலாளர் ஊடாக சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இப்படி மட்டக்களப்பு செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னும் சரிவர வெள்ள நிவாரணம் கொடுக்கப்பட வில்லை. இந்நிலையில் அரச ஊழியர்களுக்கு பத்துமாதச் சம்பள முற்பணம் இலகுவில் கிடைத்துவிடுமா?

–நேரன்

# களிப்புக்கு ஒரு பாசிக்குடா தேடுவாரற்றுக் கிடக்கிறது!

கடல் குளிப்புக்காக வெளிநாட்டு– உள்நாட்டு உல்லாசப்பயணிகளைக் கவர்ந்து இழுத்துப் பொங்கிப் பூரித்து இருந்த சொர்க்க பூமி பாசிக்குடா. இன்று அது பொலிவிழந்து பாழடைந்து தேடுவாரற்றுக் கிடக்கிறது.

மட்டக்களப்பு மாவட்டத்து வாழைச்சேனை கல்குடா பகுதிகளை அண்டியுள்ள இந்தப் பாசிக்குடாவில் சமீபத்தில் ஒரு குறிப்பிடத்தக்க சம்பவம் நடந்தது.

இங்கு அமைக்கப்பட்டிருந்த 80 சுண்ணாம்புச் சூளைகள் கடந்த ஓர் இரவு இனந்தெரியாத நபர்களினால் உடைத்து நொருக்கப்பட்டது.

இச் சம்பவத்தினால் பல ஆயிரம் நட்டம் ஏற்பட்டுள்ளதாகச் சூளை உரிமையாளர்கள் பொலிசாரிடம் தெரிவித்துள்ளனர். சூளை நொருக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கனி வளங்களில் ஒன்றான சுண்ணாம்புக் கற்கள் பாசிக்குடா கடற்கரைப் பிரதேசத்தில் அதிகளவில் காணப்படுகின்றன. இவற்றைத்தோண்டி சுண்ணாம்பு சூளைகளுக்கு விற்பனை செய்யும் தொழில் பெருகி விட்டது.

இந்தக் கற்கள் தோண்டப்படுவதால் ஏற்படும் அபாயங்களை ஊர் மக்கள் கவனத்தில் கொள்ளவில்லை. அதனால் சுண்ணாம்புக்கற்கள் தோண்டியெடுக்கப்படுவதைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கவும் இல்லை.

பாசிக்குடா பிரதேசத்தில் தோண்டி எடுக்கப்படும் சுண்ணாம்புக்கற்கள், சுண்ணாம்பு மற்றும் பொருட்கள் தென்னிலங்கைக்கு அனுப்பப்படுகின்றன. இதனைப்பலர் தொழிலாகச் செய்து வருகிறார்கள்.

இக்கல் அகழ்ந்தெடுக்கப்பட்டதைத் தொடர்ந்து பாசிக்குடா முனை முருகன் ஆலயம் கடலரிப்பால் கடலுக்குள் அகப்பட்டுவிட்டது. வீதிகள் சேதமடைந்து போக்குவரத்துகள் பாதிக்கப்பட்டுள்ளன. முப்பதுக்கும் மேற்பட்ட கிணறுகளில் உள்ள நீர். உப்பு நீராக மாறிவிட்டது.

இவ்வளவும் நடந்த பின்னரும் பொதுமக்கள் விழிப்படையாமல் இருப்பார்களோ?

பொலிசாரிடமும், சுகாதாரத் திணைக்களத்திடமும் பல தடவைகள் முறையிட்டார்கள். எதுவித பலனும் கிடைக்கவில்லை. அதனால் ஆத்திரமடைந்த நிலையில் சுண்ணாம்புச் சூளைகளை அடித்து நொருக்கினார்களோ என்று சந்தேகிக்கப்படுகிறது.

பாசிக்குடாவில் இப்போது சுண்ணாம்புச் சூளைகளும் இல்லை. முன்னர் நிறுவப்பட்டிருந்த உல்லாச விடுதிகளும் தற்போது யுத்தம் காரணமாகத் தரைமட்டமாக்கப்பட்டு விட்டன.

பாசிக்குடா கடலுக்கு முன்னர் உல்லாசப் பயணிகள் அதிக எண்ணிக்கையில் ஈர்க்கப்பட்டதைத் தொடர்ந்து அவ்விடத்தில் சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டது.

பல உல்லாச ஹோட்டல்கள் சிங்களவர்களால் நிர்மாணிக்கப்பட்டன. காலப்போக்கில் தமிழ் மக்களின் காணிகளும் சிங்களக் குடும்பங்களால் சுவீகரிக்கப்படும் அபாயம் தோன்றியது. முதலாவது ஈழயுத்தத்தோடு சிங்களக் குடும்பங்கள் இடம் பெயர்ந்து விட்டன.

அதன்பின்னர் உல்லாசப் பயணிகளின் வருகை குறைவடைந்தது. ராணுவக்கெடுபிடிகள் அதிகரிக்கப்பட்ட பின்னர் உள்ளூர் இளைஞர், யுவதிகள், பாடசாலை மாணவர்களும் அவ்விடத்திற்கு செல்ல அச்சமடைந்தனர். தற்போது பாசிக்குடாக்கடல் பகுதி பாழ்அடைந்து காணப்படுகிறது.

***

## ஊனமுற்றோர் வண்டிகள் உறங்குகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேச செயலகப் பிரிவிற்குட் பட்ட பிரதேசத்தில் உள்ள ஊனமுற் றோர்களுக்காக ஒப்படைக்கப்பட்ட மூன்று முச்சக்கர வண்டிகள் இதுவரை உரியவர்களுக்கு வழங்கப்படவில்லை.

வடக்கு –கிழக்கு மாகாண சபையினால் ஆறுமாதங்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட முச்சக்கர வண்டிகள் இவை. தற்போது வாழைச்சேனை பிரதேச செயலக வளவிற்குள் உறங்கிக் கிடக்கின்றன.

ஏன் ஐயா இந்தக் கவலையீனம்? ஊனமுற்று அசௌகரியப்படும் மனிதர் களுக்கு வழங்கப்பட்டதைக் கொடுக்காமல் காலம் கடத்துவது வேதனையல்லவா?

– சத்துருக்கன்

## மகளுக்கு குடியுரிமை கேட்கிறார் முருகன்

ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட முருகனை சென்னையிலுள்ள இலங்கைத் தூதரக பிரதித் தூதுவர் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பு வேலூர் சிறையில் ஒன்றரை மணி நேரம் நடந்தது.

வேலூர் மத்திய சிறையில் ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத்தண்டனை பெற்ற முருகன் அடைக்கப் பட்டுள்ளார்.

இவரது மனைவி நளினி ஆயுள் தண்டனைக் கைதியாக பெண்கள் தனிச்சிறையில் உள்ளார்.

இவர்களுக்குப் பிறந்த அரித்ரா என்ற குழந்தை லண்டனில் உறவினர்களிடம் வளர்ந்து வருகிறது.

இந்த நிலையில் முருகன் தனது மகள் அரித்ராவுக்குக் குடியுரிமை சான்றிதழ் கேட்டு இலங்கை அரசுக்கு மனுச் செய்து இருந்தார்.

இது தொடர்பாக இலங்கையின் பிரதித் தூதுவர் ஜெயசிங்க முருகனைச் சந்தித்துப் பேச அனுமதி கேட்டு இருந்தார்.

அதன்படி பிரதித் தூதுவர் ஜெயசிங்க இலங்கை சென்னைத் தூதரக முதன்மைச் செயலாளர் பத்மநாபன் ஆகியோர் வேலூருக்கு சென்றனர்.

சிறையில் உள்ள முருகனை அவர்கள் சந்தித்துப் பேசினர்.

மகளின் குடியுரிமைக்கான படிவத்தை நிரப்பி முருகன் கையெழுத்திட்டு பிரதித் தூதுவரிடம் கையளித்தார்.

முருகன் நீதிமன்றத் தீர்ப்புப்படி தூக்கிலிடப்படுவாரா அல்லது அவரது தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்படுமா? அது இப்போது ஜனாதிபதியின் கையில் இருக்கிறது. அவரோடு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட மற்றவர்களின் நிலையும் அதுதான்.

# யாழ்ப்பாண வர்த்தகர்களிடம் ஆயுதக் குழுக்கள் கைவரிசை!

குடாநாட்டை அரசப் படைகள் கைப்பற்றிய பின்னர் ஆயுதக் குழுக்கள், ஆயுதம் தாங்கிய கட்சிகள் போன்றவற்றின் அத்துமீறல்கள், மனித உரிமை மீறல்கள் தலைவிரித்தன. அந்த சந்தர்ப்பங்கள் பல தடவைகள் ஏற்பட்டிருந்தன. 'இருண்ட காலம்' எனக் கூறும் அளவுக்கு ஒரு கட்டத்தில் நிலைமை மிக மோசமாகவும் இருந்தது.

அந்த நிலைமை தற்போது ஓரளவு சீரடைந்து வருவதுபோல் தோன்றுகிறது. இருப்பினும் ஜனநாயக வழிக்குத் திரும்பியதாகக் கூறிக்கொள்ளும் கட்சிகள் சம்பந்தப்பட்ட அத்துமீறல் தகவல்கள் அவ்வப்போது வெளிவந்து கொண்டே இருக்கின்றன.

யாழ். நகர வர்த்தகர்கள் சிலர் காதோடு காதாகக் கூறிய தகவல்:-

''யாழ்ப்பாணத்தில் இயங்கும் கட்சிகள் சில வர்த்தகர்களிடம் கப்பம் அறவிடும் - நிதி வசூலிக்கும் - தங்கள் வாடிக்கையை மீண்டும் ஆரம்பித்துவிட்டன''

கட்சிகளைச் சேர்ந்தவர்கள் எனக் கூறிக்கொண்ட சிலர் கடந்த சில வாரங்களில் யாழ். நகரின் பிரபல நகை வியாபாரிகள் உட்பட வர்த்தகப் பிரமுகர்களிடம் சென்று பெரும் தொகை நிதியைக் கேட்டிருக்கிறார்கள்.

மற்றொரு கட்சியின் பெயரைக் கூறிக்கொள்வோர் வர்த்தகர்களைத் தனித்தனியாகவும் கூட்டாகவும் தங்கள் அலுவலகத்துக்கு வருமாறு அன்போடு அழைத்திருப்பதாகத் தகவல்.

அவ்வாறு கட்சி அலுவலகத்துக்குச் சென்ற ஒரு சிலரிடம் தங்கள் கட்சியின் நிலைமை, பட்ஜெட் பற்றாக்குறை என்பவற்றை நாகரிகமான முறையில் விளக்கி இவ்வளவு தாருங்கள் என்றும் கேட்டிருக்கின்றார்கள்.

நிதி தருமாறு வற்புறுத்தப்பட்டு வரும் சில வர்த்தகர்கள் கட்சி அலுவலகங்களுக்குச் செல்லாமல் ஒளிந்து திரிவதாகக் கூறப்படுகின்றது.

''நிதி இல்லையேல் பொருள்களையாவது தந்து உதவுங்கள்!'' என்றும் வர்த்தகர்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது.

தேர்தல், அது இது என்று மக்கள் முன் மண்டியிட வேண்டிய காலம் கடந்துவிட்டது. தற்போது கஜானா காலியாகிப் போன நிலை. எனவே இந்த ஆயுதம் தாங்கிய அரசியல் குழுக்கள் மீண்டும் தங்கள் வேலையைக் காட்டத் தொடங்கிவிட்டனவோ? - இந்தப் பீதி யாழ். வர்த்தக வட்டாரங்களில் ஏற்பட்டிருக்கின்றது.

இந்தக் கப்பம் கோரும் அத்துமீறல் மீண்டும் ஆரம்பித்திருப்பது குறித்து வர்த்தகர்கள் பலர் கடுப்புடன் உள்ளனர். ஆனால் தங்கள் சீற்றத்தை வெளிக்காட்ட அஞ்சுகின்றனர். தங்களிடம் காசு கேட்டு வந்த குழுவினர் பற்றிய தகவல்களைப் பகிரங்கமாக வெளியிடவும் தயங்குகின்றனர்.

அவர்களைக் காட்டிக் கொடுத்து விட்டால் தங்கள் தலையே போய்விடும் என்ற பயம் அவர்களுக்கு. எனினும் இரண்டு கட்சிகளின் பெயரில் கப்பம் கோரப்பட்ட தகவலைச் சில வர்த்தகர்கள் மெல்லக் கசியவிட்டிருக்கிறார்கள்.

மக்களை மிரட்டி நிதி வசூலித்தல், மக்களின் உடைமைகள், சொத்துக்கள் போன்றவற்றைச் சூறையாடுதல் என்ற அத்துமீறல்கள் முன்னர் தீவிரமடைந்திருந்தன என்பது உண்மைதான். அத்தகைய சமூக விரோதச் செயல்களில் தமது கட்சியோ உறுப்பினர்களோ ஒருபோதும் ஈடுபடுவதில்லை. தங்கள் பெயருக்குக் களங்கத்தை ஏற்படுத்தும் மறுதரப்பாரின் வேலையாக அது இருக்கக்கூடும் - இவ்வாறு கட்சித் தலைமைகள் அறிக்கை விடுவது வழமை.

தற்போதைய நிதி வசூலிப்புக் குறித்து சம்பந்தப்பட்ட கட்சித் தலைமைகள் தரப்போகும் விளக்கம் எப்படி அமையப்போகின்றதோ?

## புலிகளின் யுத்தநிறுத்தம்

தங்களின் ஒருதலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தை விடுதலைப்புலிகள் மேலும் ஒருமாத காலத்துக்கு நீடித்திருப்பது யாழ். மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தியாக வந்திருக்கிறது.

24ஆம் திகதியைப் படபடப்போடு எதிர்பார்த்துக்கொண்டிருந்த சாதாரண மக்களின் வயிற்றில் பால் வார்த்த செய்தியாகவே இது அமைந்திருக்கும்.

பொதுமக்களின் 'சமாதானக் கனவு' இதன் மூலம் மேலும் ஒருமாத காலத்துக்குத் தொடரப்போவதும் நிச்சயம். எனினும் படையினர் சண்டையைத் தீவிரமாக்கி இருப்பதும் புலிகள் பின்வாங்கிச் செல்வதும் யாழ். வாசிகள் பலருக்கு ஏமாற்றத்தைக் கொடுத்திருப்பதையும் உணர முடிகிறது. சாதாரண மக்களின் - மக்கள் பிரதிநிதிகளின் - இந்த உணர்வுகள் வெளிப்படுத்தப்பட வேண்டியவையே. அவை மதிக்கப்படுமா என்பது வேறு விடயம்.

புலிகளின் யுத்தநிறுத்த நீடிப்பு சமாதான முயற்சிகளுக்குரிய வாய்ப்பைப் பிரகாசமாக்கியுள்ளதுதான். இருந்தபோதிலும் அதிகளவு உயிர், உடைமைச் சேதங்களுக்குப் பின் கைப்பற்றிய பகுதிகளைக் கைவிட்டுப் புலிகள் பின்வாங்கலாமா? அவ்விதம் அவர்கள் பின்வாங்குவது வியப்பூட்டுவதாக இருக்கிறது. இவ்வாறு யாழ். நகரில் வசிக்கும் பல்கலைக்கழக மாணவர் ஒருவர் கருத்து வெளியிட்டார்.

''நிலப்பிரதேசங்கள் மாறி மாறி எவருடைய கைக்கு வந்தாலும் அந்தப் பகுதிகளுக்குச் சென்று குடியமர்வதோ அன்றி விவசாயம் செய்வதோ இப்போதைக்கு நடக்கக் கூடிய காரியமாகத் தெரியவில்லை.'' இவ்வாறு கூறினார் கிராமப்புற விவசாயி ஒருவர். அவருக்குச் சொந்தமான மூன்று ஏக்கர் வயல் நிலம் தனங்கிளப்புப் பகுதியில் இருக்கிறது.

''நோர்வே உட்பட மேற்கு நாடுகளின் அழுத்தம் - வேண்டுகோள் - இவை காரணமாகவே யுத்தநிறுத்தத்தைப் புலிகள் நீடித்திருப்பார்கள். இதன் மூலம் அரசின் இராணுவ பலப் பிரயோகம் அர்த்தமிழந்து போகிறது. இது அரசுக்கு அரசியல் பொறி போன்றது'' இவ்வாறு கூறினார் மனித நேய அமைப்பு ஒன்றின் பிரமுகர்.

புலிகள் பின்வாங்குவது வட்டியும் முதலுமாகத் திருப்பிக் கொடுக்கவே என்ற கருத்தும் பலரிடம் நிலவுகிறது.

''சமாதானத்துக்கான விட்டுக் கொடுப்புகளை அரசு உதாசீனம் செய்வது நிலைமையை மோசமாக்கும். நாடு முழுவதும் போரை விஸ்தரிக்கவே இது வழி செய்யும். தலைநகர் கொழும்பில் அல்லது வடக்கில் வேறு ஒரு முனையில் புலிகளின் உக்கிரமான பதிலடியை அரசு எதிர்கொள்ள வேண்டியும் வரலாம்''




இது யாழ்ப்பாணத்தில் உள்ளூர் பத்திரிகையாளர் ஒருவர் வெளியிட்ட கருத்து.

இராணுவம் அண்மையில் மீட்ட பகுதிகளில் மீளக் குடியமர வேண்டாம் என்று புலிகள் விடுத்த அறிவிப்பு-

இராணுவம் மீட்ட பகுதிகளில் உள்ள வீடுகள், கட்டடங்கள், மற்றும் சொத்துக்களுக்கு ஏற்பட்டிருக்கும் பேரழிவு-

தட்டுத் தடுமாறி எட்டி மிதித்தால் கால் போய்விடும் என அஞ்சி அடிவைக்கும் நிலையை உருவாக்கி இருக்கும் மிதி வெடிகள் மற்றும் கண்ணிகள்-

இவை போன்ற நிலைமைகளின் பின்னணியில் இடம் பெயர்ந்து தற்காலிக வசிப்பிடங்களில் வாழும் மக்களின் நிலை மேலும் பரிதாபத்துக்குரியதாய் மாறி உள்ளது.

இதற்கிடையில் தாங்கள் மீட்டு எடுத்த பகுதிகளில் பொதுமக்களைக் குடியமரத் தூண்டும் முயற்சியில் படைத்தரப்பு இறங்கி இருக்கிறது. இது அப்பாவிப் பொதுமக்களை மனித கேடயமாக்கும் முயற்சியே என்று யாழ்ப்பாணத்தில் உள்ள மனித உரிமை ஆர்வலர்கள் கூறுகின்றனர்.

யாழ். நகரின் கரையோரப் பிரதேசங்களான குருநகர், பாஷையூர் பகுதிகளில் இருந்து கடந்த ஆண்டின் மத்தியில் வெளியெறி வலிகாமத்தின் ஏனைய பகுதிகளில் முகாம்களில் தங்கி இருந்தார்கள் மக்கள். அவர்களில் ஒரு பகுதியினர் நிச்சயமற்ற உணர்வுடன் தற்போது தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பி உள்ளனர். எனினும் முகாம்களிலேயே கணிசமானோர் தொடர்ந்து தங்கி உள்ளனர்.

மானிப்பாய் உட்பட வலிகாமத்தின் சில இடங்களில் - முகாம்களில் மக்கள் தங்கியிருக்கிறார்கள். அவர்களை அங்கிருந்து வெளியேறி வீடுகளுக்குச் செல்லுமாறு படையினர் நிர்ப்பந்தித்து வருவதாக இடம்பெயர்ந்த உள்ளூர் வாசிகள் கூறுகின்றனர்.

வீடுகளுக்குச் செல்லுமாறு தாம் நிர்ப்பந்திக்கப்படுவதாக முகாம்களில் உள்ள குருநகர் மக்கள் பலர் யாழ். ஆயர் இல்லத்தில் முறையிட்டிருக்கின்றனர்.

## துண்டுப் பிரசுரக் கலாசாரம்

யாழ்ப்பாணத்தில் வெளியாகி வரும் அநாமதேய துண்டுப் பிரசுரங்கள் பற்றிய மற்றொரு தகவல் இது-

ஈ.பி.டி.பி அமைப்பையும் அதன் செயலாளர் நாயகம் அமைச்சர் தேவானந்தாவையும் கடுமையாக - கீழ்த்தரமான வார்த்தைப் பிரயோகங்களால் - சாடும் பல துண்டுப் பிரசுரங்கள் கடந்த வாரம் வெளியாகி உள்ளன.

'தமிழீழ சீர்திருத்த ஆர்வலர்கள்' என்ற பெயரிலும் 'தன்மானமுள்ள குடாநாட்டு மக்கள்' என்னும் பெயரிலும் அந்தப் பிரசுரங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

ஈ.பி.டி.பி அமைப்பின் கடந்தகாலச் செயற்பாடுகளையும் தற்போதைய நடவடிக்கைகளையும் கண்டிக்கும் வகையில் பல்வேறு விடயங்கள் அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ளன.

'பாராட்டி வாழ்த்துகின்றோம்' என்ற தலைப்பிடப்பட்ட மற்றொரு பிரசுரத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் ஈ.பி.டி.பியின் ஏனைய முக்கியஸ்தர்களுக்கும் கிண்டலான பாணியில் வாழ்த்துத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் வளர்ந்து வரும் அநாமதேய துண்டுப்பிரசுரக் கலாசாரத்தின் ஆகப் பிந்திய நிலைமை இது.

## காலநிலை மாற்றம்

இராணுவ நடவடிக்கைகளினால் பறிபோன பெரும் வயல்நிலப் பிரதேசங்கள் போக எஞ்சிய நிலப்பரப்பில் நெற் செய்கை பண்ணப்பட்டது. அந்தப் பெரும்போக நெற் செய்கையைத் தற்போதைய காலநிலை மாற்றம் கருவறுத்து விடுமோ? - இந்தப் பயம் குடாநாட்டு விவசாயிகளிடையே ஏற்பட்டிருக்கிறது.

அண்மைக் காலத்தில் குடாநாட்டு அரசியல், இராணுவ நிலைமைகள் போன்று காலநிலையின் போக்கிலும் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன.

அண்மைய ஆண்டுகளில் பதிவான மழை வீழ்ச்சி, மழை பெய்யும் காலம் போன்ற தரவுகளை நோக்குகையில் குடாநாட்டுக் காலநிலையில் பலமான தாக்கங்களும் மாறுதல்களும் ஏற்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

நெல் விதைப்பு காலத்தில் கடும் வரட்சி. அறுவடைக் காலத்தில் மழை. அண்மைய ஆண்டுகளில் இவை விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கும் புதிய அனுபவங்களாக உள்ளன.

முன்னோர்கள் வழிவழியாக அவர்களது அனுபவங்களின் அடிப்படையில் காலங்களை வகுத்திருந்தார்கள். அவற்றை அனுசரித்தே தற்போதும் குடாநாட்டு விவசாயிகள் பெரும்போக மற்றும் சிறுபோகப் பயிர்ச் செய்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆனால் யுத்தத்தால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு மேலதிகமாக காலநிலை பொய்த்துப் போய்விடுகிறது. இதனால் பெரும் பயிரழிவையும் நஷ்டங்களையும் அவர்கள் சந்தித்து வருகின்றனர்.

காலநிலையில் ஏற்பட்டுவரும் மாற்றங்களை அவதானித்து அவ்வப்போது விவசாயிகளுக்கு ஆலோசனைகளை வழங்க வேண்டும். மாறுதல்களை அனுசரித்துப் பயிர்ச் செய்கையில் ஈடுபடத்தக்க வகையிலான செயற்பாடுகள் வகுக்கப்பட வேண்டும். ஆனால் இவை குடாநாட்டில் இடம் பெறுவதாகத் தெரியவில்லை.

குடாநாட்டில் வளிமண்டலவியல் திணைக்களம் மூடப்பட்டு சுமார் 10 வருடங்கள் கடந்துவிட்டன. அரச நிர்வாகம் செயற்படத் தொடங்கி ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னரே தற்போது இந்த நிலையத்தை மீண்டும் இயக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதற்கான அனுமதியை விஞ்ஞான தொழில்நுட்ப அமைச்சு வழங்கியுள்ளது. அதன் பணிகள் ஆரம்பமாக இன்னும் எவ்வளவு காலம் பிடிக்குமோ?

## தாக்குதல் மர்மம் என்ன?

ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் சுரேஷ் அணியைச் சேர்ந்த உறுப்பினர்கள் இருவர் யாழ். நகரில் சன நடமாட்டம் குறைந்த முற்றவெளிப் பகுதியில் வைத்து கடந்த 19ஆம் திகதி முன்னிரவு வேளை கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

ஆயுதபாணிகள் சிலர் மேற்படி இருவரது கைகளையும் கண்களையும் கட்டிவிட்டுக் கண்டபடி தாக்கியுள்ளதாக சுரேஷ் அணியினர் முறையிட்டிருக்கின்றனர்.

புலிகளுக்கு உதவுகிறீர்களா? உங்கள் முகாமில் புலிகள் தங்குவதற்கு வசதி வழங்கியுள்ளீர்களா? எனக்கேட்டே இருவர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

வழமையாக இத்தகைய பாணியில் கேள்வி கேட்டுத் தாக்குவது படையினர்தான். ஆனால் படையினரின் பாணியில் மற்றொரு ஆயுதக்குழுவினரின் கைவரிசையே இது எனத் தெரியவந்துள்ளதாக சுரேஷ் அணி வட்டாரங்களில் கூறப்படுகிறது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பின் பெருமாள் அணியினரும் யாழ்ப்பாணத்தில் அலுவலகம் அமைத்து இயங்கி வருகின்றனர். இந்த இரு அணிகளிடையேயும் யாழ்ப்பாணத்தில் சண்டை சச்சரவுகள் இதற்குமுன்னர் ஏற்படவேயில்லை.

இனந்தெரியாத ஆயுதபாணிகளின் இந்தக் கைவரிசை தமிழ்க்கட்சிகளிடையே பகைமையை மூட்டிவிட எடுக்கப்பட்ட முயற்சி என்றே கட்சித் தரப்புகளில் நம்பப்படுகிறது.

தாக்குதல் இராணுவத்தினரின் பாணியில் நடத்தப்பட்டிருப்பதும் அதுபற்றிய செய்தி யாழ். பத்திரிகையில் வெளியாகி இருப்பதும் இதுவிடயத்தில் படைத்தரப்பின் கவனத்தை ஈர்த்துள்ளதாகத் தெரியவருகிறது.

- வலிகாமத்தான்

# பித்தன் பதில்கள்

அ.காசிநாதர், யாழ்ப்பாணம்



கே : யாழ்ப்பாணத்தில் கசிப்புத் தொல்லை அதிகரித்து வருகிறதே இதற்கு ஒரு முடிவு ஏற்படாதா?

ப : முன்னர் அது இருக்கவில்லை. தற்போது இருக்கிறது. மீண்டும் அது இல்லாமல் போகும் காலம் வரும்.

கே.குமரபரன், கொழும்பு

கே : நாடு முழுவதும் விலைவாசிகள் உயர்ந்துவிட்டன. கட்டணங்கள் அதிகரித்து விட்டன. போகிற போக்கைப் பார்த்தால் அரசு தன் பாட்டிலேயே ஏனைய விலைகளையும் உயர்த்திக்கொண்டு போகும் போல இருக்கிறதே?

ப : குட்டக் குட்டக் குனிபவன் மடையன். குனியக் குனியக் குட்டுபவனும் மடையன். இரு சாராருக்கும் தாம் செய்வது பழகிப் போய்விட்டதே! என்ன செய்வது!

ப.நோயல், கொழும்பு

கே : புலிகளுடன் பேச நானும் ஆசைப் படுகிறேன். எனது கனவு நனவாகுமா?

ப : அரசே பேச ஆசைப்படுகிறது. பிறகு உமக்கு ஏன் தயக்கம்?



பா.கோபி கிருஷ்ணா, கந்தசேனை

கே : மாணவர்களுக்குக் கல்வி கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்கள் பற்றி என்ன நினைக் கிறீர்கள்?

ப : மாணவி களுக்கு கல்வி கற்றுக் கொடுக்கும் இளம் ஆசிரியர்கள் பற்றி என்றால் நிறையக் கூற முடியும்.

க.அருளப்பு, பாண்டியூர்

கே : அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி புஷ்ஷுக்கு இந்தியப் பிரதமரின் பெயர் தெரியாதாமே? இந்தி யப் பத்திரிகை ஒன்று இதனை நையாண்டி செய்து செய்தி வெளியிட்டிருக்கிறதாம்.

ப : வெள்ளை மாளிகையில் நூறு பணிப் பெண்கள் இருந்தாலும் அத்தனை பணிப் பெண்களின் பெயர்களையும் இவர்கள் தெரிந்து வைத்திருப்பார்கள். பாவம் வாஜ்பாய்!

எம்.ஆர்.அஸ்வர், கல்முனை

கே : அமைச்சரவையில் தொடர்ந்து அங்கம் வகிப்பதா, இல்லையா என்பது குறித்து அடுத்த ஓரிரு நாள்களில் முடிவெடுக்கப் போவதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறுகிறாரே? அவர் பதவி துறந்து விடுவாரா?

ப : அடுக்கடுக்காகப் பல நிபந்தனைகளை விதித்துவிட்டுப் பின்னர் அரசில் சேர்ந்து கொண்டவர் ஹக்கீம். ஆகவே அவரது அச்சுறுத்தல்கள் குறித்து ஏன் அலட்டிக் கொள்கிறீர்கள்?

செந்திவேள், கொடிகாமம்

கே : யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறுவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறதாம். இது எதில் போய் முடியப் போகிறது?

ப : மண்ணை மட்டும் மீட்க முடியும். மக்களை மீட்க முடியாது போய்விடும்.

அன்னமுத்து சந்திரமோகன், பொகவந்தலாவை

கே : பித்தனே...! நம் நாட்டு அரசியல் போக்கைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப : அரசு ஒன்றுபட்ட இலங்கை என்ற வரையறைக்குள் பெரும்பான்மை சிங்கள மக்களின் சம்மதத்துடன் தீர்வு ஒன்றை எட்ட முயற்சிக்கிறது. இதன் மூலம் சர்வதேச மட்டத்தில் தனது புகழை உயர்த்த முடியும் என்று அம்மையார் நினைக்கிறார். ஆனால் புலிகள் தமிழீழம் என்ற வரையறைக்குள் இருந்து கொண்டு தீர்வு காண முயற்சிக்கின்றனர். சமாதானம் இன்னும் வெகு தூரத்தில்தான்.

ரா.சேகர், கம்பளை.

கே : சந்திரசேகரன்தான் எங்களின் உண்மையான தலைவர் பித்தனே...! உமது கருத்து என்ன?

ப : அப்படியானால் போலித் தலைவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள் என்று சொல்ல வருகிறீர் போலும்?



க.சுதர்சன், கொழும்பு

கே : டியர் பித்தன்...! வாழ்க்கையே கசப்பாகி உள்ளது. இனிப்பாக அமைய ஓர் ஐடியா சொல்லும்...!

ப : மனைவிக்குப் பயந்தவன் போல் நடித்துப் பாரும். அதன் பின்பு எல்லாமே இனிப்பாக இருக்கும்.

எஸ்.மோகனதாஸ், திருநெல்வேலி.

கே : இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்போம் என்று வருடக் கணக்காகக் கூறிக் கொண்டிருக்கும் அரசுகள் பற்றி...?

ப : ஓநாய் வருகிறது...! ஓநாய் வருகிறது...! என்று கூறிக் கொண்டிருந்தால் எப்போதாவது ஒரு நாள் ஓநாய் வந்துவிடலாம் அல்லவா? அப்படி ஒரு நப்பாசை.

ப.முரளி, வெள்ளவத்தை



கே : பித்தனே! எனது நண்பன் பஸ்ஸில் அடிக்கடி 'ஓஸி'ப் பயணம் செய்கி றான். அவனைத் திருத்த முடியாதா?

ப : பஸ் கட்டண உயர்வின் நேரடி விளைவு இது. அதுவும் தனியார் பஸ் என்றால் ஓஸிப் பயணிகளுக்கு குஷிதான்.

க.சுதர்சன், செங்கலடி

கே : இலக்கியக் காதலுக்கும் இன்றைய காதலுக்கும் இடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை விளக்க முடியுமா?

ப : காதல் ஒன்றுதான். நோக்கிலும் போக்கிலும் தான் வித்தியாசம்.

இரா. சேகரன், கண்டி

கே : எங்களை அழிப்பதற்காக தருவிக்கப்பட்ட கப்பல்கள் பற்றி...?

ப : இந்தியக் கரையோரப் பாதுகாப்புக் கப்பல் பற்றியா கூறுகிறீர்? அரசியலில் நிரந்தர நண்பனும் இல்லை. பகைவனும் இல்லை. ஆனால் இறுதியில் ஏமாறப் போவது இந்தியாதான்.

கே.ஏ.நஸீர், கல்கிஸை

கே : புலிகளுடன் பகைமை கொண்டிருந்த தமிழ் அரசியல் கட்சிகள் எல்லாம் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும் என்று கூறுவது ஏன்?

ப : புலிகளுடன் பேச்சு நடந்தாலும் சமாதானம் வராது என்று இவைகளுக்கு தெரிந்துவிட்டதோ, என்னவோ!

லெ.ஜெயந்தி, கொட்டாஞ்சேனை

கே : அரசையும் புலிகளையும் நெருங்கி வரச் செய்யும் ஒரு முயற்சியாக நோர்வேயின் விசேட தூதுவர் அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் மரதன் ஓட்டப் போட்டியில் ஈடுபட்டிருக்கிறாராமே...!

ப : பதினைந்து வருடங்களுக்கு முன்னர் இந்தியாவின் பார்த்தசாரதி ஆரம்பித்து வைத்த பணியைத் தற்போது நோர்வேயின் விசேட தூதுவர் செய்கிறார். இனப்பிரச்சினைத் தீர்வு முயற்சி இன்னும் ஆரம்பக்கட்டத்தில்தான்.

ஜே.டானியல், குருநகர்

கே : பத்திரிகை யாளர் நிமலராஜன் படுகொலையைக் கண்டித்து கொதித்தெழுந்தவர்கள் பத்திரிகையாளர் ஒருவர் மீதே கைவைத்து விட்டார்களே...! இது எதனைக் காட்டுகிறது.

ப : உணர்ச்சிகளுக்கு அடிமைப்பட்டுவிட்டார்கள் என்பதைக் காட்டுகிறது.

ஆர்.வசந்தி, தெஹிவளை

கே : பித்தனே...! விலைவாசி உயர்வு குறித்து ஆளும் கட்சி எம்.பிக்கள் பலர் நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனராமே?


ப : இந்த எம்.பிக்களின் வீட்டில் 'சொப்பிங்'குக்கு மனைவிமார் செல்வது இல்லை போலும்!

ரி. தர்ஷினி, தேவபுரம்

கே : விதியை மதியால் வெல்லலாம் என்று கூறுகிறார்களே, உண்மையா?

ப : அப்படியா கூறுகிறார்கள்? மடத்தனமாக நடந்துவிட்டு அதனால் ஏற்படும் விளைவைக் கூட விதி என்றல்லவா சொல்கிறார்கள்!

# அரசியல் அம்பலம்



வாகனக் கோட்டாவுக்குஇப்போதெல்லாம் கறுப்பு மார்க்கெட்டில் விலை அதிகம். அப்படிப்பட்ட வாகனக் கோட்டா கேட்டால், தூதுவர் பதவியும் பறிக்கப்படும் என அந்தக் காங்கிரஸின் சார்பில் போனஸ் எம்.பி.யாக இருந்தவருக்கு அச்சுறுத்தல் விடப்பட்டுள்ளதாம்.

அரச சபையில் இரண்டே மாதங்கள் அங்கம் வகித்த அந்த முன்னாள் போனஸ் எம்.பிக்கு ராஜதந்திர ஆசை காட்டி, தந்திரமாக அவரது பதவியை ராஜினாமா செய்ய வைத்தது பழைய கதை.

எண்ணிச் சில நாட்களே எம்.பியாக இருந்தாலும் எம்.பிக்குரிய கார்கோட்டா தனக்கே வேண்டும் என இப்போது அவர் அடம் பிடிப்பது புதிய கதை.

''சும்மா கிடைத்த மாட்டைப் பல்லைப் பிடுங்கிப் பதம் பார்க்காதே. அதிகம் குதித்தால் உள்ளதும் போய்விடும்'' என அதிரடியாகத் தலைவர் விடுத்த எச்சரிக்கையால் கதிகலங்கிப் போன அந்த முத்தானவர் மாறிமாறி அங்கும் இங்கும் அலைந்து ஆதரவு தேடுகிறாராம்.

இதைப் பார்த்து இன்னுமொரு மலையகத் தலைவரும் ''அடடா நானும் தந்திர சேகரனாக இல்லாமல் போய்விட்டேனே'' எனக் கவலைப்பட்டாலும் ஆச்சரியமில்லை.

***

ஈழத்துச் சிதம்பரமாம் காரை நகர் சிவன் கோயிலில் திருவெம்பாவை உற்சவ நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்று, ஒரு லட்சத்துக்கு அதிகமானவர்கள் கெடுபிடிகள் அற்ற நிலையில் வழிபட்டுச் செல்லக் காரணமாக இருந்தவர் 'டக்' தலைவர் தானாம்.(வாழ்க என்று வாழ்த்தலாம்)

காரைநகர் கடற்படை அதிகாரியுடன் 'டக்' தலைவர் பேசியபோது அடியார்கள் தங்கி வழிபாடு செய்வதற்கு ஒத்துழைப்பு கொடுப்பதாக உறுதியளித்தார் அந்த அதிகாரி. அன்றைய தினமே ஊர்ப் பெரியவர்களை அழைத்து விழா ஒழுங்கு சம்பந்தமாகப் பேசி பொன்னாலைப்பாலத்தில் சோதனைக் கெடுபிடிகளைத் தளர்த்த ஏற்பாடு செய்தாராம்.(இவரையும் வாழ்த்தலாம்)

ஆனால் காக்கை உட்கார பனம் பழம் விழுந்தது என்பது போல எல்லாம் தன்னால் தான் நடந்தது என்று ஒரு எம்.பி. பச்சையாகச் சொல்லி பிரபலம் தேடிக் கொண்டாராம். (அடப் பாவமே!)

எம்.பியின் இந்தச் செயலை விரும்பாத மணிவாசகச் சபைக்காரர்களும், ஊர்ப் பிரமுகர்களும் எம்.பியின் செயலை ஆட்சேபித்து கடிதங்கள் அனுப்பியிருக்கிறார்களாம். (என்ன பிரயோசனம்)

***

முஸ்லிம்களுக்கான காங்கிரஸுக்குள் ஒரே ஒரு தலைவரைத் தெரிவு செய்யும் விவகாரம் இன்னும் 4 மாதங்களுக்குத் தள்ளிப் போகும் வேளையில் பல சீனியர்களின் உள்ளக் குமுறல்கள் பட் பட் என வெடித்துச் சிதறியிருக்கின்றன.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஏற்படும் காலத்தில் முஸ்லிம்களின் விவகாரங்களைக் கவனிக்கவும், அதுபற்றி எடுத்துரைப்பது தொடர்பாகவும் ஒரு குழு அமைக்க வேண்டும்.

அத்தோடு வடக்கு முஸ்லிம்களின் மீள் குடியேற்றம் பற்றி ஆராயவும் ஒரு குழு வேண்டும்.

இப்படி இரு குழுக்களை அமைக்க வேண்டும் என்று கோரிக்கை விடப்படும் அதே நேரம் மேற்படி சீனியர்களின் உள்ளக் குமுறல் வெடிப்புகளினால் இன்னுமொரு முக்கிய கோரிக்கை அவர்களால் விடப்பட்டிருக்கிறது.

கட்சிக்குக் கிடைக்கும், அரச மட்டத்திலான பதவிக் கோட்டாக்கள், பணவருவாய்கள், வளங்கள் யாவும் உண்மையாகக் கட்சிக்குப் பங்களிப்பு செய்த சீனியர்களுக்கு வழங்கப்பட வேண்டுமாம்.

தலைவர் தெரிவு விவகாரம் மேலும் காலதாமதம் ஆகும் நிலையில் எந்தத் தலைவருக்கு ஆதரவு தெரிவிப்பது என்று இவர்களில் ஒரு சிலர் இன்னும் முடிவு எடுக்கவில்லை. மாறாக பதவிகள் பெற்றுக் கொள்வது பற்றிச் சிந்திக்கத் தொடங்கியிருக்கிறார்களாம்.

டாக்குத்தரான ஒரு சீனியர் லெப்பை இரு தலைவர்களில் எவருக்குமே ஆதரவு தரப் போவதில்லை என்று சூளுரைத்திருக்கிறாராம்.

பொதுத் தேர்தலுக்கு முன்பு நல்ல பதவி வகித்து வந்த அவருக்கு தேர்தலுக்குப் பின் ஒரு பதவி கூடக் கிடைக்கவில்லை. ''எனக்கு ஒரு பதவியைத் தர இரண்டு பேரில் ஒருவராவது யோசிக்கவில்லை. நான் ஏன் அவர்களுக்கு ஆதரவளிக்க வேண்டும்'' என்று அவர் காட்டமாகப் பேசியிருக்கிறார்.

கண்டிப் பகுதியைச் சேர்ந்த இணைத் தலைவருக்கு ஏற்கனவே ஆதரவாக இருந்த முன்னாள் செனட்டரானவர் இப்போது கம்பளைப் பகுதியைச் சேர்ந்த இணைத் தலைவரையே தனது தலைவராக வரிந்துள்ளாராம். நேரிலும், 5 கடிதங்களை அனுப்பியும் அவர் முன்னையவரிடம் பதவி தரும்படி கேட்டும், கிடைக்காத நிலையில், தானாகவே அழைத்துப் பதவி தந்த தாய்க்குலத் தலைவருக்குதானாம் இனி முழு ஆதரவும்.

மறைந்த தலைவருக்குக் காட்டிய அன்புக்கும் விசுவாசத்துக்குமான பரிசாகவே புதிய பதவியைக் கருதும் அவர் இனி 'மௌத்து' வரைக்கும் பக்கம் மாறமாட்டேன் என்று எந்த இடத்திலும் சொல்லத் தயார் என்று சவால் விட்டிருக்கிறாராம்.

வன்னியிலிருந்து பிரதியமைச்சரானவர் கண்டிப் பக்கத் தலைவரை ஆதரிப்பதால், வட மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் அதிஉயர் பீடத்தைச் சேர்ந்த இருவர் கம்பளைப் பகுதித் தலைவருக்கே ஆதரவு கொடுப்பதாகத் தீர்மானித்துவிட்டார்களாம்.

***

வடக்கில் பாவனைப் பொருட்களும், உணவுப் பொருட்களும் அதிக விலைக்கு விற்கப்படுவதற்குக் காரணம் கப்பல் கட்டணமும், ஜி.எஸ்.ரியும் என்று அதற்கு ஓரளவு நிவாரணமும் தேடியாயிற்று.

ஆனால் வன்னியில் உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்புக்கான கைங்கரியத்தைச் சில தமிழ் இயக்கங்கள் செய்து வருகின்றனவாம். பொருட்களை வியாபாரம் செய்வதில் இயக்கத்துக்கு இயக்கம் தனியுரிமை நிலைநாட்டப்பட்டிருப்பதைப் பற்றி இயக்கங்களின் தலைவர்களோடு நேரடியாகக் கேட்டபோது அதனை நேர்மையாக ஒத்துக்கொண்ட தலைவர்களை சுடர் ஒளி இங்கு பட்டியல் போட விரும்பவில்லை.

இப்போது வன்னியில் மீனின் விலை ஆனை விலை குதிரை விலையாக அதிகரித்திருப்பதற்கு மீன் வியாபாரத்தில் ஏகபோக உரிமை நிலைநாட்டியுள்ள ஒரு இயக்கத்தின் நடவடிக்கைகள்தானாம் காரணம்.

மன்னார், திருகோணமலைப் பகுதிகளில் இருந்து குறைந்த விலைக்கு மீனைக் கொண்டுவரும் இந்த இயக்கத்தின் உறுப்பினர்கள் அதிக இலாபம் உழைக்கும் நோக்கில் அநியாய விலையில் மீனை விற்கிறார்களாம். மீன் விலை மட்டுமன்றி கிழங்கு, மரக்கறி, வெங்காயம் போன்றவற்றின் விலைகளும் இயக்கங்களின் இந்த அடாவடி நடவடிக்கைகளினால் அதிகரித்திருக்கின்றன. ஆத்திரம் கொண்டுள்ள நுகர்வோர் இதற்கு எதிராகக் குரல் கொடுக்கத் தொடங்கியிருப்பதோடு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அரச அதிகாரிகளையும் நெருக்கத் தொடங்கியிருக்கிறார்களாம்.

***

சமாதானத்தின் பெயரால் ஒருவகையில் ஒன்றுசேர்ந்துள்ள தமிழ்க்கட்சிகளிடையே தாமரையிலைத் தண்ணீர் போலவும் சித்தம் சிவனே என்றும் செயற்படும் ஒரு இயக்கத்தின் தலைவருக்குக் 'கூட்டுக் கட்சி அமைப்பின்' மீது நம்பிக்கை இல்லையாம்.

கூட்டுக்கு விரோதியல்லன் என்று சொல்லும் அத்தலைவர் நம்பிக்கை வைக்காததற்கு இப்படித்தான் காரணம் கூறுகிறார்.

''கூட்டுக்கட்சியாக எவ்வளவுதான் முயன்றாலும் அண்மைக்காலத்துக்குள் சமாதானம், பேச்சுவார்த்தை எல்லாம் ஏற்படும் என்று நம்பமுடியாது. 11 தமிழ்க்கட்சிகள் எங்களைத்தான் தமிழ்மக்களின் ஏக பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டிருக்கின்றன என்று வடக்கு வானொலியொன்று அலறுகிறது. அந்த வானொலிக்கார இயக்கத்தினர் எங்களில் யார் மீதும் கைவைக்காதவரை இக்கூட்டு அமைப்பு இயங்கும். வானொலிக்காரர்களின் அந்தப் பட்டியலில் தங்களின் பெயர் இடம்பெறாமல் தப்பித்துக்கொள்ள முடியும் என்ற நம்பிக்கையில்தான் வானொலிக்காரர்களுக்கு ஆதரவாக இவர்கள் குரல் எழுப்புகிறார்கள்''

நல்ல காரணம்... நல்ல விளக்கம் ஐயா!

# என்ன பாவம் செய்தனரோ இந்த வன்னிப் பயணிகள்!

## நெஞ்சம் நிறைந்த சோகத்தை இங்கே கொட்டுகிறார்கள்

புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பகுதியில் இருந்து வவுனியாவுக்கு வருபவர்கள் திரும்பி வன்னி செல்வதில் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள். செலவு ஒருபுறம் சிரமம் மறுபுறம்.

எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு ஒருவாறாக வன்னிக்குச் செல்லும் பஸ்ஸில் ஏறும் அதிஷ்டம் கிடைத்தாலும் பல்வேறு காரணங்களால் பலர் பிரமனாளங் குளத்திலிருந்து வவுனியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுவிடுகிறார்கள்.

அடுத்த முறை வன்னி செல்வதற்கு அவர்கள் வவுனியாவில் பல நாட்கள் தவம் கிடக்க வேண்டியிருக்கிறது. கையில் பணம் இல்லாமல் பெரும் கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது. அங்குமில்லை, இங்குமில்லை என்ற நிலை அவர்களுக்கு. இவற்றைக் கடந்த வாரம் கண்டோம்.

பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் அவலங்களைத் தமது வாயாலேயே கூறுகிறார்கள். கேட்போமா?

*

வவுனியாவில் வந்த வேலைகள் முடிந்தபின் வன்னிக்குச் செல்வதற்காகப் பதிவுகளை மேற்கொண்டு விட்டுப் பயண நாட்களில் அதிகாலை 3 மணிக்கே மூட்டை முடிச்சுகளுடன் சென்று வவுனியா கச்சேரிக்கு முன்னாலுள்ள கண்டி வீதியில் உட்கார்ந்து விடுகிறோம்.

காலை ஐந்து மணியளவில் அங்கு காவலுக்கு நிற்கும் பொலிசார் கதவைத்திறந்து எங்களைக் கச்சேரி வளவிற்குள் செல்ல அனுமதிப்பர்.

அப்போது முண்டியடிப்பவர்களுக்கு ஆண், பெண் என்று பாராமல் தும்புத்தடியால் அடி விழுவதும் உண்டு.

இடிபட்டு நெரிபட்டு, அடிபட்டு உள்ளே சென்று அங்கே மாவட்ட ரீதியாகப் பிரித்து அடைக்கப்பட்டுள்ள பகுதியில் வரிசையில் நிற்போம்.

9 மணிக்கு வரும் கச்சேரி அதிகாரிகள் பெயர்களைப் பரிசீலனை செய்வார்கள். நாங்கள் கொண்டு செல்லும் பொதிகளின் எடையை நிறுத்துப் பார்ப்பார்கள். ஆக 40 கிலோ பொருட்களுடன் எங்களை பஸ்ஸிலே ஏற்றிவிடுவர்.

700 பேர் பஸ்களில் ஏற்றப்பட்டபின் செயலக ஊழியர்களுடனும், இராணுவப்பாதுகாப்புடனும் பிரமனாளங்குளம் நோக்கி பஸ்கள் புறப்படும்.

பிரமனாளங்குளப் பகுதியினை பஸ்கள் சென்று அடைந்ததும் அங்கே வன்னிக்காக உணவுப் பொருட்களை லொறிகளில் மாற்றி ஏற்றும் பகுதியில் பஸ்கள் நிறுத்தப்படும்.

அதேவேளை புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வரும் பயணிகளை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் அனுமதிக்கும் நடவடிக்கை அங்கே நடந்து கொண்டிருக்கும்.

வன்னியிலிருந்து வரும் 700 பயணிகள் உள்ளே அனுமதிக்கப்படுவர். அவர்களுக்கான விதிவிட அனுமதி வழங்கல் புலனாய்வுத் துறையினரின் விசாரணைகள் என்பன நடக்கும். அவை முடிவடைந்தபின் வவுனியாவிலிருந்து சென்ற பயணிகளை அங்கே இறக்கிவிட்டு நிற்கும் பஸ்களில் வன்னியில் இருந்து வந்த பயணிகள் ஏற்றப்படுவர். பஸ்கள் அந்தப் பயணிகளுடன் வவுனியாவுக்குத் திரும்பும்.

அதன் பின்னர் வவுனியாவிலிருந்து வந்து பிரமனாளங்குளப்பகுதியில் இறக்கிவிடப்பட்ட பயணிகளாகிய எங்களுடைய உடைமைகள் படையினரால் தீவிரமாக சோதனையிடப்படும். அதன் பின்னரே இராணுவக்கட்டுப்பாட்டுப்பகுதியைத் தாண்டி வன்னிக்குச் செல்ல அனுமதிக்கப்படுகின்றோம். வவுனியா செயலகத்தில் வைத்து எங்களின் பொதிகளை நிறுப்பதிலும் பிரமனாளங் குளத்தில் வைத்துபடையினர் எங்கள் உடைமைகளை அங்குவேறு, ஆணிவேறாக சோதனையிடுவதிலும் அதிகநேரம் செலவாகிவிடுகிறது. காரணம் வெகுசில அதிகாரிகளே இந்தப்பணிகளில் ஈடுபடுகின்றனர்.

நிறுவைகளுக்கும், சோதனைகளுக்கும் காலம் விரையமாவதை எவரும் கணக்கிலெடுப்பதில்லை.

மாலை 5 மணியுடன் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் தமது கண்காணிப்புப் பணிகளை நிறுத்திக் கொண்டு புறப்பட்டு விடுகின்றனர்.

மாலை 6 – 6.30 மணி வரை பயணிகளை அனுப்ப இராணுவம் முன்வந்தாலும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் அதற்கு உடன்படுவதில்லை. முன்னர் பொறுப்பாக இருந்த சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி ஒருவர் பயணிகள் வந்து முடியும் வரை கண்காணிப்புப் பணியில் ஈடுபட முன்வந்தார்.

ஆனால் தற்போது புதிதாக வந்துள்ள பிரதிநிதி 4.30 மணி அளவுடனேயே பயணிகளை அனுப்பும் பணியை நிறுத்தும்படி இராணுவத்தினருக்கு உத்தரவிட்டுவிடுகிறார். இதனால் நாம் பணச் செலவு, உடல் அலைச்சல் என்பவற்றிற்கு மத்தியில் திரும்பி வர வேண்டியிருக்கிறது என்று பயணிகள் அழாக்குறையாகக் கூறுகின்றனர்.

ஒரு முறை இரு முறை அல்ல 4 முறை திரும்பி வந்தவர்களும் இருக்கிறோம். நாம் வன்னிக்குச் செல்வதென்று புறப்பட்டு விட்டால் இருக்கும் பணத்திற்கெல்லாம் வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்கிவிடுவது வழக்கம். எமது வீடுகளுக்கு செல்லத் தேவையான பணம் மட்டுமே கையிலிருக்கும்.

> **பயணிகளைப் பதிவு செய்வதற்குப் பொறுப்பான அதிகாரி அரசாங்க அதிபர் முன்னிலையிலேயே எரிந்து விழுந்து கடுகடுப்பாகப் பேசுகிறார். பயணிகள் மீதும் அவர்கள் கொண்டுவரும் பொதிகள் மீதும் அவர் பழியைப்போடுகிறார்.**
>
> **ஒரு சில பஸ்களை ஒழுங்கு மாற்றி முன் கூட்டியே அனுப்புவது, ஆட்களையும் பொதிகளையும் ஆமைவேகத்தில் சோதனையிடுவது போன்ற குறைபாடுகள் நீக்கப்படும் என்று அரச அதிபர் உறுதி அளிக்கிறார்.**

இந்த நிலையில் திரும்பிவந்தால் எமக்கு பணக்கஷ்டம் ஏற்படுகிறது. நம்மில் பலர் இருக்கும் பணத்தை எல்லாம் செலவழித்துவிட்டு தங்கியிருக்கும் லொட்ஜுக்கும் அடுத்த வேளை உணவுக்கும் கூடப் பணமில்லாமலிருக்கிறோம். இனி வீடு செல்லப் பணத்திற்கு என்ன செய்வது என்று தெரியவில்லை!

செயலகத்திலிருந்து புறப்படும்போது அதிகாரிகள் தமக்குத் தெரிந்தவர்கள் செல்லும் பஸ்களை முதலில் அனுப்பி விடுகின்றனர். பிரமனாளங் குளத்தில் நிற்கும் போது பஸ்களுக்குப் பொறுப்பாக அங்கு வரும் கிராம சேவகர்கள் சில பஸ்களை ஒழுங்கு மாற்றி அனுப்பி விடுகின்றனர். இவற்றிற்கெல்லாம் அவர்கள் கணிசமான பணத்தை பயணிகளிடமிருந்து கறந்து விடுகின்றனர்.

நாங்கள் பயணம் செய்த பஸ் கடைசியாக நின்று திருப்பி அனுப்பப்படுகிறது. திருப்பி அனுப்பும்போது பஸ்காரர்கள் பயணிக்கும், பொதிகளுக்கும் கட்டணத்தை கறாராகக் கறந்துவிடுகின்றனர்.

அண்மையில் பிரமனாளங்குளம் பகுதிக்கு வந்த இராணுவ அதிகாரி ஒருவரும், அரச அதிபர் கணேஷும் நிலைமைகளைப் பார்வையிட்டனர். இனிமேல் பயணிகள் திரும்பிவரமாட்டார்கள் மேலதிக படையினரை அமர்த்திச் சோதனைகள் துரிதமாக்கப்படும் என்று அரச அதிபர் உறுதியளித்ததாகச் செய்திகள் வெளியாகின.

அந்தச் சந்தோஷத்தில் கடந்த 12ஆம் திகதி நாங்கள் பயணத்தை மேற்கொண்டால் – அங்கே வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதைதான். 261 பேர் திருப்பிவிடப்பட்டனர்.

அதேபோல் கடந்த 16ஆம் திகதி 14 பஸ்களில் பயணிகள் ஏற்றிச் செல்லப்பட்டனர் என்றார்கள்.

இவர்களுடைய பிரச்சனைகளில் 5 மணியுடன் நிறுத்தப்படும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க கண்காணிப்பை கொஞ்சம் கூட்டினால் பயணிகள் அனைவரும் பயணம் செய்ய முடியும் என்று கருத்து முன்வைக்கப்பட்டது. ஆயினும் 5 மணிக்கு இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து செல்லும் மக்கள் புலிகளின் கட்டுப்பாட்டுக்குச் சென்று அங்கும் சோதனைகளை முடிந்து வீடுகளுக்குச் செல்ல மறுநாள் காலையாகி விடுகிறதாம்.

இந்த நிலையில் நேரத்தை மேலும் கூட்டுவது இரவு வேளையில் பயணம் செய்யும் பயணிகளுக்கு அச்சுறுத்தலாக அமையுமென்பதால் நேரத்தை அதிகரிக்கும் கருத்து அதிகாரிகளாலும் நிராகரிக்கப்பட்டது.

எனவே இதற்கும் மாற்றுவழி என்ன என்று அறிவதற்குச் செயலக அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டோம். பயணிகள் அதிகாரிகளின் பேச்சைக் கேட்பதில்லை. முண்டியடித்து, வரிசைகளைக் குழப்பி அதிகாரிகளை வேலை செய்ய விடாது இடைஞ்சல் பண்ணுகிறார்கள். ஒவ்வொருவரும் தூக்க முடியாத அளவுக்கு பொதிகளைத் தூக்கி வருகிறார்கள். பொதிகளை நிறுப்பதிலும், சோதனையிடுவதிலும் தான் நேரம் விரயமாகிறது. மற்றப்படி எல்லாமே ஒழுங்காகத்தான் நடக்கின்றன என்றார் பயணிகள் பதிவிற்குப் பொறுப்பாக வவுனியா செயலகத்தில் இருக்கும் அதிகாரி.

பயணிகள் பெயரைப் பதிவதற்கும் பயணம் செய்வதற்கும் இடிபட்டு நெரிபடுகிறார்களே? மாற்று ஏற்பாடு செய்ய முடியாதா என்று கேட்டோம். அதற்கு, நாம் இந்தப் பயணிகள் போக்குவரத்துப் பகுதியை தனித் திணைக்களமாக்கி இயக்க வேண்டும். இவற்றையெல்லாம் விமர்சனம் செய்பவர்கள் தாங்களே வந்து இவைகளைச் செய்யட்டும் என்றார் அந்த அதிகாரி. வவுனியா அரச அதிபர் கணேஷின் அறையில் வைத்தே இவ்வாறு இந்த அதிகாரி கடுகடுப்பாகப் பேசினார். நாங்கள் குற்றச்சாட்டுக்களை அடுக்கிக் கொண்டே போக எல்லாவற்றிற்கும் இந்த அதிகாரி காரணம் ஏதுமின்றி கண்டபடி கோபம் கொண்டபடியே பேசிக் கொண்டிருந்தார்.

பின்னர் விசாரித்துப் பார்த்ததில் இந்த அதிகாரி பதியச் செல்லும் பயணிகள் விடயத்திலும் இதே விதமாகப் பாய்ந்து விழுகிறார் என்றும் இவரது இந்தக் கோபப் பாய்ச்சல்களே பயணிகளையும் கோபமடைய வைத்து அசம்பாவிதங்களுக்கு வழி சமைக்கின்றன என்றும் சொல்லப்பட்டது.

ஊழல்களின்றி செயலாற்றுவதானால் இவர் ஏன் இப்படி கோபிக்க வேண்டும் என்று பலரும் வினா எழுப்புகின்றனர்.

அரச அதிகாரிக்கு முன்னாலேயே எம்மீது கடுகடுப்பாகப் பேசும் அதிகாரி அப்பாவி மக்கள் முன் அமைதியாகவா இருக்கப் போகிறார்? இந்த நினைவோடு முன்னால் இருந்த அரச அதிபரிடம் நிலைமையை விளக்கினோம்.

மக்களை அதிகாலை 3 மணிக்கு செயலகத்திற்கு வரும்படி நாங்கள் யாரும் உத்தரவிடவில்லை. தாமாகவே நேரகாலத்தோடு வருபவர்களுக்கு நாம் எதுவும் செய்ய முடியாது. சோதனை நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த மேலதிக படையினரைக் கடமையில் ஈடுபடுத்தும்படி படை அதிகாரிகளைக் கேட்டிருக்கிறேன். இன்னும் ஒரு சில வாரங்களில் எல்லாம் சீராகும் என்றார் அரசாங்க அதிபர்.

பஸ்களை ஒழுங்கு மாற்றி அனுப்புவது பற்றி நாம் குறிப்பிட்டபோது அதுபற்றி அருகே இருந்த அதிகாரி பத்மநாதனிடம் அரச அதிபர் கேட்டார்.

அவசரமாகச் செல்லவேண்டிய பலர் இருக்கும் பஸ்கள் அவ்வாறு மாற்றி அனுப்பப்படுவதை அந்த அதிகாரி ஒப்புக்கொண்டார்.

இனிமேல் அவ்வாறு எதுவும் செய்ய வேண்டாம் என்று அரச அதிபர் கடுமையாக உத்தரவிட்டார்.

பயணிகள் குறிப்பிட்ட ஏனைய குற்றச் சாட்டுக்கள் பற்றி நாம் கேட்ட போது இவற்றிற்கெல்லாம் ஒரே தீர்வு செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் 700 பயணிகள் கண்டிப்பாக வன்னிக்குச் செல்ல வேண்டும். அதற்கு நான் துரித கதியில் நடவடிக்கை எடுக்கிறேன் என்றார்.

இரண்டு நாட்களின் பின் வவுனியா செயலக திட்டப் பணிப்பாளர் விஜயலட்சுமியுடன் தொடர்பு கொண்டு பயணிகள் திருப்பி அனுப்பப்படாமல் இருக்க ஏதாவது முன்னேற்றகரமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்று கேட்டோம்.

மேலதிக படையினர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளத்தக்கதான கொட்டில் வசதிகள் போதாது என்று சொல்லப்பட்டதால் மேலதிகமாகக் கொட்டில்களை அமைக்கும் பணி தற்போது பிரமனாளங்குளம் பகுதியில் நடைபெற்று வருகிறது. அது முடிந்ததும் மேலதிக படையினர் கடமைக்கு அமர்த்தப்பட்டு சோதனை நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இன்னும் ஒரு சில வாரங்களில் நிலைமை சீரடையுமென்றார்.

— வன்னிமைந்தன்



# பிளீஸ், அதை மட்டும் ஞாபகப் படுத்தாதீர்கள்

## கெஞ்சுகிறார் மாளவிகா

மாளவிகாவைப்பார்க்கும்போது ரசிகர்களின் நெஞ்சம் ஏக்கத்திலும் தூக்கத்திலும் ஏங்கி ஏறி இறங்கும்.

ஒரு திறமையான , அழகான நடிகையை சரியான விதத்தில் பயன்படுத்திக் கொள்ளாது, ரசிகர்களின் ஆசைகளைப் புரிந்து கொள்ள மறுத்துவிட்டது தமிழ்த்திரையுலகம்.

ஏதோ தனக்குத் தெரிந்த நடிப்பையும் போலியற்ற செழிப்பையும் கொண்டுள்ள நடமாடும் அழகுப் பொம்மை மாளவிகாவின் ஓரப்பார்வைக்கு ரசிகர்கள் மட்டுமல்லர் தயாரிப்பாளர்களும் ஏங்கினார்கள்.

'உன்னைத்தேடி'யில் அஜித்குமாருக்கு ஜோடியாக நடித்தபோது, ''மனம் படைத்த மாளவிகா எங்களையும் பார் மாளவிகா'' என்று ரசிகர்கள் மாளவிகா பின்னால் சுற்ற ஆரம்பித்தனர்.

இந்த நேரத்தில் தான் மாளவிகா 'பூப்பறிக்க வருகிறோம்' படத்தில் தன்னுடன் நடித்த அஜய்யைக் காதலிக்க ஆரம்பித்தார்.

பத்திரிகைகளும் இவரது காதல் விவகாரத்தைப் பெரிதாகப்போட்டு விளம்பரப்படுத்தின.

என்ன நடந்ததோ! சில காலங்கள் காணாமல் போயிருந்த

மாளவிகா சமீபத்தில் 'வெற்றிக்கொடி கட்டு' படத்தின் மூலம் மறு பிரவேசம் செய்தார்.

அதைத் தொடர்ந்து கார்த்திக் ஜோடியாக

மாளவிகா நடித்த 'சீனு' படமும் வெளிவந்தது.

'வெற்றிக்கொடி கட்டு' படத்தில் இடம்பெற்ற 'கறுப்புத்தான் எனக்குப்பிடிச்ச கலரு' பாடல் பிரபலமானது.

சில தெலுங்குப்படங்களில் ஒப்பந்தமாகி நடித்துக் கொண்டிருக்கிறார்.

அழகு, திறமை இருந்தும் மாளவிகா பரபரப்பாகப் பேசப்படாதது ஏன்?

அஜய் காதல் விவகாரத்தில் சிக்கியமையா?

அல்லது..! என்று நாம் குழம்பிக் கொண்டிருந்த போது, கோடம்பாக்கத்து வாசி ஒருவர்,

''அந்தப்பொண்ணு ரொம்ப அப்பாவிங்க. செட்டுக்குள்ள லைட் போய் வந்தாலும் எழுந்து நிற்கும்.

சினிமாவில பந்தா பார்ட்டிகளுக்குத்தான் மவுசு. ஒன்னுமே இல்லாததுகள் கூட இமய மலையையே இடுப்பில கட்டி வைச்சிருக்கிறது மாதிரி பந்தா விடும்போது, அழகும் திறமையும் இருக்கிற அந்தப் பொண்ணு அடக்க ஒடுக்கமாக இருக்கிறது தான் வாய்ப்பு வராததற்குக் காரணம்'' என்றார் பரிதாபத்துடன்.

இந்தக் குழப்பத்தைத் தீர்க்கும் பொறுப்பை மாளவிகாவிடமே விட்டோம்.

**கே: உங்களின் சொந்தப்பெயர் என்ன?**

ப: ஸ்வேதா

**கே: படிப்பு..?**

ப:பி.கொம், புனே-சிம்பியாஸ் கல்லூரியில் படித்து முடித்து விட்டு நடிப்பிற்கு வந்தேன்.

**கே: பிறந்த தினம்..?**

ப: ஜூலை 19....

**கே: நீங்கள் தமிழ்ப்பெண் போல் தோற்றமளிக்கிறீர்கள். ஓரளவு நன்றாக நடிக்கவும் செய்கிறீர்கள். அப்படி இருந்தும் பல படங்களில் நடிக்க முடியவில்லையே என்ன காரணம்?**

ப:இப்படிச் சொல்வதற்குக் கோபப்படக் கூடாது. எனது இந்த நிலைக்கு பத்திரிகைகள் தான் காரணம். நான் ஒரு கால கட்டத்தில் காதல் வசப்பட்டதைப் பெரிது படுத்தி எழுதி விட்டார்கள்.

இதனால் நான் கல்யாணமாகி செட்டிலாகி விட்டால், தங்கள் நிலைமை என்னாகுமோ என்று தயாரிப்பாளர்கள் என்னை ஒப்பந்தம் செய்யத் தயங்கினார்கள்.

**கே:குஷ்பு-சுந்தர், செல்வமணி-ரோஜா போன்ற நட்சத்திரக் காதலில் அஜய்- மாளவிகா பெயரும் இடம்பெறப் போகிறது என்று ரசிகர்கள் எதிர்பார்த்தார்கள்.**

**ஆனால் இப்போது அதைப்பற்றிய எந்தச் செய்தியும் இல்லாமல் விஷயம் 'புஸ்'என்று ஆகி விட்டதே.**



ப:பிளீஸ்! அதை மட்டும் ஞாபகப் படுத்தாதீர்கள். அதற்கு முற்றுப்புள்ளி வைத்து வெகு நாட்களாகி விட்டது.

வலியைப் பற்றிச் சொல்வதில் என்ன சந்தோஷம் இருக்கப் போகிறது.

இது எனக்கு மட்டும் உரியதல்ல, உங்களிடமும் ஏன் அனைவரிடமும்

'பிளாஷ்பேக்' காக ஒரு காதல் கதை இருக்கும்.

**கே: அஜய் இப்போது என்ன செய்கிறார்?**

ப: அதை அவரிடமே கேளுங்கள்.

**கே:காதலின் மேலுள்ள நம்பிக்கை போய் விட்டதா?**

ப:அப்படியில்லை. காதலின் மேல் நம்பிக்கை இருக்கிறது. மனிதர்களை சந்தோஷப்படுத்தி மனதைத் தென்றலாக குளிர்விப்பதும் காதல் தான். நபரைத் தேர்ந்தெடுப்பதில் தான் வெற்றியும் தோல்வியும் தங்கியிருக்கிறது.

**கே: தமிழ்த்திரையுலகில் நிலைப்பேன் என்ற நம்பிக்கை இருக்கிறதா?**

ப: இருக்கிறது. இங்கே விஷய ஞானம் உள்ளவர்கள் நிறைய இருக்கிறார்கள். சமீபத்தில் நான் நடித்த 'சீனு' படம் நல்ல உதாரணம். இன்னும் உயரங்களுக்குப் போவேன் என்ற நம்பிக்கை இருக்கிறது.

**கே:முன்னராயின் கிளாமராக நடித்தால், நின்று பிடிக்கலாம் என்ற ஒரு நிலைமை இருந்தது.**

**தற்போது மும்பை இறக்குமதிகள் முண்டியடித்துக்கொண்டு வரிசையில் நிற்பதனால் ஒரு நிலையைப் பிடிப்பது சிரமம் என்ற கருத்தைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

ப:அப்படி நான் நினைக்கவில்லை. இன்று மட்டுமல்ல அந்தக்காலத்திலும் சினிமாவுக்கு கிளாமர் தேவைப்படுவது யதார்த்தமான உண்மை.

ஆனால் அந்தக்காலத்தில் கவர்ச்சி நடனத்திற்கு என்று ஒருவரைத் தனியாக நடிக்க வைத்தார்கள். இப்போது என்னடாவென்றால் கதாநாயகியே கவர்ச்சியாக நடிக்க வேண்டியிருக்கிறது.

**கே:முத்தக்காட்சி சினிமாவில் சர்வ சாதாரணமாகி விட்டது. 'முத்தம் கொடுப்பது கூட மிகவும் மெக்கானிக்கலாக இருக்கிறது' என்று பிரபல நடிகை ஒருவர் கூறியிருக்கிறார். இதைப்பற்றி நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

ப: முத்தக்காட்சியில் நடிக்க மாட்டேன். நெருக்கமான சீனில் நடிக்கும் போதே அருவருப்பு ஏற்படுகிறது. முத்தக்காட்சியில் நடித்து விட்டு வீட்டு ஆட்களிடம் முகம் கொடுத்துப் பேசுவது எப்படி!

**கே:'உன்னைத்தேடி' படத்தில் அஜித் குமாருக்கு ஜோடியாக நடித்தீர்கள். அஜித்குமார் இப்போது பல படங்களில் நடித்து முன்னணி நடிகர்களில் ஒருவராகி விட்டார்.**

**ஆனால் உங்களுக்கு இன்னும் பெயர் சொல்லும் வேடங்கள் அமையவில்லையே?**

ப:அது அவரது அதிஷ்டம். என் நிலையைப்பற்றி ஏற்கனவே கூறி விட்டேன்.

**கே: நீங்கள் வரும்போது ரம்பா,சிம்ரன் என்று கலக்கிக் கொண்டிருந்தார்கள். இப்போது ஜோதிகா முன்னணியில் இருக்கிறார். இவர்களையெல்லாம் போட்டியானவர்களாக நினைக்கிறீர்களா?**

ப: ஆரோக்கியமான போட்டி எந்தத் துறையிலும் அவசியம் தான். யாரும் யாருக்கும் போட்டியாக வர முடியாது. அவரவருக்கு வரவேண்டிய புகழும் இடமும் விதிக்கப்பட்டிருக்கின்றன.

அது கிடைக்க வேண்டிய நேரத்தில் அவரவர்களுக்குக் கிடைத்தே தீரும். அதை யாராலும் மாற்ற முடியாது.

**கே: உங்களின் பலவீனம் எது?**

ப:யாரைப்பார்த்தாலும் உடனே இரக்கப்படுவது. பின்பு அவர்களே என்னைத் திட்டுவதும் அதற்காக வருத்தப்படுவதும்.

**கே: கிசுகிசு பற்றி..!**

ப:அது வேலையில்லாதவர்கள் செய்யும் தேவையில்லாத ஒன்று.

**கே:நீங்கள் மிகவும் கூச்ச சுபாவமுடையவர் என்று ஒரு பிரபல சஞ்சிகை கூறியிருந்ததே?**

ப:நான் இயல்பிலேயே அதிக கூச்ச சுபாவமுடையவள். கமெராவிற்கு முன்னால் நிற்கும்போது தற்காலிகமாக அதைத்தள்ளி வைப்பேன். குடும்பம் என்ற அமைப்புத்தான் உயர்வு தரும் என்று நம்புகிறேன்.

–ஷாம்

# பிரபுவின் பார்வையில் பிரதீக்ஷா!



தமிழ்த்திரையுலகில் நடித்துக் கொண்டிருக்கும் மூத்த நடிகர்களின் தெரிவு பிரதிக்ஷா. பிரபு தான் நடித்து வரும் 'சுப்பர் குடும்பம்' படத்திற்கு பிரதிக்ஷாவைச் சிபாரிசு செய்திருக்கிறார்.



முதலில் ரசிகாவை ஒப்பந்தம் செய்ய எண்ணியிருந்தாராம் டைரக்டர். இதை பிரபுவிடம் சொன்ன போது, ''நோ நோ பிரதிக்ஷாவை 'புக்' செய்யுங்க'' என்று பிரபுவே கூறியிருக்கிறார்.

*சூப்பர் குட் பிலிம்ஸாரின் பிரமாண்ட தயாரிப்பான 'பாப்பா' படத்தில் இரண்டாவது கதாநாயகியாக நடித்து வருபவர் அஞ்சலா ஜவேரி.இவருக்கு தமிழ்த்திரையுலகம் புதியதல்ல. ஏற்கனவே அஜித்குமாருடன் 'பகைவன்' படத்தில் நடித்தவர் தான்.*

*தமிழ் ரசிகர்களின் பாரா முகத்தினால் தெலுங்கு தேசம் போய்த்திரும்பியிருக்கிறார்.*

*கவர்ச்சியில் தாராளமயக் கொள்கையைக் கடைப்பிடிக்கும்*

*இந்தப் பைங்கிளி' உள்ளம் கொள்ளை போகுதே' யில் பிரபுதேவாவுடனும் நடித்து வருகிறார்.*



# கிளர்ச்சியில் தாராளம்!

# ஆள்பாதி ரீல்பாதி



வாட்டசாட்டமான இளைஞன். ஆனால் ஆள்பாதி ரீல்பாதி என்பது அவன் இலட்சியம்.

அங்கே சிறந்த தம்பதியிருக்கான போட்டி நடந்து கொண்டிருக்கிறது. சிறந்த தம்பதியர் தெரிவு செய்யப்பட்டு விட்டனர்.

அவர்களுடன் உரையாடிய வாட்டசாட்டமான இளைஞன் சில நிமிடங்களில் அவர்களைப் பிரித்து விடுகின்றான்.

இப்படியொரு காட்சி 'மிஸ்டர் நாரதர்' படத்துக்காக அண்மையில் படமாக்கப்பட்டது. வாட்டசாட்டமான இளைஞனாக சத்யராஜ் நடித்தார். இப்படத்தில் இவருக்கு ஜோடி திவ்யா உன்னி.

# வடிவுக்… விஜய…



# இனி இவர்…

✱ 'பட்ஜெட் பத்மநாபன்' வெற்றி… குடும்பத்தில் நடித்து வருகிறார் பிரபு. அ… நடிக்கப்போகும் படம் 'மிடில் கிளாஸ் ம… அபிராமி ஜோடியாக நடிக்கிறார்.

✱ 'மனுநீதி' படத்தில் நடித்து முடித்த… நெப்போலியன் 'கும்மாளம்' என்ற படத்தி…

✱ பிரசாந் நடிக்கும் புதிய படமொன்றி… பெயரிடப்பட்டுள்ளது.

# ஜோதிகாவுக்கு மிரட்டல் மிரட்டல்!

விஜயகாந்த், நெப்போலியன் போன்ற நடிகர்கள் நடிகர் சங்கத்தின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

தமக்கு வந்த புகார்களில் நேரடியாகத் தலையிட்டுத் தீர்த்து வைப்பதில் ஊக்கம் காட்டுகின்றனர்.

இப்போது நடிகை ஜோதிகா தனக்கு வந்த தொலைபேசி மிரட்டல் பற்றி சங்கத்தில் முறையிட்டிருக்கிறார்.



ஜோதிகாவின் புகார் அல்லவா? உடனே கவனித்து மர்மக்குரலுக்குரியவர் ஜோதிகா விடம் மன்னிப்பு கேட்கவேண்டும் என்று நடிகர் சங்கத்தில் தீர்மானித்திருக்கின்றனர்.

ஆனாலும் அந்த ஆசாமி ஜோதிகாவை விட்டபாடாக இல்லை. உன் அக்கா நக்மாவை விரட்டியது போல உன்னையும் விரட்டி விடுவேன் என்று மிரட்டி வருகிறாராம்.



# மாடலிங் மாதவன்ஜி

மாதவன் 'டும்டும்' படத்தில் நடித்து வருகின்றார். படப்பிடிப்பின் நடுவில் மாதவன் மாயவனாகி விடுகிறாராம்.

இப்படி படப்பிடிப்பின் நடுவில் மாயமாகி விளம்பரக் கம்பனிகளுக்கு போஸ் கொடுக்கிறார். விளம்பரத்துக்காக மோட்டார் சைக்கிளை ஓட்டி விட்டு குட்டைக் காற்சட்டை+ ரீ சேர்ட் சகிதம் செட்டினுள் நுழைந்த மாதவனிடம், ''என்ன ஸார் இப்படி மாடலிங் மாடலிங் என்று ஓடினால், சினிமா பாதிக்கப்படாதா?'' என்று கேட்டால்,

''மாடலிங் ஈஸியான வேலை. விரைவாக வேலைமுடிந்து விடுவதோடு பணமும் கையில் கிடைக்கிறது. கரும்புதின்னக் கசக்குமா?'' எம்மிடமே எதிர்க்கேள்வி கேட்கிறார்.

'வானவில்'லில் வர்ண ஜாலம் காட்டிய 'ராமி' நடிகை கவிதைப்பிரியர் என்பது அவரே சொன்ன தகவல்.

ஆனால் அவர் சொல்லாத தகவல் இது. கேரள முதல்வரின் உறவுக்காரரான லண்டன்வாசி ஒருவருக்கு மிகவும் நெருக்கமான நண்பியாகியிருக்கிறார்.

**

மானை வேட்டையாடி பொலிஸாரிடம் மாட்டுப்பட்ட மும்பை கான் நடிகரும் உலக அழகி பட்டத்தை வென்ற 'ஐஸ்' நடிகையும் காதலில் உருகுவது உலகறிந்த செய்தி.

பெற்றோர் போட்ட கண்டிசனால் கானோடு பேச மறுத்த நடிகை வீட்டுக்கதவையும் அடித்துச் சாத்தி விட்டார்.

காதல் பிரிவைத்தாங்க முடியாத கான் நள்ளிரவில் குடித்துவிட்டு வந்து 'ராத்திரிக்கு கதவைத்திறந்து உள்ளுக்கு விடடி' என்று ரகளை செய்தார். இந்த செய்தி பத்திரிகைகளிலும் வெளிவந்தது.

இப்போது 'ஐஸ்' மனமிரங்கி காதலனைச் சந்தித்திருக்கிறாராம். (ஓ! ஐஸ் உருகி விட்டதோ?)

**

சாஜஹானின் காதலியின் பெயர் கொண்ட முக்கல் முனகல் நடிகைக்கும் நட்சத்திரத்தின் ஆங்கிலப்பெயரில் காதல் இளவரசனை வைத்துப் படத்தை இயக்குபவருக்கும் இடையே ஏற்பட்ட சண்டையினால் நடிகை நடிக்க வேண்டிய சில காட்சிகளை 'டூப்'வைத்து படமாக்கி விட்டாராம் இயக்குனர்.



கொதித்தெழுந்த நடிகை ''அந்தாள் யோக்கியத்தை நான் சொன்னா அவனால் வெளியே தலை காட்ட முடியாது'' என மரியாதையில்லாமல் ஸ்டேட்மென்ட் விடுத்து வருகிறார்.

**

'நேற்று வரை யார் நீ' என்று கேள்வி கேட்டுக்கொண்டிருக்கும் படத்தில் நடித்த நடிகையிடம் 'ருசி பார்க்கவே ருசிதா' என்ற ரீதியில் வாலாட்டிப் பார்த்திருக்கிறார் மூத்த நடிகர் ஒருவர்.

இந்த பாட்சா என்னிடம் பலிக்காது என்ற ருசித நடிகை, மூத்த நடிகரின் வண்டவாளத்தை நடிகரின் மனைவியிடம் அவிழ்த்து விட்டு விட்டார். இப்போது மூத்த நடிகர் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டிருக்கிறார்.

**

முன்னணியில் நிற்கும் பேபி நடிகையின் கணவர் நடித்த படம் பொங்கலுக்கு வெளிவந்தது.

படம் வெளிவரும்போது பலத்த எதிர்பார்ப்பு இருந்தது என்னவோ உண்மைதான். ஆனால் பார்த்த பின்னர் அந்த எதிர்பார்ப்பு அற்றுப்போய் விட்டது.

நம் நாட்டிலும் இத்திரைப்படம் பொங்கலன்று ரிலீஸானது. சண்டை பிடித்து டிக்கெட் வாங்கி உள்ளே போய்ப்படத்தைப் பார்த்தவர்கள் வெளியே வரும் போது, நாம் வெளியே செய்ததை (சண்டை) உள்ளே (தியேட்டரில்)

கெட்டி…

செல…

பெயரை…

பெற்றநடிகை…

''உங்க மார்க்கெட் தான் இப்போ ஸ்டெடியாக இருக்கே. என்னையும் கொஞ்சம் சிபாரிசு பண்ணினால் என்ன? என்று கேட்டு நடிகரை நச்சரித்து வருகிறாராம். நடிகரும் பார்க்கலாம் என்று கூறித் தப்பித்து வருகிறார்.



# ...டுத்
# ...ட்டம்

...ன்று அவர்களிலும் அக்கறை.
...ன் என்னோடு சேர்ந்து கொஞ்சம்
...ளுக்குத் தண்ணீர் ஊற்றுமன்
... மனைவியைக் கூப்பிட்டார்.
...கோ கொழும்பில வந்திருந்து
...ட்டம் வைக்கப் பார்க்கிறியள் எனக்கும்
...கிடக்கு" இப்படிச் சொல்லிவிட்டு
...பாய்விட்டாள் பரிமளம்.
...னி அங்க அறையைப் பூட்டிக் கொண்டு
...கொண்டிருக்கிறியள்? நீங்கள் என்டாலும்
...ம் இந்தப் பூச்செடிகளுக்கு தண்ணீர்
..." என்று பிள்ளைகளைக்
...த்தார்.

...ன் கத்துறியள் கொழும்பில நீங்கள் தான்
...ம் போடுற ஆள். எங்களுக்கு கொம்பியூட்டர்
...ருகிறது எங்களைப் படிக்க விடுங்கோ"
... மகள் வீட்டு வாசலடியில் வந்து நின்று
...ல் மெதுவாக சொல்லிவிட்டுப் போனான்.
...டைய உதவியையும் கணபதியர்
...கவில்லை. என்றாலும் தனது அறிவுரையை
...க்குக் கொடுத்தார்.

...லக்கையை ஆட்டாட்டி உங்களுக்கெல்லாம்
...வந்து துலைக்கப்போகுது கிடவுங்கோ நான்
...லுவலைப் பார்க்கிறன் என்று சொல்லிவிட்டுத்
...டய கருமத்தில் கண்ணாகிவிட்டார்.

...னைந்து பரப்புக்காணியிலே தோட்டம் செய்து
...ம் முழுக்க வரம்பு வழியாக நடந்து
...ருக்கு இந்த இடம் ஒரு பரப்புக் காணிக்குள்ளே
...திரிந்து தண்ணீர் ஊற்றுகிறது நின்று கொண்டு
...இடத்தில் சுற்றுவது போலத்தான் அலுப்புத்
...யது. என்றாலும் வேலையைப் பெருப்பித்து
...பருமரக்கன்றுகளுக்கெல்லாம் பெருவாரியாகத்
தண்ணீரை அள்ளி ஊற்றினார். உடலுக்குக் களைப்பைக் கொடுக்கையில் இரவு நல்ல நித்திரை வரும் என்பதாக அவர் நினைக்கும் போது நல்ல சந்தோஷமாகவும் இருந்தது.

தைமாசியில் கொழும்பிலும் நல்ல பனி பெய்யும். சிறிய மரமெல்லாம் பனிக்குள் நனைந்து பார்ப்பதற்கு அழகாக இருக்கும். அவர்களது சின்னமகள் ஷாமினி காலையிலே டியூசனுக்கென்று வீட்டை விட்டு வெளிக்கிட்டுப் போவாள் அந்தநேரம் வீட்டு வாசலைவிட்டு வெளியே கால்வைத்தால் நெருக்கமாக வளர்ந்திருக்கும் அந்த மரங்களிலிருந்தெல்லாம் சொட்டச் சொட்ட வடியும் பனித்துளிகள் காலைக்குளிரோடு அவளை குளிப்பாட்டி விடும்.

"சீச்..சீ..மண்ணாங்கட்டி மரங்கள் பனித்துளி படாமல் இதுக்குள்ளால எப்படி நான் வெளியால போறது" என்று உடலை ஆயிரம் தடவை வளைத்து நெளித்துக் கொண்டு வெளியேறுவாள்.

மரங்கள் வளர்ந்து வந்து குடைபோல மூடியதால் அயல் வீடுகளில் வசிப்பவர்களினாலும் கணபதிக்கு தொல்லைகள் ஆரம்பித்தன. அநேக நாட்கள் "மதுறு மதுறு" என்று பக்கத்து வீட்டார் கணபதியை நோக்கி ஏதோ சொன்னார்கள்.

அவை ஒன்றும் அதிகம் விளங்கா விடினும் மரம் செடி கொடியால் நுளம்பு வருகிறது என்று அவர்கள் சொன்ன முறைப் பாடு மட்டும் இவருக்கு நன்றாக விளங்கியது. மனைவிக்கு இதைச் சொன்னால் அவளும் இந்தக் கதையைத் தூக்கிப் பிடிப்பாள் என்று அவர் அப்படியே இதை அமுக்கி விட்டுச் சும்மா இருந்து விட்டார்.

அன்று காலையில் கிணற்றடியில் நின்று பல் தேய்த்துக் கொண்டபடி மரங்களையெல்லாம் ஒரு நோட்டம் விட்டார் கணபதி. அவர் பார்வை மாமரத்தில் விழுந்ததுமே மகிழ்ச்சி தாங்காமல் எகிறிக் குதித்தார்.

மதிலை ஒட்டி மேலே வளர்ந்து கிடந்த அந்தக் கிளைகளின் நுனிகளில் மஞ்சள் நிறம் கொண்ட மெல்லிய காம்புகளில் பூமொட்டுக்கள் புதிதாகக் காட்சி கொடுத்தன.

"ஆய்ங்... மாமரம் பூக்கப் போகுது" என்று தன்னை மீறிக் கூவியபடி அவர் வாயைப் பிளந்தார்.

மனைவி மக்களுக்கெல்லாம் இந்தச் செய்தியை உற்சாகமாகச் சொன்னார். ஆனால், அவர்கள் ஒருவரும் இதைப்பற்றிக் கவனம் எடுக்கவில்லை.

என்றாலும் மனைவி பரிமளம் ஒரு முறை சமையல் அறையிலிருந்து வெளியே வந்து தொலைவில் நின்றவாறே பார்த்தாள்.

"மதிலுக்குப் பக்கமாகத்தான் மாபூத்திருக்கு. இந்த மரம் இனியும் வளரவளர அவங்களின்ரை வளவுக்க போய் குப்பை கொட்டப் போகுது" என்று தீர்க்க தரிசன விளக்கம் சொன்னாள்.

"உனக்கெப்பவுமே நல்லவார்த்தை வாயில் வராது. போ..போ..." என்று துரத்திவிட்டு அவள் போனதும் கணபதியும் பரிமளம் சொல்லிவிட்டுப் போனதை கொஞ்ச நேரம் ஆராய்ந்து பார்த்தப்படியே மூளையைக் குழப்பிக் கொண்டார்.

சிலநாளில் அந்த மரத்தின் ஒரு பகுதியில் மட்டும் பொன்நிறத்தில் பூக்கள் கொத்தாகப் பூத்துச் சரிந்தன. எல்லாம் அடுத்தவீட்டுக்காணியைப் பார்த்தே தலையை நீட்டிக்கொண்டிருந்தன. ஒவ்வொரு பூக் கொத்திலும் எண்ண முடியாத அளவிலே மிளகளவு காய்கள். நாளடைவில் அவை பருத்துவர ஒருநாள் கணபதி எண்ணிப்பார்க்க ஒரு கிளையில் முப்பதுக்கு மேல் இருந்தன.

மாமரம் என்ன இனம் என்று அவருக்குத் தெரியவில்லை. மாங்காய் பெருக்கவும் கிளைகள் பாரம் தாங்காமல் ஒவ்வொரு கெட்டும் அடுத்த வீட்டு மதிலுக்கு மேலாகச் சென்றன.

உடனே மரக் கிளைகளைத் தனது காணிக்குள் வளைத்துக் கட்டினால் அடுத்த வீட்டார்கள் என்ன நினைப்பார்களோ என்ற எண்ணத்தில் அப்போதே அவர் அந்தத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டார். போகட்டும் வருவதில் இருவரும் பாதி பாதி எடுக்கலாம் என்று மனதை ஆற்றினார்.

ஆனால், அவர் எண்ணியது போல் நடக்கவில்லை. அடுத்தவீட்டார் காய்ப்பருவத்திலேயே பிய்த்துப் பிடுங்கிவிட இவருக்குக் கால் பாகமே மிச்சமாகக் கிடைத்தது.

காய்த்து முடிய இனியும் அந்தக் கிளைகளை விட்டுவைப்பதில்லை என்று ரோஷத்தோடு அந்தப்பக்கம் போய் விட்டஎல்லாக் கிளைகளையும் வெட்டினார். வெட்டியபாகம் இனிமேல் பூக்காது என்பது அவர் நம்பிக்கை.


ஆனால், வெட்டிய அநேபக்கங்களில் இருந்து மீண்டும் பூப் பூத்தன. கணபதிக்கு இது அதிசயமாய்ப் போய்விட்டது.

மரத்துக்கும் நல்ல குணம் இருப்பது போல் அப்போதைக்கு அவருக்குப் பெரிய தத்துவம் ஒன்று புலப்பட்டது. தீமைசெய்தாலும் அதைப்பொறுத்து நன்மை செய்ய விளைகிறதே இந்த மரம்!

படிப்பினையை உணர்ந்து கொண்டவர் போல் மரத்தருகில் அவர் மலைத்து நின்றார்.

— நீ.பீ.அருளானந்தம்

...தவர்.
...க்கிப்
...பாது
...டும்
...போது
...சேர்ந்து
...காடி
...ம் அவசியம்
...தேவை.



...ந்
...வலை
...தல்
...ரமதிருப்தி.
...வி பிள்ளைகளும்
...இருக்காது வேலை
...ய வேண்டும் என்பதே
...ரின் கொள்கை சும்மா
...ந்தால் உடம்பு கெட்டுப் போய்

# மண்ணுக்கும் மாந்தருக்கும் இவர்களால் பெருமை

**யா**ழ்ப்பாணத்தில் மக்கள் சேவையில் மகத்தான சாதனை புரிந்தது சென். ஜோன்ஸ் அம்பியுலன்ஸ் அணி. இலங்கையில் மாவட்ட ரீதியில் நடத்தப்பட்ட பல்துறைப் போட்டிகளில் அதிக வெற்றிகளைப் பெற்று யாழ் மண்ணுக்குப் பெருமை தேடித்தந்திருக்கிறார்கள் சென் ஜோன்ஸ் அணியினர். அவர்களைப் பாராட்டும் விதத்தில் கொழும்பு ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் விழா எடுக்கப்பட்டது.

கலை, கலாசார நிகழ்வுகளுடன் கூடிய இவ்விழாவை சூரியன் எப்.எம்.வானொலியும் "சங்கநாதம்" சஞ்சிகையும் இணைந்து வழங்கின. சிறப்பு அதிதியாக ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத் தலைவர் உபாலி குணவர்த்தன கலந்து கொண்டார். "யாழ்ப்பாண மண் வாசனையை அனைவரும் சுவாசிக்கும் சூழ்நிலை மீண்டும் உருவாக வேண்டும்" என்று அவர் வாழ்த்தினார்.

"தமிழர்களுக்குப் பெருமையைத் தேடித்தந்த யாழ் சென். ஜோன்ஸ் அணியினரை கொழும்பில் பாராட்டிக் கௌரவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன்" என்று குறிப்பிட்டார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் எஸ்.கந்தசாமி.

யாழ் சென். ஜோன்ஸ் அம்பியுலன்ஸ் அணியினர் தேசிய கீதம் இசைத்தனர். அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற போட்டியில் சிங்கள மொழியில் தேசிய கீதம் இசைத்து யாழ் சென். ஜோன்ஸ் பிரிவினர் முதலாம் இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொண்ட "உதயன்", "சுடர் ஒளி" அதிபர் ஈ.சரவணபவன், "தினக்குரல்" அதிபர் எஸ்.பி.சாமி, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் எஸ்.கந்தசாமி, சூரியன் எப்.எம். பொறுப்பதிகாரி நடராஜசிவம், திருமதி ஜெயந்தி விநோதன் ஆகியோர் கேடயம் வழங்கி சென். ஜோன்ஸ் அணியினரைப் பாராட்டினர். சின்னத்துரை தனபாலா பதக்கங்கள் சூட்டினார். லயன் சிவானந்தன் சென். ஜோன்ஸ் பிரிவினரைப் பாராட்டிப் பொற்கிழி வழங்கினார்.

சென். ஜோன்ஸ் பிரிவினரின் கலை கலாசார நிகழ்ச்சிகள் "மார்கழித் திங்களல்லவா" நாட்டிய நிகழ்ச்சியுடன் ஆரம்பமாகின.

தொடர்ந்து "யாழ் நிலையில் சென் ஜோன்ஸ் அம்பியுலன்ஸ் படை உதவி" காலனை வென்ற முதலுதவி" ஆகிய தலைப்புகளில் நாடகங்களும் நடனமும் இடம் பெற்றன.

சத்தியவான் சாவித்திரி, பொய்க்கால் நகைச்சுவை, காத்தவராயன் கூத்து போன்ற தமிழருக்கே உரித்தான பல பாரம்பரியக் கூத்துக்களும் இடம் பெற்றன.

"சிகரம் என்ற தலைப்பில் ஆண், பெண் என இருபாலாரும் சேர்ந்து நடத்திய உடற்பயிற்சிகள் அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தன.

மேடையேறிய நாடகங்கள் யாழ்ப்பாண மக்களின் சொந்த அனுபவங்களை வெளிப்படுத்துவனவாக அமைந்திருந்தன. போர்ச் சூழலில் யாழ் மக்களின் நிகழ்வுகள், நிலைப்பாடுகள், இன்ப துன்பங்கள் ஆகியவற்றை வெகு துல்லியமாக எடுத்துக்காட்டின. சைகை நடிப்பிலான நாடகம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் யாழ்ப்பாண மக்களின் கலாசாரத்தைப் பின்பற்றியனவாக அமைந்திருந்தன.

அனைத்துக் கலை கலாசார நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு சிறப்பித்தவர்கள் எல்லோரும் சென் ஜோன்ஸ் அம்பியு லன்ஸ் இளம் உறுப்பினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் மோதல்களுக்கு மத்தியிலும் தம் உயிரைத் துச்சமெனமதித்து மக்களுக்குத் தமது சேவைகளைக் காலம், நேரம் பாராது செய்பவர்கள் சென் ஜோன்ஸ் அம்பியுலன்ஸ் பிரிவினர். அவர்களுக்குத் தலைநகரில் விழா எடுத்து அவர்களைச் சிறப்பித்தது மிகவும் சிறந்த பணியாகும்.

— அருள், பிறேம்


இலவச ஆங்கில பாடநெறி V.P.P மூலம்

*சரளமாக ஆங்கிலம் எழுத, பேச, வாசிக்க 90 நாட்களில் பயிற்சி அளிக்கும் தபால் மூல பாடநெறி*

**SPOKEN ENGLISH**

பாடநெறி பதிவு கட்டணம் மட்டும் அறவிடப்படும்

3 பாடத்தொகுதிகள் இலவச File கவர் இலவச மாணவ அடையாள அட்டை என்பன உங்கள் வீட்டுக்கு கிடைத்ததன் பின்னர் பாடநெறி பதிவு கட்டணத்தை செலுத்தலாம். மேலதிக விபரங்களுக்கு ரூபா 2/- முத்திரை ஒட்டப்பட்ட நீள் கடித உறையை அனுப்பவும் or தொடர்பு கொள்ளவும்

**J.E.I கல்வி நிலையம்**

No. 4.a. Dharmasena Mw, Kandy. 074-475121


Shakthi
சக்தி TV

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 11.00-11.30 | | | | | | பெப்சி உங்கள் சொய்ஸ் | காலைக்கதிர் (நேரடி ஒளிபரப்பு) |
| 11.30-12.00 | | | | | | பாட்டுக்குப் பாட்டு | |
| 12.00-12.30 | | | | | | பொலிஸ் டயரி | |
| 12.30-13.00 | | | | | | ஸ்டார் சமையல் | இசைக்கோலம் |
| 13.00-13.30 | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சக்தி வீக்கெண்ட் மெட்னி | சக்தி வீக்கெண்ட் மெட்னி |
| 13.30-14.00 | குலவிளக்கு | குலவிளக்கு | குலவிளக்கு | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | | |
| 14.00-14.30 | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | | |
| 14.30-15.00 | | | | | | | |
| 15.30-16.00 | | | | | | நலந்தானா | திரைத் தென்றல் |
| 16.00-16.30 | | | | | | டொப் 10 மூவிஸ் | கோபி |
| 16.30-17.00 | சுப்பர் 10 | கலைச்சோலை | நம்மநேரம் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | திரை விமர்சனம் | அரட்டை அரங்கம் | ஸ்டார் ஷோ |
| 17.00-17.30 | தமிழ் கார்ட்டூன் | தில்லானா தில்லானா | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | தமிழ் கார்ட்டூன் | பூஞ்சோலை | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 17.30-18.00 | கிருஷ்ணா தாசி | கிருஷ்ணா தாசி | கிருஷ்ணா தாசி | கிருஷ்ணா தாசி | கிருஷ்ணா தாசி | இளமை புதுமை | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 18.00-18.30 | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | மீண்டும் கோமாளிகள் | காற்றாய் வருவேன் | கேள்வியின் நாயகனே | இப்படிக்கு நீங்கள் |
| 18.30-19.00 | அம்மா | அம்மா | அம்மா | அம்மா | அம்மா | புதுப்பாடல் | ஆனந்தபவன் |
| 19.00-19.30 | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | சாவித்திரி | சப்தஸ்வரம் |
| 19.30-20.00 | கதைநேரம் | தித்திக்கும் ஓசை | சத்யா | சீமான்களே சீமாட்டிகளே | பணம், பெண் பாசம் | இளையகானம் | பஞ்சவர்ணம் |
| 20.00-20.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| 20.30-21.00 | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | நிம்மதி உங்கள்... | ஜன்னல் |

# கல்யாணத்துக்கு ஜேர்மனி சென்ற பெண்ணுக்கு அதிர்ச்சி

## கற்பு பற்றி எதுவும் தெரியாத நீதிமன்றத்தில் அதற்காக வாதாடி வெற்றி

செக்கியுரிட்டி டானியலும், கொம்யுனிகேஷன் லோகனும் தமக்கு முன்னரே தேரடியில் வந்து உட்கார்ந்து விட்டதை அவதானித்தபடியே விநாசியரும் பரமலிங்கம் மாஸ்டரும் வந்து அமர்ந்தனர்.

வாங்கோ மாஸ்டர், இண்டைக்கு லோகன் கெதியிலை வந்து இருந்து கொண்டு மாஸ்டரை இன்னும் காணேல்லை - காணேல்லை என்று தவிக்குது என்று நக்கல் சிரிப்புடன் கூறினாள் சின்னாச்சி.

மாஸ்டர் இன்று கற்பு வழக்குப் பற்றிச் சொல்லுறன் என்றார். அதான் லோகன் இப்பிடி அவதிப்படுறார். விஷயத்தைப் போட்டுடைத்தார் விநாசியர். சிரித்துக் கொண்டே பேச்சைத் தொடங்கினார் மாஸ்டர்.

ஜேர்மனியிலை இருக்கிற எங்கடை ஒரு பொடியனுக்கு இங்கை கலியாணம் பேசி பொம்பிளையை ஜேர்மனிக்கு அனுப்பி வைச்சினம்.

அந்தப் பிள்ளையும் ஜேர்மனிக்குப் போய்ச் சேர்ந்தது. அங்கை கலியாண ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்த போது, மாப்பிள்ளையும் பொம்பிளையும் ஒரே வீட்டிலை தான் தங்கியிருந்தவையாம். ஒன்றரை மாசம் கழிச்சுத் தான் கலியாண நாள் குறிக்கப்பட்டதாம்.

ஆனால் அவை தாலி கட்ட முன்னாலேயே ஒரே வீட்டில் ஒன்றாக இருக்கத் தொடங்கி விட்டினம்.

கதை போகும் திசையைப் புரிந்து கொண்ட சின்னாச்சி நைசாகத் திரும்பி வியாபாரத்தில் கவனத்தைச் செலுத்த ஆரம்பித்தாள்.

இதனை உணர்ந்த மாஸ்டர் சற்றுத் தணிந்த குரலில் மேலும் தொடர்ந்தார்.

இப்படி ஒரு மாதம் ஓடின பிறகு தான் பிரச்சினை ஒன்று முளைத்தது. பொடிப்பிள்ளை ஏற்கனவே ஜேர்மன்காரி ஒருத்தியைக் கல்யாணம் கட்டியிருந்தாராம். அந்தப் பெட்டை ஆறு மாசக் கர்ப்பிணியாம். அவள் இவர் தங்கியிருந்த வீட்டுக்குத் தேடி நேராக வந்திட்டாள்.

''ஏன் மாஸ்டர், இந்த விஷயம் இங்கை இருந்து போனவவுக்கு தெரியாதே?'' கேட்டான் டானியல்.

எங்கடை ஆள் வலு கெட்டிக்காரன். வெள்ளைக்காரியோட தன்ரை வீட்டிலை குடும்பம் நடத்திக் கொண்டிருந்தவர். இலங்கையிலை இருந்து போன பொம்பிளையை விமான நிலையத்திலை இருந்து நேரா வேறை ஒரு வாடகை வீட்டுக்குக் கொண்டு போய் தங்கினவர்.

எங்கடை ஆட்கள் கோள் மூட்டுறதிலை வல்லவையெல்லே. தான் லண்டனுக்கு போட்டு வாறன் என்று ஜேர்மன் காரிக்குச் சொல்லிப் போட்டு மற்ற வீட்டில் தங்கியிருந்திருக்கிறார். இதை யாரோ வெள்ளைக்காரிட்டைச் சொல்லிப் போட்டினம். அதுதான் அவள் ஆறு மாசக் கர்ப்பத்தோட நேரா வந்து இவரைப் பிடிச்சுப் போட்டாள்.

''அவர் பாடு அவ்வளவுதானோ?'' ஆவலாகக் கதையுடன் ஒன்றியிருந்த லோகன் கேட்டான்.

அவ்வளவு கெதியிலை முடியிற விஷயமே. பொடிப் பிள்ளை ஆடு திருடின கள்ளன் மாதிரி ஒன்றும் பேசாமல் திருதிருவென்று விழித்தாராம்.

இங்கையிருந்து போனவ அழுது கொண்டு நின்றாவாம். பார்த்தாள் ஜேர்மன்காரி நேராகப் போய் பொலிஸிலை சொல்லி வழக்குப் போட்டுட்டாளாம்.

வழக்கும் விசாரணைக்கு வந்ததாம். இங்கிருந்து போன பிள்ளைக்கு மொழி பெயர்ப்பாளர் ஒருவரை ஒழுங்கு செய்திருந்ததாம்.

அவர் தான் இவ தமிழிலை சொல்லுறதை நீதிபதிகள் 7 பேருக்கும் ஜேர்மன் மொழியிலை சொன்னாராம்.

நீதிபதியிலை ஒருத்தர், ஜேர்மன்காரிக்கும், பொடியனுக்கும் கலியாணம் ஆகி அவ இப்ப ஆறு மாசம் கர்ப்பிணி. ஆனால் இங்கையிருந்து போனவவுக்கும் அவருக்கும் கலியாணம் ஆக வில்லை. ஆனபடியால் ஜேர்மன்காரிக்காக இவ விட்டுக் கொடுக்கலாமே என்று கேட்டாராம்.

அதுக்குஎங்கடை பிள்ளை, கலியாணம் கட்டாவிட்டாலும், நானும் அவரும் ஒன்றாக இருந்திட்டம். இனி எப்படிப் பிரியிறது என்றாவாம்.

ஜேர்மனிய கலாசாரத்தில் வளர்ந்த நீதிபதிகளுக்கு இந்த விஷயம் புரியவில்லையாம். ஒன்றாக வாழ்ந்தால் என்ன? கலியாணம் தான் ஆகவில்லையே என்று திருப்பிக் கேட்டினமாம்.

அதுக்கு முக்கியமான ஒன்றை அவரிடம் இழந்து விட்டதாக இந்தப் பிள்ளை கூறியிருக்கு.


அதுக்குநீதிபதி, அதுக்கென்ன இழந்ததற்கு உண்டான நஷ்டஈட்டை பொடியனிட்டை வாங்கித் தாறம் என்றாராம். அது விலைமதிப்பில்லாதது. அதைத் தான் பொடியனிடம் இழந்து விட்டதாக பெட்டை சொன்னது. ஜேர்மனி விமான நிலையத்திலை இறங்கும் போது பயணிகளிடம் உள்ள விலை உயர்ந்த பொருள்களின் விவரங்களை பட்டியலிட்டு அதிகாரிகளிடம் தெரிவிக்க வேண்டுமாம்.

இதைச் சுட்டிக் காட்டிய நீதிபதி, நீர் இவரிட்டை இழந்ததாகக் கூறும் விலைமதிப்பில்லாத பொருளைப் பற்றி விமானநிலையத்தில் குறிப்பிட வில்லையே என்று கேட்டாராம்.

இதுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாத எங்கடை பிள்ளை இலங்கைத் தமிழரான மொழிபெயர்ப்பாளரிட்டை, கற்பைப் பற்றி உங்களுக்குத் தெரியாதா? அதைத் தான் அவரிட்டை இழந்தனான். ஆனபடியால் அவரைத் தவிர வேறு யாரையும் நான் கலியாணம் கட்ட ஏலாது என்று நீதிபதிக்கு விளக்குங்கோவன் என்றாவாம்.

அதுக்கு மொழி பெயர்ப்பாளர், ''ஜேர்மன் மொழியிலை கற்புக்கு அர்த்தம் இருந்தா நான் எப்பவோ சொல்லியிருப்பன். கற்பை ஜேர்மன் மொழியிலை எப்பிடிச் சொல்வது என்று தெரியாமத் தானே நானும் திக்குமுக்காடுறன்'' என்றாராம். இவை இரண்டு பேரும் கதைபடுறதைப் பார்த்த பெண் நீதிபதி ஒருத்தர் தனக்கு ஆங்கிலம் தெரியுமென்று சொல்ல, மொழி பெயர்ப்பாளரும் ஒரு மாதிரி கற்பைப் பற்றி ஆங்கிலத்தில் விளக்கினாராம். பிறகு பெண் நீதிபதி ஜேர்மன் மொழியிலை அதை மற்ற நீதிபதிகளுக்கு சொல்ல அவை விழுந்து விழுந்து சிரிச்சினமாம்.

ஏனென்றால் கற்பு என்ற ஒன்றைப் பற்றி அவை அப்பதான் கேள்விப்பட்டவையாம். இந்தக் கூத்தையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த ஜேர்மன்காரி இலங்கைத் தமிழர்களுடைய கலாசாரத்தை விரும்பித்தான் நான் இவரைக் கலியாணம் கட்டினனான். அவையின்ரை கலாசாரப்படி இங்கையிருந்து போனவ வேற கல்யாணம் கட்ட ஏலாது. ஆனால் ஜேர்மனிய கலாசாரப்படி இது ஒரு பெரிய விஷயமில்லை. ஆனபடியால்



தேரடி அரட்டை

கட்டின புருஷனை அவவுக்கு விட்டுக் கொடுக்கிறன் என்று கூறிவிட்டுப் போட்டாவாம்.

அவவுக்கு நஷ்ட ஈடாக பொடியன் 25 ஆயிரம் டொச்மார்க் கொடுக்கச் சொல்லி நீதிமன்றம் தீர்ப்பளித்ததாம். இந்த வழக்கு ஜேர்மனியிலை பிரபலமாகப் பேசப்படுதாம். வழக்கத்தைவிட அதிக நேரம் தொடர்ந்து பேசியதால் களைப்படைந்த மாஸ்டர் கைகளை மணலில் ஊன்றி ஆறுதலடைந்தார்.

கற்பை ஒருவனிடம் கொடுத்ததால் அவனே கதி என்று இருக்கிற எங்கடை கலாசாரத்துக்கும் ஆறு மாதக் குழந்தையை வயிற்றில் சுமந்த போதும் 25 ஆயிரம் மார்க்கை வாங்கிக் கொண்டு கட்டின புருஷனை விட்டிட்டுப் போற மேலை நாட்டு கலாசாரத்துக்கும் இடையிலை இருக்கிற வித்தியாசத்தை இந்த வழக்கு எடுத்துக் காட்டுது. விமர்சித்தார் விநாசியர்.

''பிறகு இங்கை இருந்து போனவையையும் அந்தப் பொடியன் கலியாணம் கட்டிப் போட்டானோ?'' ஏக்கத்துடன் கேட்டான் கலியாணம் ஆகாத லோகன்.

''தனக்கு ஒருமுறை கூட கலியாணம் ஆகாமலிருக்க, அந்தப் பொடியன் வெள்ளைக்காரியையும் கட்டி, பிறகு இங்கை இருந்து போனவவையும் கட்டினது லோகனுக்குப் பொறாமையாக இருக்குதாம் அண்ணை'' என்று கடித்தான் டானியல்.

''செருப்பாலை அடிக்க வேணும்'' திடீரென்று உறுமிய சின்னாச்சியின் குரலால் திடுக்கிட்ட அனைவரும் அவள் பக்கம் பார்வையைத் திருப்பினர்.

இந்த மாதிரி அங்கை ஒரு கலியாணத்தைக் கட்டிப் போட்டு இங்கையிருந்தும் ஒரு பிள்ளையைக் கலியாணம் கட்டக் கூப்பிடுறது எவ்வளவு அயோக்கியத்தனம். சீறினாள் சின்னாச்சி.

அதுவரை நேரமும் மாஸ்டர் கூறியதைக் கேட்காமல் இருப்பது போல் நடித்த சின்னாச்சி ஒரு சொல் விடாமல் கேட்டிருப்பது அப்போது தான் மற்றவர்களுக்குப் புரிந்தது.

அது சரிதான் சின்னாச்சி, ஆனால் தோளுக்கு மேல் வளர்ந்த பிள்ளைகள் தங்கடை விருப்பத்தின்படி தான் நடக்க வேணும், தாங்கள் சொல்லுற பிள்ளையைத் தான் கட்ட வேணும் என்று பெற்றார் கட்டாயப்படுத்துவதால் தான் வேறு வழியில்லாமல் தாங்கள் அங்கை கட்டின கலியாணத்தை மறைச்சு பெற்றோர் பார்த்த பொம்புளையையும் கூப்பிடுற நிலைமை ஏற்படுகிறது என்றார் விநாசியர்.

''அதெப்படி அண்ணை நியாயமாகும், வெள்ளைக்காரிய கலியாணம் கட்ட வெளிக்கிட்டவருக்கு அதை தாய், தகப்பனிட்டை சொல்லவும் துணிவு வேணும் அதை விட்டுட்டு ஒரு பிள்ளையின்ரை வாழ்க்கையை நாசமாக்குறதோ?'' கேட்டான் டானியல்.

''ஏன், இங்கை இருந்து போறவைக்கு அறிவில்லையோ, வெளிநாட்டு மாப்பிள்ளை என்றவுடன் விழுந்தடிச்சு ஓடுறவை ஒழுங்கா விசாரிச்சுப் போட்டு போகலாமே'' உள்ளூர் மாப்பிள்ளையான லோகன் தனக்குப் பெண் கிடைக்காததாலோ என்னவோ குமுறினான்.

இனிமேல் இங்கிருந்து வெளிநாட்டிலை இருக்கிறவையைக் கட்டப் போறவை கொஞ்சம் கவனமாக விசாரிச்சு அறிஞ்ச பிறகு போறது தான் நல்லது. தொடங்கிய கதைக்கு தானே முற்றுப்புள்ளி வைத்தார் மாஸ்டர். வெளிநாட்டிலை கற்புக்கு விளக்கம் சொன்னது சரி மாஸ்டர். கொழும்பிலை இதுக்கு மாறாக சில விஷயங்கள் நடக்குது தெரியுமோ? என்ற விநாசியரை அனைவரும் கேள்விக்குறியுடன் நோக்கினார்கள்.

கொழும்பிலை லொட்ஜ் ஒன்றிலை தங்கியிருக்கிற தனது மனைவிக்கு வெளிநாட்டிலை இருக்கிற கணவன் இலங்கைக்கு வந்த நண்பர் மூலம் காசு கொடுத்துவிட்டவராம்.

இங்கு வந்த நண்பர் தனக்குத் தெரிந்தவரிடம் லொட்ஜ் முகவரியையும் காசையும் கொடுத்து அனுப்பினாராம்.

ஆனால் லொட்ஜிலை இருந்த மனேஜர் காசைத் தன்னிடம் கொடுக்கும்படியும், அவவை நேரில் பார்க்கமுடியாது என்றும் சொன்னாராம்.

காசைக் கொண்டு வந்தவர் திரும்பிப் போய் நண்பரிடம் நடந்ததைக் கூறினார்.

நண்பர் உடனே லொட்ஜுக்குப் போன் பண்ணி அவவை தான் தங்கியிருந்த ஹோட்டலுக்கு வரச் சொன்னாராம்.

அவவும் லொட்ஜ் மனேஜருடன் வந்து நண்பரைச் சந்தித்தாவாம்.

நண்பர் அவவிடம்காசைக்கொடுத்துவிட்டு 'உமது கணவர் இரண்டு தரம் வெளிநாட்டுக்கு உம்மைக் கூப்பிட ஸ்பொன்ஸர் அனுப்பினவராம். ஆனால் நீர் ஸ்பொன்ஸரிலை ஏதோ பிழை இருக்கிறதால் எம்பசியிலை ஏற்க மறுக்கினம் என்று திருப்பி அனுப்பினனீராம் ஏன்' என்று கேட்டார்.

அதுக்கு லொட்ஜ் மனேஜர், நான்தான் எம்பஸிக்குப் போனனான். அவை ஸ்பொன்ஸர் கடிதத்தில் பிழையிருக்கு என்று சொல்லிப் போட்டினம் என்று சமாளித்தாராம்.

மனேஜரும் அவவும் நெருக்கமா இருக்கிறதைப் பார்த்த போதே சந்தேகப்பட்ட நண்பருக்கு மனேஜர் தட்டுத் தடுமாறிப் பதில் சொன்னதும் விஷயம் விளங்கிப் போச்சாம்.

இவவை வெளிநாட்டுக்கு அனுப்ப விரும்பாத மனேஜர் ஸ்பொன்ஸரிலை பிழை என்று சாட்டுக் கூறுவதையும், மனேஜரை விட்டுப்பிரிய மனமில்லாததாலை அவவும் அதுக்கு ஒத்துப்பாடுறதையும் நண்பர் புரிந்து கொண்டாராம்

இதுக்குப் பிறகு என்னத்தை சொல்வது என்று அவவைப் போட்டு வரச் சொன்னாராம்.

இதிலை கொடுமை என்ன என்றால் அவவுக்கு ஒரு மகனும் இருக்காம். புருஷன் காரன் பாடுபட்டு உழைச்ச இவவுக்கு காசு அனுப்ப இவ இஞ்சை... கூற வந்ததை'' கூறாமல் விட்டாள் சின்னாச்சி.

காலம் தப்பிப் பெய்யும் மழைக்கு அறிகுறியாக வானம் இருட்டியதால் பெரிசுகள் இருவரும் எழுந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து இளைஞர்கள் இருவரும் ஆயத்தமானார்கள். அப்போது கடலைக் கடையைக் கட்டிக் கொண்டே சின்னாச்சி கேட்டாள். மாஸ்டர் புலிகள் பலவீனம் அடைந்தபடியால் தங்களை திருப்பியும் பலப்படுத்தத் தான் இப்ப யுத்த நிறுத்தம் அறிவிச்சிருக்கினம் என்று சொல்லப்படுகுது. அப்பிடி புலிகள் பலப்படுத்துற ஒரு மாத காலத்திலை இவையும் தங்களைப் பலப்படுத்துவினம் தானே. பின்னே ஏன், யுத்த நிறுத்தம் அறிவிச்சா புலிகள் மட்டும் தான் ஆயுதங்களை வாங்குவினம் என்றும், தாங்கள் இருக்கிற ஆயுதங்களை விற்கிறது போலவும் கொழும்பிலை சிலர் பிலாக்கணம் பாடுகினம்? இந்த மாதிரிப் பெரிய கேள்விக்கு எனக்குப் பதில் தெரியாது சின்னாச்சி. சிரித்தபடியே மாஸ்டர் நடந்தார்.

மற்றவர்களும் கலைந்தனர்.

—கண்ணன்

# தொழிலாளர் சம்பள உயர்வு சங்கங்களுக்கு ஒரு சவால்!

மலையகக் கண்ணோட்டம்

இரா.புத்திரசிகாமணி

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு இன்னும் எட்டாக்கனியாகவே இருக்கின்றது.

தொழிற்சங்கத் தலைவர்களின் போட்டா போட்டியும், வாய் வீச்சுக்களுமே இதற்கான முக்கிய காரணங்கள்.

தினசரி புதிய புதிய தொழிற்சங்கங்கள் முளைத்து வருகின்றன. அதேவேளை தொழிலாளர்களின் பலம் சிதறடிக்கப்படுகிறது.

இதனால் தோட்டத் தொழிலாளர்கள் 'எமக்கு ஒரு தொழிற்சங்கம் தேவைதானா? தவறாமல் சந்தா கட்டி வருகிறோம், ஆனால் எங்கள் வாழ்க்கையில் சாந்தி இல்லையே' என சிந்திக்க ஆரம்பித்து விட்டனர்.

கடந்த ஆண்டில் இடம் பெற்ற நாணய மதிப்புக்குறைப்பு, விலைவாசி உயர்வு என்பனவற்றால் ஏற்பட்ட வாழ்க்கைச் செலவு அதிகரிப்பைச் சமாளிக்கும் வகையில் அரசாங்கம் அரச ஊழியர்களுக்கு இரண்டு கட்டங்களாக ஆயிரம் ரூபா சம்பள உயர்வை வழங்கியது. தோட்டத் தொழிலாளர்கள் மட்டும் புறக்கணிக்கப்பட்டார்கள்.

தோட்டத் தொழிற்சங்கங்கள் அனைத்துமே போர்க்கொடி தூக்கின. வேலை நிறுத்தம் செய்தன. அதனால் ஆனது எதுவும் இல்லை.

கடந்த செப்டெம்பர் 8ஆம் திகதி 18 தொழிற்சங்கங்கள் கொழும்பில் கூடி சம்பள அதிகரிப்பு வழங்க அரசுக்கு 14 நாட்களை வழங்கின. 14 நாட்களுக்குள் சம்பள உயர்வு வழங்கா விட்டால் தொழிற்சங்க நடவடிக்கை என்று அறிவித்தன.

இவர்களை எல்லாம் முந்திக் கொள்ளவேண்டும் என்று கூறி அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் செப்டெம்பர் 11ஆம் திகதியே 'திடீர் வேலை நிறுத்தம்' என அதிரடி நடவடிக்கையில் இறங்கினார்.



பெ.சந்திரசேகரன்

தோட்டத் தொழிலாளர்கள் 10நாட்கள் ஊதியத்தை இழந்தனர். திடீர் வேலை நிறுத்தத்தில் குதித்த ஆறுமுகமும் சகாக்களும் கூட்டு ஒப்பந்தத்தை மீறினர் என்று நீதிமன்றத்துக்கு இழுக்கப்பட்டனர். அதுதான் கண்ட மிச்சம்.

அப்போதும் கூட உறுதி மொழிகள் வழங்கப்பட்டன. திறைசேரி மேலதிகச் செயலாளரின் தலைமையில் கமிஷன் நியமிக்கப்பட்டது. அதோடு வேலை நிறுத்தம் வாபஸ் பெறப்பட்டது. உறுதியான போராட்டம் மழுங்கடிக்கப்பட்டது.

தொழிற்சங்கத்தலைவரான அலவி மௌலானா புதிய தொழில் அமைச்சரானார். இவர் என்ன சொன்னார்? மேலதிக செயலாளரின் அறிக்கை கிடைத்தவுடன் தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பளஉயர்வு வழங்கப்படும் என்றார்.

மீண்டும் அமைச்சரான இ.தொ.கா. தலைவர் ஆறுமுகம் தொண்டமான் ''சம்பள உயர்வு தொடர்பாக ஜனாதிபதியுடனும், பிரதமருடனும் பேசி விட்டேன் கூடிய விரைவில் 400 ரூபா சம்பள உயர்வு கிடைக்கும்'' என்றார்.

இந்த அமைச்சர்கள் இருவரும் இப்படிக்கூறி மூன்று மாதங்கள் முடிந்துவிட்டன. ஆனால் சம்பள உயர்வு மட்டும் கிடைக்கவில்லை. தொழிலாளர்கள் இலவுகாத்தகிளி ஆனார்கள்.

தொழிலாளர்களுக்கு முகம் கொடுக்க முடியாத தொழிற் சங்கவாதிகள் தனித்தனிக் கூடாரங்களில் பிரிந்து நின்று கொண்டு ஒன்றுபட்டு வென்றெடுப்போம்'' என்று கூட்டம் போட்டனர்.

ஒரு சாரார் ஆறுமுகம் தொண்டமானை ஒதுக்கினர். மறு சாரார் சந்திரசேகரனை ஓரம் கட்டினர். ஒற்றுமை காப்போம் எனக் கூறி வேற்றுமை வளர்த்தனர்.

இது தொடர்பாக 12 தொழிற்சங்கங்களும் ஆறு தொண்டர் நிறுவனங்களும் கண்டியில் கூட்டம் போட்டன. அங்கும்கூட உருப்படியாக எதுவும் நடக்கவில்லை. குத்தல் பேச்சுக்களும் கிண்டல் வார்த்தைகளும் மனக்கசப்புமே மிஞ்சின. இவர்கள் மீண்டும் இம்மாதம் 27ஆம் திகதி நுவரெலியாவில் கூட்டம் நடத்துகிறார்களாம்.

இது தொடர்பாக மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் எம்.பி.யிடம் கேட்டோம்.

தொழிலாளர்களை மீண்டும் வேலை நிறுத்தம் செய்யவைத்து அவர்களைப் பொருளாதாரச் சிக்கலில் மாட்டி விட நான் விரும்பவில்லை. அனைத்து தொழிற்சங்கங்களும், ஏனைய சமூக நல அமைப்புக்களும் ஒன்றிணைந்து ஒரே குரலில் கோரிக்கை விட வேண்டும். இது தொழிற் சங்கப் போராட்டமாக மட்டுமன்றி உரிமை காக்கும் இயக்க ஒலியாகவும் அமைய வேண்டும். இந்த ஒலி மலையகமெங்கும் ஒலிக்க வேண்டும் என்றார்.



ஆறுமுகம் தொண்டமான்

''தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்காகவும் அடிப்படை உரிமைகளுக்காகவும் திறந்த மனதுடன் போராட்டம் நடத்த ஆறுமுகம் தொண்டமான் அழைப்பு விடுத்தால் அவருக்கு ஆதரவு வழங்கி ஒத்துழைக்க நான் தயார். எமது கட்சியைக் கலைத்து விட்டுத்தான் மற்றொரு கட்சிக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்பதில்லை. வெளியில் இருந்தும் ஆதரவு தர முடியும்'' என்று சந்திரசேகரன் குறிப்பிட்டார்.

இ.தொ.கா. தலைவர் ஆறுமுகம் தொண்டமான் ஜனாதிபதியுடன் சம்பள உயர்வு தொடர்பாகத் தாம் பேச்சு வார்த்தை நடத்தியதாகவும், இன்னும் இரு வாரங்களில் 400 ரூபா சம்பள உயர்வு வழங்க ஜனாதிபதி உறுதி அளித்திருப்பதாகவும் பத்திரிகையாளர்களுக்குத் தெரிவித்தார்.

கமிஷன் நியமிக்கப்படும் என்பதையும் உறுதி மொழிகளையும் கேட்டுக் கேட்டுத் தொழிலாளர்கள் சலிப்படைந்துவிட்டனர். சம்பள உயர்வு கிட்டும் வரை எவரையும் அவர்கள் நம்பத்தயாராக இல்லை.

''நேரம் வரும் போது அனைத்து தொழிற்சங்கங்களையும் அழைத்துப் பேசி உறுதியான ஒரு திட்டம் வகுத்து செயல்படுத்த உத்தேசித்துள்ளேன்'' என அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் கூறினார்.

''இது மட்டுமன்றி தொடர்ந்து நாம் ஏமாற்றப்பட்டால் அரசுக்கு வழங்கிவரும் ஆதரவை மீள் பரிசீலனை செய்ய நேரிடலாம்'' என்றும் குறிப்பிட்டார்.

இப்பொழுது அந்த நேரம் வந்து விட்டது. மேலும் காலம் கடத்தாமல் அனைத்து தொழிற்சங்கங்களையும் அழைத்து திட்டமிட்ட போராட்டத்திற்கு வழிவகுக்க வேண்டும். வேலாயுதமும் சிவாமணியும் ஆறுமுகம் தொண்டமானுடன் இணைந்தது போல் சந்திரசேகரனும் அய்யாத்துரையும் சேர வேண்டும். அப்படிச் சேர்ந்தால் வெற்றி நிச்சயம். அவர்கள் சேருவார்களா? சேர்த்துக் கொள்வாரா ஆறுமுகம் தொண்டமான்?

# இந்திய அரசை உதவிக்கு அழைக்கிறார் செல்லச்சாமி

''முன்னாள் பிரதமர் ராஜிவ்காந்தி படுகொலையை மனதில் வைத்துக் கொண்டு, ஒட்டுமொத்தமாக இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளைக் கண்டுகொள்ளாமல் இருப்பதும், மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் நடந்து கொள்வதும் வருந்தத்தக்கது.

ஜனநாயகப் பண்புகளை விதைக்கும் அகண்ட பாரதத்தின் அரசியல் வரலாறு கறைபடிந்ததாக ஆகிவிடக்கூடாது; எனவே இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வில் இந்திய அரசு கணிசமான பங்களிப்பைச் செலுத்துமாறு தமிழகத் தலைவர்கள் ஒருமித்த குரலில் இந்திய அரசை வலியுறுத்த வேண்டும்''

இவ்வாறு தமிழ்நாட்டிற்குச் சென்றிருந்த இலங்கைத் தேசிய தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ்.செல்லச்சாமி அனைத்து இந்திய அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளரும் தமிழக எதிர்க்கட்சித் தலைவியுமான செல்வி ஜெயலலிதாவை அவரது போயஸ்கார்டன் இல்லத்தில் சந்தித்த போது எடுத்துரைத்தார்.

சுமார் 45 நிமிடங்கள் உரையாடல் நடந்தது. இதில் மாகாணசபை உறுப்பினரும், இ.தே.தொ.கா. அரசியல் செயலாளருமான திருமதி வேலம்மாள் செல்லச்சாமி, அ.தி.மு.க. அரசியல் உயர் மட்டக் குழு உறுப்பினர் இலங்கை நெய்னார் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

1958 முதல் வடக்கு—கிழக்குப் பகுதிகளில் என்ன பிரச்சினை தோன்றினாலும் அதனால் அதிகம் பாதிக்கப்படுபவர்கள் இந்திய வம்சாவளி தமிழ் மக்களும், தோட்டத் தொழிலாளர்களும் இளைஞர்களுமே ஆவர்.

வாழும் மண்ணின் விசுவாசிகளான நாங்கள் சமாதானத்தின் எதிரிகள் அல்லர். ஒருவர் உண்டு மகிழ்வதையும், மற்றொருவர் மாண்டு மறைவதையும் மனிதநேயமிக்க யாரும் மனதால் கூட நினைத்துப் பார்க்க மாட்டார்கள். யுத்தம் வேண்டவே வேண்டாம் நாங்கள் சமாதானத்தை விரும்பி வரவேற்கிறோம்.

நோர்வே, ஐரோப்பா, பிரிட்டன் போன்ற நாடுகள் சமாதானத்திற்கு வித்திட முயற்சிகள் மேற்கொள்ளும் போது, வளர்முக நாடுகளுக்குக் கடனுதவி வழங்கும் அரசுகளும் அதற்கு அழுத்தங்கள் கொடுக்கும் போது இந்திய அரசு அலட்சியமாக இருக்கக்கூடாது.

இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்பட்டால்தான் இந்திய, இலங்கை நாடுகளுக்கிடையில் அச்சுறுத்தல் அற்ற நட்புறவு நிலவ முடியும்.

பயங்கரவாதத்தைப் பயங்கரவாதத்தால் வெல்ல முடியும் என்பதோ அராஜகத்தை அராஜகத்தால் தோற்கடிக்க முடியும் என்பதோ அறிவுபூர்வமானதல்ல.

நெருப்பை நீரினால் அணைக்க முடியும். நீரை நெருப்பினால் அழிக்க முடியாது. இது யதார்த்தம்.

எனவே பயங்கரவாதம் எனக் கருதுவதை ஜனநாயகம் எனும் நீர்வார்ப்பினால் நிர்மூலப்படுத்துவதைவிடுத்து பெருநோய் ஊற்றமுற்படுவதை அறிவுலகம் ஏற்காது. எனவே இந்திய அரசு காலம் தாழ்த்தாது மௌனம் கலைத்துப் பேரழிவிலிருந்து மனித உயிர்களைக் காப்பாற்ற முன்வரவேண்டும் என செல்லச்சாமி கேட்டுக்கொண்டார்.



எம்.எஸ்.செல்லச்சாமி

ஸ்ரீமா—சாஸ்திரி ஒப்பந்தப்படி தாயகம் திரும்பியவர்கள் இந்திய மண்ணின் சொந்தக்காரர்கள் என்பதை மனதிற்கொண்டு அவர்களுடைய வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கான சகல வசதிகளையும் வழங்க வேண்டும்.

அடைக்கலம் தேடிவந்த அகதிகளுக்கும் அகதி முகாம்களுக்குள் முடங்கிக் கிடப்பவர்களுக்கும் உரிய பாதுகாப்பும் உதவிகளும் செய்தல் வேண்டும்.

கலவரங்கள் காரணமாக தமிழகம் வந்து கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக வர்த்தகம் செய்துவரும் இந்திய வம்சாவளியினருக்கு இரட்டைப் பிரஜா உரிமை வழங்க வேண்டும்.

கலைகலாசார பரிவர்த்தனைகளில் 'ஒருவழிப்பாதை' என்ற நிலையை அகற்றி அதனை இருவழிப்பாதையாக மாற்றும் செய்ய வேண்டும்.

எமது கலை இலக்கியப் படைப்புகளை சந்தைப்படுத்துவதற்கு மையம் ஒன்றை ஏற்படுத்துவதில் தமிழக அரசும், அரசியல் தலைவர்களும் முன்நிற்க வேண்டும்.

இப்படியான சில கோரிக்கைகளையும் செல்லச்சாமி முன்வைத்தார்.

தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே.மூப்பனார், தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் தலைவர் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் பேராசிரியர் காதர் மொஹிதீன், தமிழ் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன், இலக்கியத் தென்றல் குமரி அனந்தன் ஆகிய தமிழகத் தலைவர்களையும் எம்.எஸ். செல்லச்சாமி சந்தித்துப் பேசினார்.

# தாசிகள் அன்றும் இன்றும்

இந்திரலோகத்திலிருந்து ஒரு தேவதை பூமிக்கு வந்துள்ளார். அந்தத் தேவதைக்கும் பூவுலக வாலிபனுக்கும் பிறந்த குழந்தையை தேவதை பூமியிலேயே விட்டுச் சென்றுள்ளார்.

கோயிலில் வளர்ந்த இந்தக் குழந்தையே தாசி பரம்பரையைத் தோற்றுவித்தது.

'தாசி' என்ற சொல்லைக் கேட்டால் போதும் பலரின் பார்வை உடனே மாறும், முகம் கோணிவிடும்.

தாசிகளால் பெண்குலத்திற்கே ஒரு இழுக்கு என்ற எண்ணம் காணப்படுகிறது.

ஆனால் தனது முதுமாணிப் பட்டப்படிப்பிற்காகத் தாசிகள் பற்றி ஆராய்ந்த ரகுநாத் மனே என்ற இந்தியர் இவ்வாறு கூறுகின்றார்:–

சிவபெருமான், ஆதிசேஷனை அழைத்து தேவர்களையும் தம்மையும் மகிழ்விக்க ஏற்பாடு செய்யும்படி கூறினார்.

அப்போது ஆதிசேஷன் தன் தலையில் இருந்து உருவாக்கிய பத்துப் பேரில் முதலில் வந்தவர் தேவதாசி எனக் கூறப்படுகிறது.

வேறொரு பூர்வீக தகவலின்படி,


பெண்கள் கல்வி கற்பது தடை செய்யப்பட்டிருந்த காலத்தில் தாசிகள் கல்வி, கலையறிவு உடையவர்களாக இருந்துள்ளனர்.

தினமும் கோயில் பணிகளிலும், பூஜை ஆயத்தங்களிலும் தாசிகள் பங்கேற்றுள்ளனர்.

திருக்காமேஸ்வரர் கோயிலில் அம்மனுக்கு புடைவை சாத்துவதைக்கூட இவர்களே செய்து வந்துள்ளனர்.

எப்போதும் இறைபணி செய்து கொண்டு இருந்த தாசிகளை தெய்வத்தன்மை உடையவர்கள் என மக்கள் கருதினர்.

அந்நிய ஆட்சி ஏற்பட்ட போது கோயில் நிர்வாகங்கள் சீர்குலைந்தன.



தாசிகள் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டனர். இதனால் வசதியான ஆண்களை நாடி வாழ வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

"சூழ்நிலை காரணமாக ஒருசில பெண்கள் செய்த தவறுகள் இன்று ஒரு இனத்தையே அவமானத்துக்கு உள்ளாக்கிவிட்டன.

# வாழ்க்கையில் சறுக்கல் அது ஒரு திருப்பம்!

'சூடு கண்ட பூனை அடுப்பங்கரை நாடாது' என்ற பழமொழி எமது சமூகத்தில் பரவலாகப் பிரயோகிக்கப்படுகிறது.

ஒரு பெண்ணின் வாழ்வில் திருமணம் என்பது ஒருமுறைதான் நடக்க வேண்டும். முதல் முறை தோல்வி கண்டால், அதனை நிரந்தரமாக்கி, இனி ஒரு துணையை அடைய முடியாது என்ற கருத்து இன்றும் பலரிடம் காணப்படுகிறது.



மரணம் அல்லது விவாகரத்துக் காரணமாக ஒரு பெண் தனது கணவனை இழந்த பின்பு, புதிய துணையை நாடுவதில் தவறு எதுவும் இல்லை.

தனது கணவனை இழந்தவுடன் அதைத் தாங்கிக் கொள்வது எந்தப் பெண்ணுக்கும் கஷ்டமான விடயம் தான்.

அந்தக் கஷ்டத்திலிருந்து மீள அதிக சந்தர்ப்பங்களில் இரண்டாவது திருமணம் உதவி செய்கிறது.

மனோதத்துவவியலாளர்களின் கருத்துப்படி, ஒருவர் தான் விரும்பியவருக்குத் தன்னை அர்ப்பணிப்பதில் தவறில்லை.

ஒருமுறை தவறு ஏற்பட்டதற்காக முழு வாழ்க்கையையும் வீணாக்க வேண்டிய அவசியம் இல்லை.

வாழ்க்கையில் சரியான திருப்தியை அடைய அந்தரங்க உறவுகளே வழிவகுக்கின்றன.

எனவே வாழ்க்கையின் இடையில் ஒரு சறுக்கல் ஏற்பட்டால் மீண்டும் காலடியை உறுதியாக வைக்க வேண்டும்.

நம்பிக்கை எவரிடம் இருக்கிறதோ அவரிடம் எதிர்காலம் உண்டு.

## பெண்

பிரதீபா – பனோ

# படித்ததில் பிடித்தது

- வலிமை என்பது அசைக்க முடியாத மன உறுதியில் இருந்து வருகிறது. மனம் அதிக தூய்மையாக இருந்தால், நமது வலிமை அதிகமாக இருக்கும்.
- விளையாட்டு மைதானத்தில் இறங்கி விளையாடும் வீரர்களுக்குத்தான் தெரியும் அதன் கஷ்டங்கள். பார்வையாளர்களுக்கோ, விமர்சகர் களுக்கோ விளையாடுபவர்களின் மூச்சிரைப்பும், அடிகளின் வலியும் பந்தைப் பறிகொடுத்த சோகமும் தெரிய வாய்ப்பில்லை. மனித வாழ்க் கையின் யதார்த்தமும் இதுதான்.
- ஏமாற்றங்களும், தோல்விகளும் உங்களுக்குக் கசப்புணர்வைக் கொடுத்துத் துவளச் செய்கின்றனவா? அல்லது அதைப் படிப்பினையாகக் கொண்டு முன்னேற ஊக்கமளிக்கின்றனவா? முதன் முறையாக நடக்க எத்தனிக்கும் குழந்தையைப் பாருங்கள். ஒவ்வொரு தடவை தடுக்கி விழும் போதும் அது எழுந்து நடக்கிறது. உங்களாலும் முடியும்.
- சொல்வதனால் குறைந்து போகும் பொருள்கள் இரண்டு. அவை புண்ணியமும் பாவமும். நீ செய்த புண்ணியங்களை நீயே மற்றவர்களிடம் எடுத்துச் சொல்வது பெருமையடிப்பதாகும் அதனால் புண்ணியம் குறையும்.

  நீ செய்த பாவங்களை நீயே பிறரிடம் கூறுவது செய்த பாவம் குறித்து வருந்துவதாக அமையும் அதனால் பாவம் குறையும்.
- மன அமைதி வேண்டுமானால் பிறரிடத்தில் குற்றம் காணாதே. அதற்குப் பதிலாக உன் குற்றங்களை எண்ணிப்பார்.

  இவ்வுலகம் முழுவதையும் உன்னுடையதாக்கிக் கொள்ளப்பழகு. இவ்வுலகில் யாரும் வேற்றுமனிதர் அல்லர். இவ்வுலகம் முழுவதும் உனதே.

  ஒருவன் பிறரிடத்துக் குற்றம் காண முற்படுவானேயாகில் அவனது மனமே முதலில் மாசடைகிறது.

# ஆனந்தமாக வாழ்வோம்

- உங்கள் திறமையை, அனுபவத்தைப் பிறருக்குப் பயன்படுத்துங்கள்.
- படிப்பதை சிறந்த பொழுது போக்காகக் கொள்ளுங்கள்.
- நேரம் கிடைக்கும் போது நண்பர்களைச் சந்தியுங்கள்.
- கோவிலுக்கு ஒழுங்காகச் செல்லுங்கள். அது மனதிற்கும், உடலுக்கும் நல்லது.
- உடலில் கோளாறு ஏற்படும் போது வைத்தியரை அணுகுங்கள்.
- வைத்தியர் கொடுக்கும் மருந்துகளை தவறாமல் உண்ண வேண்டும்.
- அளவோடும், நேரத்துடனும் உணவு உண்ணப் பழகுங்கள்.
- தனிமையைத் தவிருங்கள்.
- எப்பொழுதும் ஏதாவது ஒரு வேலையில் உங்களை ஈடுபடுத்துங்கள்.
- உண்மை நிலையைப் புரிந்து கொள்ளுங்கள்.
- எப்போதும் பிறருக்கு உதவியாக இருங்கள்.
- ஆன்மீகக் காரியங்களில் ஈடுபடுங்கள்.
- உடல் நிலையை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளுங்கள்.
- எதிர்பார்ப்புகளைக் குறைத்துக் கொள்ளுங்கள்.
- ஓய்வு வாழ்க்கையை பிரச்சினையாகக் கருதாதீர்கள்.
- உடலையும், மனதையும் அமைதியாக வைத்துக் கொள்ளுங்கள்.
- எப்பொழுதும் சந்தோஷமாக இருங்கள்.



# பணத்தால் குடும்பத்தில் பிணக்கா?

குடும்ப வாழ்க்கையில் புகுந்தாலே, சின்னச் சின்னப் பிரச்சினைகள் ஏற்படுவது சகஜம்.

நாம் சிறிய பிரச்சினைகள் என நினைப்பவை பல சந்தர்ப் பங்களில் பெரியனவாகி விடும்.

கணவன், மனைவியிடையே பணம் தொடர்பாகப் பிரச்சினை ஏற்படுவது பரஸ்பர உறவை பிளவுபடுத்த வழிவகுக்கும்.



எனவே நீங்கள் முன்னெச்சரிக்கை யுடன் செயற்படுவது நல்லது.

உங்கள் செலவுகளையும், எதிர்கால இலட்சியங் களையும் பற்றிக் கலந்தாலோசியுங்கள்.

பணச் செலவுகளை சரியாக நெறிப்படுத்த முடியாத சந்தர்ப்பங்களில், அனுபவமுள்ள, நம்பிக்கைக் குரிய ஒருவரின் ஆலோசனையைப் பெறுங்கள்.

கணவனும் மனைவியும் இணைந்து வங்கிக் கணக்கு களை வைத்துக் கொள்ளும் போது, ஒருவருக்கொருவர் அடுத்தவரின் செலவுகளைக் கண்காணிக்கலாம்.

தொலைபேசி, மின்சார, தண்ணீர் கட்டணங்களை அந்தந்த மாதத்திலேயே செலுத்தி விடுங்கள்.

பற்றுச் சீட்டுக்கள், வங்கிக் கணக்குக் கூற்று, வாகனச் செலவுகள், கடன் அட்டை விவரங்கள் அனைத்தையும் வெவ்வேறாக வைக்கும் பழக்கம் அவசியம் தேவை.

மாதத்திற் கொருமுறை கணக்குகளைச் சரிபார்ப்பது, நீங்கள் ஏதும் பிழைகள் விட்டிருந்தால் அவற்றைத் திருத்திக் கொள்ள உதவும்.

மேற்படி பழக்கங்கள் இருந்தால் கணவன் மனைவிக்கிடையே பணம் தொடர்பாகப் பிரச்சினை எழ வாய்ப்பே இல்லை.

# திருகோணமலை

# ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயம்

# ராஜகோபுர கும்பாபிஷேகம்

திருகோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் ராஜ கோபுரக் கும்பாபிஷேகப் பெருவிழா பெப்ருவரி மாதம் 7ஆம் திகதி தைப்பூசத் திருநாளன்று நடைபெறவுள்ளது. அதனை முன்னிட்டு நாளைய தினம் 29ஆம் திகதி கும்பாபிஷேகக் கிரியைகள் ஆரம்பமாகின்றன.

தேவாரப் பாடல் பெற்ற ஷேத்திரங்களில் ஒன்றான திருக்கோணேஸ்வர சிவபூமியில் கோயில் கொண்டருளியுள்ள அருள்மிகு ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலயம் ஈழத்திலுள்ள சக்தி பீடங்களில் தொன்மையும், முதன்மையும் மேன்மையும் உடையதாக விளங்குகிறது.

ஒரு ஆலயத்தின் தொன்மையை அறிய முற்படும் ஆய்வாளர்களுக்கு உதவும் வகையில் கல்வெட்டுச் சாசனங்கள் முதலிடம் பெறுகின்றன. அடுத்து ஆலயச் சூழலில் கிடைத்த தொல்பொருள்கள் உதவுகின்றன.

ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலயத்திலுள்ள கற்சாசனத்தையும், ஆலயச் சூழலில் நிலத்திலுள்ளிருந்து அகழ்ந்தெடுக்கப்பட்ட கிடாரத்தையும், அதனுள்ளிருந்த ஸ்ரீபத்திரகாளி அம்பாளின் தாமிர விக்கிரகத்தையும் ஆய்வு செய்த பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு. செ. குணசிங்கம் இவ்வாலயம் 11ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட தொன்மை வாய்ந்ததெனக் கூறியுள்ளார்.



காளி அம்மா

காலங்காலமாகப் பல அற்புதங்கள் நிகழ்ந்துள்ள இவ்வாலயத்தின் பிரதம குருவாக இருந்த பிரம்மஸ்ரீ சு.கு. சோமாஸ்கந்தக் குருக்கள் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்திலிருந்து பற்பல திருப்பணிகளைச் செய்திருக்கிறார், ஆலய நித்திய, நைமித்திய பூசைகளையும் மகோற்சவங்களையும், சிறப்பு விழாக்களையும் நடத்தி பக்த பெருமக்களை ஆலயத்திற்குள் ஈர்த்துக் கொண்டார்.

அவருடைய ஏகபுத்திரன் வேதாகம மாமணி பிரம்மஸ்ரீ சோ.இரவிச்சந்திரக் குருக்கள் தந்தையாரின் வழியில் இன்று பிரதம குருவாக இருக்கிறார். 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஸ்ரீபத்திரகாளி அம்பாள் ஆலயத்துக்கு 65 அடி உயரமான சப்ததள இராஜ கோபுரத்தை அமைத்தல், அம்பாள் மூலஸ்தானத்தை திரிதள விமானமுடையதாகப் புனருத்தாரணம் செய்தல், மற்றும் பல திருப்பணிகள் ஆகியவற்றை அம்பிகையின் திருவருளாலும், பக்தப் பெருமக்களின் ஆதரவினாலும் பயபக்தியோடு ஆரம்பித்தார்.

சிற்பகலாபானு கந்ததாஸ், ரவீந்திரராஜா (அராலி) இராஜகோபுரம், கருவறைத்தூபி என்பனவற்றின் கட்டுமான வேலைகளை ஆகம சாஸ்திர விதிப்படி நிர்மாணித்து நிறைவேற்றினார்.

கும்பகோணம், வலங்கைமான் மாரிமுத்து இராஜேந்திரன் ஸ்தபதியும் அவருடைய குழுவினரும் இராஜகோபுரத்திலும், தூபியிலும்



## நாயகியே நல்லமுதே


உலகம்குளிர உவப்புடனே
உய்வளித் துணர்வூட் டென்னம்மே
திலகம் திகழும் நுதலுடையாய்
திருநிறை யெனசெல்வப் பேறே
உலகம் புகழும் உத்தமியே
உணர்தற் கரிய மெய்ப்பொருளே
அலகில் கோணைப் பதியமரும்
ஆதிபத்ர காளியம்மையே.

திகழ்தரு பொற்சிங்கா தனம்சேர்
அமிர்த வல்லியே என் னரசே
செகமேழுமுனதுபுகழ் பரவு
மலர்வனத் துறுகவலை யறுத்துநீ
யிகபர மிரண்டுமளித் திடுமின்
னமுதே கரும்பேஇளங் குயிலே
புகழ்மிகு திருக்கோண மலைவாழ்
ஆதிபத்ர காளி யம்மையே.

பழுதிலா முழுமதியே பரவுவார் தனநிதியே
தொழுதிடு மடியவருளத் துறையும் நாயகியே
எழுத மறையெனவே அந்தணர் போற்றிடுமோர்
அருள்நிறை நற்செல்வமே அமுதே என்னுயிரே
செழுமைசேர் அழகுமிளிர் வதன மனோகரியே
சிந்தாகுலந் தீர்க்கும் தாயே அம்பிகையே
முழுமதி நிகரழகு செறிதிருக் கோணமலை
வாழும் ஆதிபத்ர காளி யம்மையே.

நிறைந்தநற் தவப்பேறே நெற்றிக்கண்
ணுடையதொரு பொற்கொடியே
பொறையெனும் பொற்பிற்கோ ரணிகலமே
பொன்னரசே மெய்த்தவமே
நறையொழுகு தாரணியும் மங்கையே
நல்லதொரு மாமருந்தே
மறையவ ருறைதிருக்கோ ணமலைவாழ்
ஆதிபத்ர காளி யம்மையே.

கவிஞர் சந்திரசேகரம்பிள்ளை
ஜெயச்சந்திரன்



ஆலயப் பிரதம குரு வேதாகம மாமணி
பிரம்மஸ்ரீ சோ.இரவிச்சந்திரக் குருக்கள்

சுதைச் சிற்பங்களை அழகாக அமைத்து அவற்றுக்கு வர்ணம் தீட்டி அழகுக்கு அழகு செய்துள்ளார்கள்.

சிற்பவண்ணச்சுடர் திருநெல்வேலி திரு. கனகராசா தலைமையிலான ஓவியக் குழுவினர் ஆலயத்தைக் கலைக்கோயிலாக்கியுள்ளார்கள்.

ஸ்ரீபத்திரகாளி அம்பாளின் அளப்பரிய திருவருளினாலும் ஜெகத்குரு ஸ்ரீசங்கராச்சாரிய சுவாமிகள் ஸ்ரீமடம் பெரியவரின் அருளாசியினாலும், இராமகிருஷ்ண சங்கத் தலைவர் ஸ்ரீமத் சுவாமி ஆத்மகணானந்தஜீ அவர்களின் ஆசியினாலும், பிரதிஷ்டா சிரோன்மணி சாமி விஸ்வநாதக்குருக்களின் ஆசீர்வாதத்தினாலும், சான்றோர்கள், பக்தப்பெருமக்கள், அடியார்கள், தொண்டர்கள் ஆகியோரின் ஆதரவினாலும் 07.02.2001 ஆம் ஆண்டு தைப்பூசத் திருநாளன்று மகா கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

29.01.2001 திங்கட்கிழமை கும்பாபிஷேகக் கிரியைகள் நடைபெறும். 05.02.2001, 06.02.2001 ஆகிய இரண்டு நாட்களும் பக்தர்களின் எண்ணெய்க்காப்பு வைபவம் நடைபெறும்.

07.02.2001 புதன்கிழமை தைப்பூசத் திருநாளன்று காலை 10.00 முதல் 11.00 மணி வரையிலுமுள்ள சுபமுகூர்த்த வேளையில் மகா கும்பாபிஷேகம் என்னும் குடமுழுக்கு விழா நடைபெறும்.

தொடர்ந்து 45 நாட்கள் மண்டலாபிஷேகமும் 23.03.2001 வெள்ளிக்கிழமை மண்டலபூர்த்தி, சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளன.



அலங்கார பூஜிதையாகக் காளி அம்மா

ஆயிரம் பிறைகண்ட பிரதிஷ்டா சிரோமணி சாமி விஸ்வநாதக் குருக்கள், பிரதிஷ்டா பிரதம குருவாயிருந்து சகல மங்களக் கிரியைகளையும் செய்தும், செய்வித்தும் மகா கும்பாபிஷேகத்தை நிறைவேற்றி வைக்கிறார். கிரியைகளைச் செய்வதற்கு ஈழநாட்டின் பிரபல சிவாச்சாரியப் பெருமக்களும், இந்தியாவிலிருந்து இரண்டு சிவாச்சாரியர்களும் வந்து கிரியைகளைச் சிறப்பாக நிறைவேற்றி வைக்கிறார்கள்.

### சர்வபோதகம்

பிரம்மஸ்ரீ தே.சு. முத்துக்குமாரசாமிக் குருக்கள் (தாம்பரம், சென்னை)

பிரம்மஸ்ரீ இரகுநாத தேவசிகாமணிசர்மா (முன்னேஸ்வரம்)

பிரம்மஸ்ரீ. ஜே. பத்மநாதக் குருக்கள் (கண்டி)

பிரம்மஸ்ரீ மு. சண்முகக் குருக்கள் (சென்னை)

### ஆசியுரை

பிரம்மஸ்ரீ சி. குஞ்சிதபாதக் குருக்கள் (பொன்னம்பலவாணேஸ்வர் ஆலய பிரதம குரு)

பிரம்மஸ்ரீ பா. சண்முகரெத்தினக்குருக்கள் (சிவாகம சூடாமணி)

கொழும்பு ஸ்ரீபால செல்வ விநாயகர் ஆலய பிரதமகுரு

கும்பாபிஷேக கிரியாஉபன்நியாசம்

பிரம்மஸ்ரீ ஐயப்பதாச சரவணபவ குருக்கள் (சாஸ்தா பீடாதிபதி)

# ராசி பலன்



**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை1**

இராசிக்கு ஒரு புறம் அசுர குருவும் மறுபுறம் தேவகுருவும் இருப்பதால் பெரியவர்கள் அறிஞர்கள் போன்றவர் களின் ஆசியும் அரவணைப்பும் கிடைக் கும். பொருளாதாரம் நன்றாக இருக் கும். இது நாள் வரை வராத கடன் பாக்கி வட்டியுடன் கிடைக்கும். கல்வியில் இயல்பாக ஆர்வம் இருக்கும். இருமல், சளி, தொண்டைக் காறல் போன்ற நோய்கள் வரவாய்ப்புள்ளது. வீடு, வாகனம் இலாபம் தரும். உறவினர் நண்பர்களுடன் அன்பைப் பகிர்ந்து அனுபவிக்க சந்தர்ப்பம் கிட்டும். மனம் ஒரு நிலைப்படும். கற்பனை வாழ்வை விடுத்து யதார்த்த வாழ்வுக்கு வருவீர்கள். எதிரிகள் புதுப்பலம் பெற்றுத் தாக்குவதற்குத் தருணம் பார்க்கிறார்கள். அவதானம் வேண்டும். குடும்பத்தில் முறுகல் நிலை இருந்தாலும் சமரசம் காண்பீர்கள் காதலருக்குள் தர்க்கம் இருக்கும். தொழில் விருத்தியுண்டு.



**இடபம்: கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம் 1,2**

இராசியில் சுபக்கிரகம் இருந்தாலும் இருபக்கமும் தீய கிரகங்களான சனியும் ராகுவும் இருப்பதால் தீயோர் சேர்க் கையும் கெட்டவர்களின் அரவணைப்பும் கிடைக்க வாய்ப்புண்டு. பொருளாதாரம் தடைப் படலாம். கடன்பட்ட வரிடம் மேலும் கடன் கேட்கும் நிலை தோன்றலாம். கல்வியில் புது வேகம் தென்படுகின்றது. சகோதரர் உதவுவர். வீடு, வாகன யோகம் உண்டு. உறவினர் நண்பர்கள் உறவைப் பலப்படுத்துவர். மனம் பூரண கட்டுப்பாட்டில் இருக்கும் நல்ல எண்ணங்கள் தோன்றும். தெய்வீக பக்தி உதயமாகும். எதிரிகள் பலம் உள்ளவர்கள் ஆனாலும் தற்காலிகமாக ஆபத்தில்லை. குடும்பப்பிணக்குத் தீரவில்லை. பழைய பிரச்சனையால் சண்டை வரலாம். காதலருக்குள் ஏற்பட்ட சந்தேகம் நீங்கி காதல் மலரும். தொழில் செய்யும் இடத்தில் அமைதி இல்லை.



**மிதுனம்: மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3**

இராசிநாதனான புதனுக்குக் குருவின் பார்வையும் இராசிக்கு சனியின் பார்வையும் கிடைப்பது சமபல நிலையே. கல்வியில் அபிவிருத்தி யுண்டு கொடுக்கல் வாங்கல் சீராக இருக்கும். சிலசமயம் பணத்தட்டுபாடு வரலாம். சகோதரர் உதவுவர். வீடு, வாகனம் இலாபம் தரும். சொந்தக்காரர் சீரோடும் சிறப்போடும் உறவாடுவர். ஒருக்கால் வாழ்வு வெறுக்கும் மறுகால் வாழ்வை விரும்பும் இரு நிலையில் மனச் செயல்பாடு அமையும். மன அமைதி இல்லை. எதிரிகளின் செயலால் உடல், மனப் பாதிப்பு ஏற்படலாம். குடும்பத்தில் சுமுக உறவில்லை. தற்காப்பு எச்சரிக்கை யுடனேயே நடந்து கொள்வீர்கள். காதலர் வாழ்வில் இளம் தென்றல் வீசாமல் சிறு புயல் வீசலாம். தொழிலில் புதிய உத்தியைக் கையாண்டு வெற்றி பெறுவீர்கள்.



**கடகம்: புனர்பூசம்4, பூசம், ஆயிலியம்**

இராசிநாதன் எட்டாம் வீடு முதல் பதினோராம் வீடு வரை சஞ்சாரம் செய்வதாலும் இராசிக்கு சூரிய, புதன் பார்வை கிடைப்பதாலும் நல்ல பலனை எதிர்பார்க்கலாம். கல்வியில் முன்னேற்றம் இருக்கும். கொடுக்கல் வாங்கலில் தட்டுப்பாடு இருக்கும் சமாளிப்பீர்கள். உங்கள் உதவியை சகோதரர்கள் எதிர்பார்ப்பார்கள். வீடு, வாகனம் இலாபம் கூட்டும். வாகனம் ஓட்டுவதில் கவனம் வேண்டும். உறவினரோடு உறவும் இல்லை பகையும் இல்லா நிலை. மனதில் கற்பனைக் கோட்டை கட்டுவதுடன் நில்லாமல் அதில் வாழவும் முற்படுவீர்கள். எதிரிகள் பலவீனம் அடைந்து செயலற்று அடி பணிந்து போவார்கள். குடும்பத்தில் அமைதி நிலவும் விசுவாசமாக இருப்பர். காதலர் வாழ்வு உணர் அறிய வரலாம். தொழில் துறையில் கடும் போட்டி நிலவும்.




**சிங்கம்: மகம், பூரம், உத்தரம் 1**

இராசிநாதன் சத்துருஸ்தானமான ஆறாம் வீட்டில் சனி, குருபார்வை பெற்று இருப்பது ஒரு சிறப்பான அம்சம் அல்ல. ஆனால் சுக்கிரனின் பார்வை இராசி பெறுவது ஓர் அளவுக்கு ஆறுதல் உண்டு. கல்வியில் நத்தை வேக முன்னேற்றம் தான். பணத்தட்டுப்பாடு நிலவும். ஒரு ஆணிடமும் ஒரு பெண்ணிடமும் பணம் வாங்க வேண்டிய நிலை வரலாம். சகோதரர்கள் சுகமாக இருப்பர். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். பிரயாணம் அமையும். உறவினருக்குள் சிறு மனக்கசப்பு வரலாம். மனம் அறிவின்பால் செயல்படும். சில சமயம் கட்டு மீறியும் போகலாம். தொலைநோக்கு இருக்கும். எதிரியின் நிலை பலவீனம். இன்று போய் நாளை வா என்று சொல்லக்கூடும். குடும்ப உறவு பாதிக்கலாம். காதலர் வாழ்வும் சங்கடம் தான். தொழில் அமைதி உண்டு.



**கன்னி: உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை 1,2**

இராசிக்குப் பலம் பொருந்திய சுக்கிரனின் நேரடிப் பார்வை கிடைப்பது விசேடமே. பணம் இருக்கும் செலவு அதிகரிக்கும். கல்வியில் ஆமை வேகம் தான். சகோதரங்களுக்கிடையில் சிறு சண்டை வரலாம். வீடு, வாகன யோகம் உண்டு. உறவினர் அயலாருடன் மனமகிழ்வுடன் கூடிக்குலாவலாம். அறிவும் மனமும் சேர்ந்து செயல்படும். சிலசமயம் அறிவை விட்டு விலகி கற்பனையில் சுகம் காணுவீர்கள். எதிரி செத்த பாம்பு. எவரும் உயிர் கொடுக்க முடியாது. கவலை இல்லை. குடும்ப வாழ்வு மன்மதனும் ரதியும் போல அமையும். காதலர் வாழ்வு பூத்துக் குலுங்கும். ரோஜா மலர்த் தோட்டத்தில் சிந்து பாடுவர். தொழில் துறையில் போட்டியில் முன்னேற்றம் உண்டு.



**துலாம்: சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3**

இராசிநாதனோ உச்சபலம். இருப்பினும் செவ்வாய், சனியின் ஆதிக்கம் இருப்பதால் எதிர்பார்த்த நற்பலனை அடைவது சிரமம் தான். பொருளாதாரம் ஒரு தடவை இல்லாமல் இருக்கும். மறுகணம் வரும் சமாளிக்கலாம். கல்வியில் மெதுவான முன்னேற்றம் (அட்டை வேகம்). வீடு, வாகனங்களால் இலாபம் உண்டு. உறவினர்கள் எச்சரிக்கையுடன் நடந்து கொள்வார்கள். மனதில் கற்பனைக்குப் பஞ்சம் வந்ததோ ஆனால் வாழ்க்கையின் விரக்தி நிலைக்கு போகாதீர்கள் கடவுள் இருக்கிறார். தேக சுகம் நன்றாக இருக்கும். குடும்பத்தில் வாக்கு வாதம் முற்றி சண்டையும் வரலாம். காதலர்கள் இதய மொழியில் பேசாமல் உதட்டளவில் பேசுவார்கள். தொழில் துறையில் வெற்றி பெறுவீர்கள்.



**விருச்சிகம்: விசாகம் 4, அனுஷம், கேட்டை**

இராசிநாதன் நல்லவனும் கெட்டவனும் பார்க்க மோட்ச வீடான பன்னிரண்டாம் வீட்டில் வாசம். ஆனால் இராசிக்குப் பூரண சுபரின் பார்வை கிடைப்பது விசேஷம். கல்வியில் முன்னேற்றம் உண்டு. கையில் பணம் இருக்கும். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். உறவினரிடையே உட்பகை தோன்றலாம். மனம் பூரண ஆனந்தத்தில் இருக்கும். கற்பனை கங்கை வெள்ளம் போல வரும். எதிரிகள் திக்குத் தெரியாமல் அலைந்து திரிவர். குடும்பத்தில் சந்தோஷமும் அமைதியும் இருக்கும். குடும்ப இரகசியம் பாதுகாக்கப்படும். காதலர்கள் பசுஞ் சோலையில் இளம் தென்றலை அனுபவிப்பர். தேக சுகம் நன்றாக இருக்கும். தொழில் துறையில் பாராட்டுதலைப் பெறுவீர்கள்.



**தனு : மூலம், பூராடம், உத்தராடம் 1**

இரண்டாம் வீட்டில் சூரியன், புதன் இருப்பதும் சுகஸ்தானமான நான்காம் வீட்டில் சுக்கிரன் உச்சமாக இருப்பதும் நல்ல அம்சங்கள். கல்வியில் ஆர்வம் இருக்கும். பொருளாதாரம் சற்றுத் தடைப்பட்டாலும் சமாளிப்பீர்கள். வீடு இலாபம் தரும். வாகனம் சில சமயம் செலவை ஏற்படுத்தலாம். உறவினர்களிடையே சில சமயம் மனஸ்தாபங்கள் ஏற்படலாம். மனச் சஞ்சலம் இருக்கும். மனப் பயம் இருக்கும். இனம் புரியாத பயம் ஏற்படும். கற்பனையில் சுகம் காண்பீர்கள். எதிரிகள் பலம் பெற்று இருக்கிறார்கள். அவதானம் வேண்டும் எந்நேரமும் தாக்குவார்கள். அயலாரின் சொற்கேட்டுக் குடும்பத்தில் அமைதி குலையும். சொந்தப் புத்தியின்படி நடந்தால் பிரச்சனை இல்லை. காதலரிடமும் அமைதி இல்லை. தொழில் அமைதியுண்டு.




**மகரம் : உத்தராடம் 2,3,4. திருவோணம். அவிட்டம் 1,2**

சூரியன், புதன், செவ்வாய், சனி, குரு ஆகிய கிரகங்கள் இராசியோடு சம்பந்தப்படுவதால் பல காரியங்களைச் செய்யக்கூடிய வாய்ப்பு உருவாகும். பொருளாதாரக் கஷ்டம் உண்டு. கடன்பட வேண்டி வரலாம். கல்வியில் சாண் ஏற முழம் சறுக்கும் நிலை தென்படும். உறவினரிடையே மனக் கசப்பு இருக்கும். வீடு, வாகனம் தொல்லை தரலாம். பிரயாணம் அமையும். மன அமைதி உண்டு. யதார்த்தமாக சிந்திப்பீர்கள். அறிவுபூர்வமாக நடப்பீர்கள். எதிரிகளின் தாக்குதல் இருக்கும். தலைக்கு வந்த ஆபத்து தலைப் பாகையோடு போகும். குடும்பத்தில் அமைதியுண்டு. விசுவாசம் இருக்கும். காதலர் வாழ்வில் வசந்தம் வீசும். தொழில் ஸ்தானத்தில் குறுக்கீடு இருப்பினும் உங்களின் உத்தி வெற்றி தேடித்தரும்.



**கும்பம் : அவிட்டம் 3,4, சதயம். பூரட்டாதி 1,2,3.**

இராசிக்கு இருபுறமும் சுபக் கிரகம் இருப்பது யோகம். இராசி நாதன் நீச பங்கராஜ யோகம் அடைவது சிறப்பு அம்சம். கையில் காசு இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனம் இலாபம் தரும். உறவினரோடு கூடி விருந்துண்ண சந்தர்ப்பம் கிட்டும். விசுவாசமாக இருப்பர். மனம் எதிர்மறையாகச் செயற்படும். வீண் கற்பனையால் பயம் தோன்றும். அம்மன் வழிபாட்டால் அமைதி அடையலாம். எதிரி உங்களுடனேயே உறவாடிக் கெடுக்க முயல்வார். குடும்பத்தில் மழை ஓய்ந்து தூவானம் விட்டு அமைதி தோன்றும். காதலர் கவலையின்றிக் கண்ணியமாய்க் களிப்புறுவர். தொழிலில் சில இடையூறு இருந்தாலும் யோகம் உண்டு.



**மீனம் : பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.**

இராசியில் சுக்கிரன் பூரண பலத்துடன் இருக்கின்றார். சூரிய பார்வையோடு. பணத்தட்டுப்பாடு இருக்கும். கல்வியில் ஆர்வம் குறைவாகவே காணப்படும். வீடு, வாகனம் இலாபம் ஈட்டும். அயலவர், சொந்தக்காரர் விசுவாசமாக இருப்பர். வாகனங்களை எச்சரிக்கையுடன் செலுத்தவும். மனம் பூரண அமைதியில் இருக்கும். தேவைக்கேற்ப மனதில் ஆசைகள் தோன்றும். அறிவு சமப்படுத்தும். எதிரிகள் மனம் மாறி நண்பர்கள் ஆவார்கள். குடும்பத்தில் உண்மையான சந்தோஷம் இருக்கும். இளமை திரும்பலாம். காதலர் கண்ட கனவு நனவாகும். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் துறையில் குறுக்கீடு அல்லது வியாபாரப் போட்டி இருக்கும். நிதானமாகச் செயல்பட்டால் வெற்றி உண்டு.

பொ.சந்திரன்

28–01–2001 இருந்து 03–02–2001 வரை

# நிஜமான நடிப்பு உயிரைக் குடித்தது!

இந்தியாவில் கிறிஸ்தவ மதப்பணி ஆற்றிவரும் வெளிநாட்டுப்பாதிரிமார் கொல்லப்படுவது அதிகரித்து வருகிறது. அவ்விதம் ஒரு பாதிரியார் கொல்லப்பட்டது எப்படி என்பதை விவரிக்க மேடையேறி நடித்துக்காட்டிய இளைஞன் தீயில் வெந்து மடிந்த கொடுமை நிகழ்ந்திருக்கிறது.

இந்தியாவில் ஒரிசா மாநிலத்தில் ஆஸ்திரேலிய பாதிரியார் கிரகாம் ஸ்டுவர்ட் ஸ்டெய்ன்சும், அவரது இரு புதல்வர்களும் எரித்துக் கொல்லப்பட்டார்கள், இந்தக் காட்சியை மேடை நாடகத்தில் நடித்துக் காட்டியவர் தீயில் கருகிப் பரிதாபமாக இறந்தார்.

சென்னையில் இந்த சம்பவம் நடந்தது. பாதிரியார் ஸ்டெயன்ஸ் இரு வருடங்களுக்கு முன் கொல்லப்பட்டார். அவரது நினைவு தினத்தை ஒட்டி, சென்னை நங்கநல்லூரில் கிரகாம் ஸ்டெய்ன்ஸ் பற்றிய நாடகம் நடந்தது 26 வயது வாலிபர் மோகன்குமார் பாதிரியார் ஸ்டெய்ன்சின் வேடத்தில் நடித்தார்.

தீயில் எரிக்கப்படும் காட்சி தத்ரூபமாக இருப்பதற்காக பாதிரியார் வேடத்தில் இருப்பவரைத் தீ வைத்துக் கொளுத்தும் காட்சி வந்தது. காட்சியில் தீ ஜுவாலை மோகன்குமார் உடல் முழுவதும் பற்றி எரிந்தது. மோகன்குமார் அலறினார்.

நாடகத்தை சுமார் 1000 பேர் பார்த்துக் கொண்டு இருந்தனர். அவர்கள் மோகன்குமார் மீது தீப்பிடித்ததை சாகசக் காட்சி என்றே நினைத் தனர். அவரது அலறலை அபாரமான நடிப்பு என்று நினைத்து ரசித்தனர்.


மோகன் குமார்

அந்தக் காட்சி முடிந்து திரை போடப்பட்ட போதுதான் நாடகத்தை நடத்திய குழுவினருக்கு உண்மை புரிந்தது. மோகன்குமார் பெற்றோலைத் தமது உடலில் தடவியதால் உண்மையிலேயே தீயில் எரிந்து கருகியதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.

ராயப்பேட்டை மருத்துவமனையில் சிகிச்சை அளித்தும் பலன் இன்றி குமார் உயிரிழந்தார்.

அந்தக் காட்சியில் உண்மையிலேயே பெற்றோலைத் தடவிக் கொண்டு மோகன்குமார் நடிக்கப் போவது, யாருக்கும் தெரியாது என்று மக்கள் நல சங்க செயலாளர் ராம்ராவ் கூறினார்.

பாதிரியார் வேடத்தில் நடித்த மோகன்குமார், தீயில் எரியும் காட்சியில் அலறியதைக் கேட்டு, நாங்கள் தண்ணீரைக் கூட மேடையில் இருந்து அவர் மீது ஊற்றினோம். ஆனாலும் அதற்குள் அவரது உடல் பெரிதும் வெந்து போய்விட்டது என்று நாடக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

# "கால்பந்தாட்டத்தில் இலங்கை உலக சாம்பியனாகும்"

உலகக்கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டியில் இலங்கையும் சாம்பியனாகும் எனத் தான் நம்புவதாக விளையாட்டுத்துறை அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல கூறியுள்ளார்.

'கிரிக்கெட்டில் இலங்கை உலகச் சாம்பியனாகும் என சில வருடங்களுக்கு முன் எவரும் நம்பவில்லை. 1996இல் இலங்கை அதை சாதித்தது. அதே போல் கால்பந்தாட்டத்திலும் இலங்கை உலகச் சாம்பியனாகும்' என்று அமைச்சர் கூறினார்.

பாடசாலை மாணவர்களிடையே கால்பந்தாட்டத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் 600 பாடசாலைகளுக்கு கால்பந்துகளை கையளிக்கும் வைபவம் கடந்த 22ஆம் திகதி நடைபெற்றது.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசும்போதே அமைச்சர் இவ்வாறு கூறினார். கால்பந்தாட்டத்தை விருத்தி செய்யத் தேவையான ஒத்துழைப்பைத் தமது அமைச்சு வழங்கும் எனவும் அவர் கூறினார். கல்வி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்தவும் இவ்வைபவத்தில் பங்கு பற்றினார்.

இலங்கைக் கால்பந்தாட்டச் சம்மேளனம் 600 பாடசாலைகளில் இருந்து தலா 30 மாணவர்களைத் தெரிவு செய்து கால்பந்தாட்டப் பயிற்சியளிக்கவுள்ளது.

ஒவ்வொரு வருடமும் இப்பயிற்சிகள் தொடர்ந்து நடைபெற்று 2008ஆம் வருடத்தில் 72,000 மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கப் படவுள்ளது. 2012ஆம் ஆண்டில் ஒரு லட்சம் மாணவர்களுக்குப் பயிற்சி யளிப்பது இத்திட்டத்தின் இலக் காகும்.

இன்னும் ஒருசில வருடங்களில் கால்பந்தாட்டப் பயிற்சி நிலையமொன்றைக் கொழும்பில் நிறுவி



லக்ஷ்மன் கிரியெல்ல

சிறந்த 100 பாடசாலை மாணவர்களுக்கு பூரணப் பயிற்சியளிக்கப்படவுள்ளது. இதற்காக வெளிமாவட்டங்களில் இருந்து தெரிவாகும் மாணவர்கள் கொழும்பு மாவட்டப் பாடசாலைகளில் கல்வி கற்க அனுமதிக்கப்படுவர்.

விளையாட்டுத்துறை அமைச்சு, கல்வி அமைச்சு ஆகியவற்றோடு இணைந்து சர்வதேச சம்மேளனம், ஆசிய சம்மேளனம் ஆகியவற்றின் அனுசரணையோடு இத்திட்டம் அமுல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்துக்காக வடக்கு கிழக்கு உட்பட 600 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. ஆனாலும் வட மாகாணத்தில் மன்னார் மாவட்டப் பாடசாலைகள் மட்டுமே இதில் இடம்பெற்றுள்ளன.

இது தொடர்பாக சம்மேளனத்தின் செயலாளர் கிருஷாந்த பெரேராவிடம் 'சுடர் ஒளி' வினவியபோது "யாழ் மாவட்டத்தில் கால்பந்தாட்டம் விளையாடும் பாடசாலைகளின் விபரங்கள் எமக்குக் கிடைக்கவில்லை. இரு வருடங்களுக்கு முன்பே கொழும்பு பிரதிநிதி ஒருவர் மூலம் சில உபகரணங்களை யாழ் மாவட்டத்திற்கு அனுப்பினோம். ஆனால் அம்மாவட்டத்தின் கால்பந்தாட்டத்தின் நிலை பற்றி தகவல்கள் இல்லை. எனினும் யாழ், வவுனியா போன்ற மாவட்டங்களுக்கு விசேட திட்டத்தின் மூலம் விளையாட்டு உபகரணங்களைக் கையளிக்கவுள்ளோம் என்று அவர் கூறினார்.

"தற்போது கால்பந்து விளையாடும் பாடசாலைகளையே இத்திட்டத்தில் சேர்த்துக்கொண்டுள்ளோம். பெண்கள் கால்பந்தாட்டத்தையும் ஊக்குவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி ஏப்ரல் மாதமளவில் லீக்குகளுக்கிடையிலான பெண்கள் கால்பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்று நடத்தப்படவுள்ளது. எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கைக் கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் தலைமையகத்திற்காக தற்போது கொழும்பு ரீட் அவனியூவில் கட்டப்பட்டு வரும் 4மாடிக் கட்டடத்தின் திறப்பு விழா இவ்வருடம் மே மாதமளவில் நடைபெறவுள்ளது. இவ்வைபவத்தில் பங்குபற்ற சர்வதேச சம்மேளனத்தின் தலைவர் செப் பிளாட்டர், கால்பந்தாட்ட ஜாம்பவானான முன்னாள் பிரேஸில் வீரர் பேலே ஆகியோரும் அழைக்கப்படவுள்ளனர்.

# 225 கோடி ரூபா ஒப்பந்தம் ரத்து!

இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கும் 'வேர்ல்ட் ஸ்போர்ட்ஸ் குரூப் நிம்பஸ்' நிறுவனத்திற் குமிடையே மேற்கொள்ளப்பட்ட 225 கோடி ரூபா பெறுமதியான ஒப்பந்தம் ரத்தாகியுள்ளது.

2001-2003வரை இலங்கையில் நடைபெறவுள்ள சர்வதேச கிரிக்கெட் போட்டிகளை தொலைக்காட்சியில் ஒளிபரப்பும் உரிமைக்காக இவ்வொப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டபோது 6 நிறுவனங்கள் விண்ணப்பித்திருந்தன. இதில் வேர்ல்ட் ஸ்போர்ட்ஸ் நிறுவனம் 27 மில்லியன் டொலர்களை (சுமார் 225கோடி ரூபா) வழங்க சம்மதம் தெரிவித்து இதில் வெற்றியீட்டியது.

கடந்த டிசம்பர் 3ஆம் திகதி இவ்வொப்பந்தம் கையெழுத்திடப்பட்டதோடு ஐந்து நட்சத்திர ஹோட்டலொன்றில் விருந்துபசாரங்களும் நடத்தப்பட்டன. இதில் முற்பணமாக 2,80,000 டொலர்களை குறித்த நிறுவனம் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கு வழங்கியது.

மிகுதித் தொகைக்கு ஜனவரி 20 ஆம் திகதிக்கு முன் வங்கி உத்தரவாதம் வழங்கவேண்டும். ஆனால் கடந்த 20ஆம் திகதிவரை இந்நிறுவனம் இதை சமர்ப்பிக்கவில்லை. இதையடுத்து விலைமனுவில் இரண்டாவது கூடிய தொகையான 23 மில்லியன் டொலர்களை வழங்க முன்வந்திருந்த டிரான்ஸ்வேர்ல்ட் நிறுவனத்துக்கு இவ்வுரிமையை வழங்க கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தீர்மானித்துள்ளது. இதற்காக விளையாட்டுத் துறை அமைச்சின் ஆலோசனையை சபை நாடியுள்ளது.

இங்கிலாந்து - இலங்கை அணிகளுக்கிடையிலான போட்டிகள் விரைவில் நடைபெறவிருப்பதால் இந்நடவடிக்கையை மிகவும் அவசரமாக மேற்கொள்ள வேண்டிய நிலையில் கிரிக்கெட் சபை உள்ளது. தமக்கு இக்கட்டான நிலையை ஏற்படுத்தியமைக்காகக் குறித்த நிறுவனத்திற்கெதிராக சர்வதேச கிரிக்கெட் பேரவையிடம் முறையிடவும் கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது.

ஒப்பந்தத்தின்படி முற்பணமாக வழங்கப்பட்ட தொகையை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை திருப்பிக் கொடுக்க வேண்டியதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

குறித்த போட்டிகளை ஒளிபரப்பும் உரிமையை பிற தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு மீள் விற்பனை செய்வதிலுள்ள சிரமமே வங்கி உத்தரவாதம் வழங்கப்பட முடியாததற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தென்னாபிரிக்காவில் இலங்கை அணிக்கு ஏற்பட்ட பின்னடைவும் இதற்குக் காரணமாயிருக்கலாம் என நம்பப்படுகிறது.

## விளையாட்டுச் செய்திகள்!

-ஆர். சேதுராமன்

# கிரிக்கெட் சூதாட்ட விசாரணைக்கு மார்க்வோ மறுப்பு அரவிந்த சம்மதம்

கிரிக்கெட் சூதாட்டம் தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள வீரர்களிடம் சர்வதேச கிரிக்கெட் பேரவை விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

இதன்படி இலங்கை வீரர்களான அர்ஜுன ரணதுங்க, அரவிந்த டி சில்வா ஆகியோரை விசாரணை செய்வதற்கான ஐ.சி.சி விசாரணைக் குழுவினர் இலங்கை வரவுள்ளனர்.

1994இல் லக்னோவில் நடைபெற்ற இந்தியாவுடனான டெஸ்ட் போட்டியில் அணியைத் தோல்வியடையச் செய்ய அர்ஜுனவும் அரவிந்தவும் இணங்கினர் என இந்திய சூதாட்ட முகவர் குப்தா கூறியதாக இந்தியப் புலனாய்வுத்துறையின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



அரவிந்த



மார்க்வோ

இதில் அர்ஜுனவுக்கு பணம் வழங்கப் பட்டதா என்பது பற்றி எதுவும் குறிப்பிடப் படவில்லை. ஆனால் அரவிந்தவுக்கு 15,000 டொலர்கள் வழங்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.


தான் குற்றமற்றவர் எனவும் இவ்விசாரணைக்கு முகம்கொடுப்பதில் மகிழ்ச்சியடைவதாகவும் அரவிந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஆனால் அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர் மார்க்வோ இதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளார். குப்தாவினால் குற்றம் சுமத்தப்பட்டவர்களில் ஒருவரான மார்க்வோ கடந்தவாரம் வரை 'விசாரணைக்குத் தயார்' எனக் கூறி வந்தார். எனினும் அவரது சட்டத்தரணிகளின் ஆலோசனையின் பின்னர் விசாரணைக்கு உடன்படப் போவதில்லை எனக் கூறியுள்ளார். முன்னாள் நியூஸிலாந்து அணித் தலைவர் மார்ட்டின் குரோவும் இதே போன்று விசாரணைக்கு மறுப்புத் தெரிவித்துள்ளார். மார்க்வோ, ஷேன் வோர்ன் இருவரும் மற்றொரு சூதாட்ட முகவரிடம் பணம் பெற்றதை 1998இல் ஒப்புக் கொண்டனர். இதில் இவ்விருவரும் அபராதத்துடன் மாத்திரம் தப்பிக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# தோல்விகள் ஏன்? வட்மோரிடம் கேள்வி

இலங்கைக் கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவுடனான மூன்றாவது டெஸ்ட் போட்டியிலும் இன்னிங்ஸ் தோல்வியைத் தழுவியுள்ளது. ஏற்கனவே கேப்டவுனில் நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட்டிலும் இலங்கை இன்னிங்ஸ் தோல்வியைத் தழுவியிருந்தது.

மூன்றாவது போட்டி ஆரம்பமாகும் முன்பே இலங்கை அணியினர் உளவியல் பாதிப்புக்கு உள்ளாகியிருந்தனர். முக்கிய பந்து வீச்சாளர்களான முத்தையா முரளிதரன், சமிந்த வாஸ் இருவரும் காயம் காரணமாக போட்டியிலிருந்து ஒதுங்க வேண்டியேற்பட்டது.



வட்மோர்

போட்டியின் ஆரம்பத்தில் 26 ஓட்டங்களுக்கு 3 தென்னாபிரிக்க விக்கட்டுக்கள் வீழ்த்தப்பட்டன. எனினும் ஷோன் பொல்லொக், நீல் மெக்கன்ஸி இருவரினதும் அபார சதங்களின் உதவியோடு 378 ஓட்டங்களைப் பெற்றது தென்னாபிரிக்கா.

தலைமைப் பதவி வழங்கப்பட்டவுடன் பல துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்கத் தவறுகின்றனர். ஆனால் பந்து வீச்சாளரான பொல்லொக் ஒருநாள் போட்டியில் போன்று வேகமான சதமொன்றைக் குவித்தார்.

இலங்கையின் முக்கிய பந்து வீச்சாளர்கள் அணியில் இடம்பெறவில்லை என்பதை விட துடுப்பாட்ட வீரர்கள் பிரகாசிக்காமையே தோல்விக்குப் பிரதான காரணமாகியது.

அணித்தலைவர் சனத், உபதலைவர் அத்தபத்து உட்பட முன்வரிசை வீரர்கள் பலரும் குறைவான ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். இலங்கை அணி டெஸ்ட் தொடரில் 2-0 விகிதத்தில் தோல்வியுற்றதோடு ஒருநாள் போட்டித் தொடரிலும் 5-1 விகிதத்தில் தோல்வியுற்றது.

இத்தோல்விக்கான காரணங்கள் எவையென விளக்குமாறு அணியின் பயிற்றுநர் டேவ் வட்மோரிடம் இலங்கைக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையால் கடிதம் மூலம் கோரப்பட்டுள்ளது. இக்கடிதம் இலங்கை வெற்றியீட்டிய 6ஆவது ஒருநாள் போட்டிக்கு முன்னரே அனுப்பப்பட்டது.

பயிற்சிகளுக்கு போதிய கால அவகாசம் இல்லாமையே தோல்விகளுக்குக் காரணம் என முன்னர் வட்மோர் கருத்துத் தெரிவித்திருந்தார். ஆனால் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை இதை நிராகரித்துள்ளது. சில வீரர்கள் தொழிற்சங்கம் அமைப்பதில் கவனம் செலுத்தினார்களேதவிர, போதியளவு பயிற்சிகளுக்கு சமுகமளிக்கவில்லை என்றும் சில அதிகாரிகளால் விமர்சிக்கப்பட்டுள்ளது.

# உஸ்பெகிஸ்தானின் இடம் இலங்கைக்குக் கிட்டுமா?

மகளிர் உலகக்கிண்ணக் கரப்பந்தாட்டப் போட்டிக்கான தகுதிகாண் முதற்சுற்றில் இலங்கை தோல்வியுற்றபோதிலும் இரண்டாம் சுற்றிலும் இடம் பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

2002 ஆம் ஆண்டில் ஜேர்மனியில் நடைபெறவுள்ள உலகக்கிண்ணப் போட்டிக்காக ஆசிய பீ குழுவிலிருந்து இரு அணிகளைத் தெரிவு செய்வதற்கான போட்டிகள் கடந்த 18-20திகதிவரை கொழும்பில் நடைபெற்றன.

கஸகஸ்தான், உஸ்பெகிஸ்தான், இலங்கை அணிகள் இதில் பங்குபற்றின. கஸகஸ்தான் அணி இரு போட்டிகளிலும் வெற்றி பெற்றது. உஸ்பெகிஸ்தான் அணி இலங்கையை வெற்றிகொண்டது.

இதன்படி கஸகஸ்தான், உஸ்பெகிஸ்தான் அணிகள் இரண்டாவது சுற்றுக்குத்தகுதி பெற்றன. ஆனால் உஸ்பெகிஸ்தான் இரண்டாவது சுற்றிலிருந்து விலகிக்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

உஸ்பெகிஸ்தான் வீராங்கனைகள் சிலர் கஸகஸ்தான் அணியில் விளையாடுவதனால் அவ்வணிகளுக்கிடையே ஏற்பட்டுள்ள பிணக்கே இதற்கு முக்கிய காரணம் எனத் தெரியவருகிறது. அவ்வாறு விலகினால் அந்த வாய்ப்பு முதற்சுற்றில் தோல்வியுற்ற இலங்கை அணிக்கு வழங்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

"எனினும் இதுகுறித்து உஸ்பெகிஸ்தான் அணியினர் இறுதி முடிவெடுக்கவில்லை. அந்நாட்டு கரப்பந்தாட்டச் சம்மேளனத்துடன் ஆராய்ந்து இதுபற்றி முடிவு செய்யப்படும். சர்வதேச கரப்பந்தாட்டச் சம்மேளனமே இலங்கைக்கு வாய்ப்பளிப்பது பற்றித் தீர்மானிக்க வேண்டும். இன்னும் ஒரு மாதகாலத்திற்குள் எமக்கு இம்முடிவு தெரியவரும் என இலங்கை கரப்பந்தாட்டச் சம்மேளனத்தின் செயலாளர் விங்கொமாண்டர் திலக்குணதுங்க 'சுடர் ஒளி'க்குத் தெரிவித்தார்.

இரண்டாவது சுற்றில் பங்குபற்றும் வாய்ப்புக் கிடைத்தால் அது எமக்குப் பெரும் வரப்பிரசாதமாகும். உலக அளவில் முன்னணியிலுள்ள அணிகளோடு மோதும் வாய்ப்பு எமக்கு வழங்கப்படுவதில்லை. இரண்டாவது சுற்றில் இடம்பெறுவதன் மூலம் அவ்வரிய வாய்ப்பு எமக்குக் கிடைக்கும். நாம் தொடர்ந்தும் பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். வெளிநாட்டுப் பயிற்றுநர் ஒருவரை அழைக்கவும் தீர்மானித்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இலங்கைக்கு வாய்ப்பு வழங்கப்பட்டால் ஜூலை 6-8ஆம் திகதி வரை தாய்லாந்தில் நடைபெறவுள்ள இரண்டாவது சுற்றில் ஜப்பான், தென் கொரியா, தாய்லாந்து, தாய்வான் அணிகளை எதிர்த்து விளையாடும்.

கஸகஸ்தான் அணி ஆகஸ்ட் 31-செப்டெம்பர் 2வரை சீனாவில் நடைபெறவுள்ள இரண்டாவது சுற்றில் விளையாடும். ஒவ்வொரு குழுவிலும் முதலிடம்பெறும் இரு அணிகள் 2002ஆம் ஆண்டில் ஜேர்மனியில் நடைபெறவுள்ள உலகக்கிண்ணப் போட்டியில் பங்குபற்றவுள்ளன.

# அடம் பிடிக்கும் மூப்பனாரை மடக்க ஜெயலலிதா திட்டம்



மூப்பனார்

தமிழக சட்ட சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்குக் கட்சிகள் யாவும் முனைந்து நிற்கின்றன. பலத்த போட்டி நடைபெறும் என்பது உறுதியாகி விட்டது.

எந்த ஒரு கட்சியுமே தனித்து நின்று போட்டியிடும் நிலையில் இல்லை. தி.மு.க வும் அ.தி.மு.க வும் ஆட்சியைக் கைப்பற்றும் துடிப்புடன் இருந்தாலும் தனித்து நின்று எதனையும் செய்ய இயலாத நிலையிலேயே இருக்கின்றன.

பிரதான கட்சிகள் என்றதராதரத்துடன் தி.மு.கவும் அ.தி.மு.கவும் இருக்கின்றன. ஆயினும் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சி அமைப்பதானால் சில உதிரிக் கட்சிகளையும் தம்முடன் சேர்த்துக் கொள்ள வேண்டிய நிலை இருக்கிறது அந்தக் கட்சிகளுக்கு.

உதிரிக்கட்சிகள் சாதிப் பின்னணியில் இயங்குபவை. தனித்து நின்று அவை வெற்றிகளைக் காண முடிவதில்லை. ஆயினும் சில மாவட்டங்களில் பரந்து வாழும் தமது சாதிப்பிரிவினரின் வாக்குகளைத் திரட்டித்தரும் வல்லமை இந்த உதிரிக்கட்சிகளுக்கு உண்டு.

இந்தக் கட்சிகள் கூட்டணியாகச் சேர்ந்துள்ள பிரதான கட்சிகளுக்குத் தமது இனத்தவரின் வாக்குகளைப் பெற்றுத் தந்துவிடுகின்றன. அதன் மூலம் அந்தப் பிரதான கட்சிகள் அதிக சட்டசபைப் பிரதிநிதிகளைப் பெற்று ஆளுங்கட்சி என்ற தரத்துக்கு வந்துவிடுகின்றன.

தேர்தலில் கூட்டுச் சேர்ந்து போட்டியிடுவதால் பிரதான கட்சி ஆட்சி பீடம் ஏறுகிறது. உதிரிக்கட்சிகள் ஒரு சில உறுப்பினர்களைத் தமது கட்சிக்குப் பெற்றுக் கொள்கின்றன.

தேர்தலில் மாத்திரம் இணைந்து போட்டியிட்டுவிட்டுப் பின்னர் சட்டசபையில் ஆளுங்கட்சிக்கு நற்புக்கட்சியாக இருக்க வேண்டியதுதான்.

கருணாநிதியையோ ஜெயலலிதாவையோ முதலமைச்சராக்கி விட்டு நாம் எதிர்க் கட்சி வரிசையில் இருந்து என்ன பயன்?

தி.மு.க வையோ அ.தி.மு.க வையோ ஆளும் கட்சியாக்கி விட்டு நாம் பின்வரிசையில் ஒதுங்கியிருப்பது மடமையல்லவா?

இத்தகைய சிந்தனை தமிழ் நாட்டில் உதிரிக்கட்சிகள் மத்தியில் ஏற்பட்டிருப்பதைக் காண முடிகிறது. தேர்தலில் மாத்திரம் அல்ல கூட்டணி. தேர்தலின்பின் அமைக்கப்படும் ஆட்சியிலும் கூட்டணி இருக்க வேண்டும் என்று குரல் எழுப்பப்படுகிறது.

ஆட்சியில் பங்கு கேட்கும் அளவுக்குக் குரல் எழுப்பும் உதிரிக்கட்சிகளில் தமிழ் மாநில காங்கிரஸ் முன்னிலையில் இருக்கிறது.

கடந்த சட்டசபைத் தேர்தலில் தி.மு.க வுடன் கூட்டணி அமைத்துப் பெரு வெற்றியினைத் தேடிக் கொண்டது த.மா.கா. தேர்தலில் அமோக வெற்றி. ஜெயலலிதாவுக்குப் படு தோல்வி. சொந்தத் தொகுதியிலேயே தோற்றார்.

இரண்டாவது பெரிய கட்சி என்ற காரணத்தினால் த.மா.கா.வுக்கு தமிழக சட்டசபையில் எதிர்க்கட்சி என்ற தகுதி கிடைத்தது. தி.மு.க ஆளும் கட்சியாகிவிட த.மா.கா எதிர்க்கட்சியாகிவிட்ட நிலை.

இதன் காரணமாக மூப்பனார் தேர்தல் கூட்டணி நடைமுறையில் புதியதொரு கோஷத்தை எழுப்பும் நிலைக்கு வந்து விட்டார்.

"தேர்தலில் மாத்திரம் அல்ல கூட்டணி. ஆட்சியிலும் தான் கூட்டணி" என்று வலியுறுத்தத் தொடங்கி விட்டார்.

அ.தி.மு.க வுடன் கூட்டணி அமைக்கும் முனைப்பில் இருக்கிறார் மூப்பனார். ஆனால் ஜெயலலிதா ஆட்சி அமைத்தால் அவருடைய அரசாங்கத்தில் பங்கு தர வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

**புகுந்த வீடு**

ஆனால் ஜெயலலிதாவோ ஒரேயடியாக மறுப்புத் தெரிவித்து விட்டார். தேர்தலில் மட்டுமே கூட்டணி. ஆட்சியில் அ.தி.மு.க. மட்டுமே இடம் பெறும் என்று கூறிவிட்டார். "விருப்பம் இருந்தால் வாருங்கள் அல்லது போய்விடுங்கள்" என்று தெரியப் படுத்திவிட்டார்.

த.மா.கா மத்திய குழு அண்மையில் கூடி தேர்தலில் கூட்டணி அமைத்து போட்டியிடுவது பற்றி முடிவு எடுக்கும் அதிகாரத்தை கட்சித் தலைவர் மூப்பனாரிடம் கையளித்து விட்டது. எனவே அடுத்து ஆட்சி அமைக்கும் தமிழக அரசாங்கத்தின் அமைச்சரவையில் இடம் பெறும் வழி பற்றி ஆராயும் நிலைக்கு வந்திருக்கிறார் மூப்பனார்.

தி.மு.க கூட்டணியில் பெரும் மாற்றம் ஏற்படக்கூடிய வாய்ப்பு இல்லை. பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் அங்கும் இங்கும் தாவும் நிலையில் இருந்தாலும் இறுதி நேரத்தில் அடங்கி விடுவார் என்று எதிர்பார்க்கலாம்.

அ.தி.மு.க கூட்டணியில்தான் ஸ்திரமான நிலைப்பாடு இல்லாமல் இருக்கிறது. ஜெயலலிதா தேர்தலில் போட்டியிட முடியுமா? இந்திய தேர்தல் ஆணையாளர் கில் தனிப்பட்ட முறையில் ஒரு தடவை பதில் அளித்தபோது "முடியாது" என்று கூறியிருந்தார்.

இருப்பினும் ஜெயலலிதா தேர்தலில் குதிக்கும் முயற்சியில் மும்முரமாக இருக்கிறார். தமக்கு சிறைத்தண்டனை விதித்த நீதி மன்றத்தீர்ப்பிற்கு எதிராக ஒரு தடை உத்தரவினைப் பெறும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்.

அப்படியும் தேர்தலில் அவர் போட்டியிட முடியாது போய்விட்டால் அந்த அனுதாபத்தைக் கொண்டே தமது கட்சியை வெற்றி பெறச் செய்யலாம் என்று நம்புகிறார்.

பீகார் முதலமைச்சர் லல்லு பிரசாத்யாதவ் சிறைத்தண்டனை பெற்றதால் பதவியிழந்தார். அவர் தமது மனைவியை முதலமைச்சராக்கிவிட்டு பீகார் ஆட்சியைத் திரைமறைவிலிருந்து நடத்தவில்லையா?

அதே பாணியில் தமிழக ஆட்சியைத்தமது பிடிக்குள் வைத்திருக்கலாம் என்ற நப்பாசையும் ஜெயலலிதாவுக்கு இருக்கிறது.

இத்தகையதொரு சூழ்நிலையில் தமிழகத்தில் கூட்டணி ஆட்சிதான் அமையும் என்று மூப்பனார் கூறியிருப்பது ஜெயலலிதாவுக்கு சீற்றத்தைத் தந்திருக்கிறது. எனவே அடம்பிடிக்கும் மூப்பனாரை மடக்க ஜெயலலிதா திட்டம் தீட்டி வருகிறார்.



ஜெயலலிதா

ஜெயலலிதாவுடன் தேர்தலில் கூட்டணி அமைக்கும் நோக்குடன் இந்திரா காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி தூதுவர் ஒருவரை அனுப்பி வைத்தார். இந்த வாய்ப்பை ஜெயலலிதா பயன் படுத்த முயலுகிறார். இந்திரா காங்கிரஸுக்கு அதிக தொகுதிகள் தருவதற்கு இணங்கியிருக்கிறார்.

த.மா.கா தாமதப்படுத்தினால் மூப்பனாருக்கு குறைந்த அளவு தொகுதியே கிடைக்கும் என்று கதை பரப்பப்பட்டிருக்கிறது. எனவே ஆட்சியில் பங்கு கேட்கும் மூப்பனார் அடங்கி விடுவார் எனக் கருதப்படுகிறது.

ஜெயலலிதா பலமானதொரு கூட்டணியை அமைத்துக் கொண்டு தேர்தலில் குதித்தாலே வெற்றியைத் தேடிக்கொள்ள முடியும். எனவே மூப்பனார் முரண்டுபிடித்துக் கொண்டிருப்பது அவருக்கு நன்மையைத் தரப் போவதில்லை என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இறுதி நேரக் குத்து வெட்டுக்களையெல்லாம் சமாளித்து ஜெயலலிதா ஒரு பலம் வாய்ந்த கூட்டணியை உருவாக்க வேண்டும்.

இல்லையேல் கருணாநிதிக்கு வெற்றி சுலபமாகிவிடும்.

— கதாசி

## போருக்குப் படை திரட்டும் நடவடிக்கைகளில் மகா சங்கத்தினர்

படையினருக்கு ஆட்களைத் திரட்டும் நடவடிக்கையில் முதற்தடவையாக மகா சங்கத்தினர் பகிரங்கமாக ஈடுபட்டுவருகின்றனர். தென்னிலங்கை ருஹுணு பிரதேசத்திலிருந்து பத்தாயிரம் இளைஞர்களைச் சேர்ப்பதற்கு கூட்டங்கள், பாதயாத்திரைகள் போன்றவற்றை மகாசங்கத்தினர் நடத்திவருகின்றனர்.

கடந்த சனிக்கிழமை காலியிலிருந்து கதிர்காமம் நோக்கி மகா சங்கத்தினர் பாதயாத்திரையொன்றை ஆரம்பித்தனர். நூற்றுக்கு மேற்பட்ட மகா சங்கத்தினர் இதில் கலந்து கொண்டனர். செல்லும் வழியில் கூட்டங்களை நடத்தி இளைஞர் யுவதிகளை இராணுவத்தில் இணைந்து பணியாற்ற வருமாறு வேண்டுகோள் விடுத்தனர்.

ஆளுங்கட்சி அரசியல்வாதிகளும் இந்நிகழ்ச்சிகளில் பிரசன்னமாகி வருகின்றனர்.

கடந்த திங்கட்கிழமை பதுளையில் நடைபெற்ற இவ்வாறான நிகழ்ச்சியொன்றுக்கு ஆளுங் கட்சி தேசியப்பட்டியல் உறுப்பினரும் மீனவர் வீடமைப்பு, சமூக சேவைகள் பிரதி அமைச்சருமான மேர்வின் சில்வா தலைமை தாங்கினார்.

எனினும் பெரும்பான்மையின மக்களிடையே இப்படை திரட்டும் நடவடிக்கை அவ்வளவாக எடுபடவில்லை. இளைஞர் யுவதிகள் பெரிதாக ஆர்வம் காட்டுவதாகவும் இல்லை.

— அருள்

## ஏறாவூரில் கடை அடைப்பு அமைதிப் பேரணி

அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப்பின் ஹெலி விபத்துத் தொடர்பாக பூரண விசாரணை நடத்துமாறு கோரி ஏறாவூரில் முஸ்லிம்கள் கடையடைப்பு நடவடிக்கை ஒன்றை மேற் கொண்டனர்.

இந்த ஹர்த்தால் நடவடிக்கை காரணமாக ஏறாவூரில் வழமையான நடவடிக்கைகள் பாதிக்கப் பட்டன. கடைகள் வர்த்தக நிலையங்கள் திறக்கவில்லை. அதன் விளைவாக ஒரு சில தேனீர்க் கடைகள் தவிர ஏனைய வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டு இருந்தன.

இதே சமயம் இஸ்லாமிய நற்பணி மன்றத்தின் பேரில் அமைதிப் பேரணி ஒன்றும் நடத்தப்பட்டது.

ஏறாவூர் மடுவத்தடிச் சந்தியில் இருந்து ஆரம்பமான பேரணி ஏறாவூர் பஸ் நிலையச் சந்திவரை சென்றது. இந்தப் பேரணியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் கலந்து கொண்டனர். நகரின் பல இடங்களில் உரிமை கோரப்படாத சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

-சத்துருக்கன்

## வாசகர் இதயம் பேசுகிறது

"ஒற்றைப் பனை" என்னும் தலைப்பில் வெளியாகியிருந்த சிறுகதையைப் படித்ததும் நமது அன்றாட வாழ்வில் நிகழும் சம்பவங்கள் நினைவுக்கு வந்தன.

- தர்ஷினி ஜோர்ஜ், நாரஹேன்பிட்டி.

சுமைகளைச் சுகமாக்கும் விதத்தில் வெளியிடும் கவிதைகள் எம் மனதுக்கு மகிழ்வைத் தருகின்றன.

- தி.லோஜினி, வவுனியா.

வடபுலத்தில் வலிகாமத்தான் புகுந்து வெளிக்கொணரும் செய்திகள் மற்றும் முக்கிய விடயங்கள் பிரமிப்பைத் தருகின்றன.

- அ. அரசரெத்தினம், சேனையூர்

வாசகர்களை வெகுவாக வசீகரிக்கும் தலைப்புகள் சுவையாக இருக்கின்றன. "மசாலா மிக்ஸ்" பகுதியில் வரும் படங்களும் விளக்கங்களும் அபாரம்.

- அ.றொயான், முருங்கன்

வடலூர் வள்ளலார் இராமலிங்க சுவாமிகளின் நினைவினை மிகவும் சிறப்பாக வெளியிட்டிருந்தீர்கள். நன்றி.

- எல்.வில்பிரட், மருதானை

ஆயுதப் போரை மிஞ்சும் அளவுக்கு வீதி ஆர்ப்பாட்டங்கள் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன. இது ஒரு சிறப்பான அரசியல் மாற்றம்தான்.

- எம்.சிவஞானம், பதுளை

பிரதேச வாதத்தினால் மலையகக் கல்வி பாழ்பட்டுப் போய்விடாமல் பாதுகாக்க வேண்டியது அனைவரினதும் கடமையாகும்.

- கே.கஜேந்திரன், மஸ்கெலியா

வவுனியா லொட்ஜ் ஒன்றில் நடைபெறும் சீர்கேடு பற்றி அறிந்ததும் அங்கு லொட்ஜுகளில் தங்கி வாழும் மக்களுக்கு நடுக்கம் பிடித்துவிட்டதே?

- எஸ். வரதன், முருங்கன்


**GREEN CARD**

**அமெரிக்காவில் தங்கி வேலை செய்வதற்கும் கல்வி பயிலவும் உங்களுக்கும் முடியும்**

அமெரிக்காவில் வதியுரிமை பெறுவதற்கான 55,000 விசா சீட்டிழுப்பில் வழங்கப்படும். நீங்களும் போட்டியிட நாங்கள் உங்களை சரியாக போட்டிக்கு உட்படுத்துவோம். ஆயிரக்கணக்கில் செலவு செய்து கவலைப்பட வேண்டாம். நாங்கள் அறவிடுவது தபால் கட்டணம் மட்டுமே.
பெயர், முகவரி, மாவட்டம் போன்ற விபரங்கள் எழுதி ரூபா. 13.50 பெறுமதியான முத்திரையுடன் கீழ்க் காணும் விலாசத்திற்கு தபாலில் விண்ணப்பிக்கவும், தற்போது வெளி நாட்டிலுள்ளவர்களும் இதில் பங்குபற்றலாம். பெயர், முகவரி, இலங்கை முகவரியையும் எழுதியனுப்பவும். வெளி நாட்டிலுள்ளவர்கள் முத்திரையனுப்பத் தேவையில்லை.

**Taurus Lanka**
**P.O. Box-84, Kotte, Sri Lanka.**
பதிவு எண் : W/C 3791

# வசதியான தொலைபேசியால் நோய் வருவது தெரியுமோ?

விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் இருபத்தியோராம் நூற்றாண்டின் அடையாளச் சின்னங்களாக இருப்பவை கணனிகளும் (Computer) செல்லிடத் தொலைபேசிகளும் (Mobile TelePhone)

இத்தகைய பல கண்டு பிடிப்புகள் மனித குலத்திற்கு மிக வசதியானவை. எனினும் அவை அபாயம் நிறைந்தவை.

அது பற்றிப் பலருக்குத் தெரியாது. அதனால் தான் செல்லிடத் தொலைபேசியைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகிறது. ஒரு சாரார் தேவைக்கன்றிப் பாஷனாகவும் செல்லிடத் தொலைபேசிகளைப் பயன்படுத்துகின்றார்கள்.

செல்லிடத் தொலைபேசிகளால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்த செய்திகள் முதன் முதலில் 1993 ஆம் ஆண்டுதான் வெளியாகின.

அமெரிக்காவின் புகழ் பெற்ற ஒளிபரப்பு நிகழ்ச்சியான "லாரி கிங் லைவ் ஷோ"வில் பங்கு பற்றிய "டேவிட் ரெய்னார்ட்" என்பவர் தனது மனைவி மூளைப்புற்று நோயினால் மரணமடைய "என்.ஈ.சி" என்ற செல்லிடத் தொலைபேசி நிறுவனங்கள் தான் காரணம் என்று குற்றஞ்சாட்டி நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார்.

வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது. என்றாலும் அமெரிக்கா முழுவதிலும் இந்த வழக்கு நிகழ்வு [illegible]உணர்வை ஏற்படுத்தியது.

இதனையடுத்து செல்லிடத் தொலைபேசி நிறுவனங்கள் செல்லிடத் தொலைபேசிகள் பாதுகாப்பானவையே என நிறுவும் பொருட்டு 120 கோடி ரூபாவை ஒதுக்கி ஆராய்ச்சிகளை மேற்கொண்டன. இன்றும் அவை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆராய்ச்சிகள் முடிவுகள் இன்னும் அதிகார பூர்வமாக அறிவிக்கப்படவில்லை. எனினும் செல்லிடத் தொலைபேசியின் கதிரியக்கத்தினால் மூளைப்புற்று நோய் ஏற்படுவது ஊர்ஜிதமாகி உள்ளது என்று ஆய்வாளர்களினூடாகத் தகவல்கள் கசியத் தொடங்கியுள்ளன.

உலகின் புகழ் பெற்ற பொதுச்சுகாதார புற்று நோய் ஆய்வாளரான "ஹார்டெல்" செல்லிடத் தொலைபேசி அதிகம் பயன்படுத்துவோருக்கு மூளைப்புற்று நோய் ஏற்பட 3.5 மடங்கு வாய்ப்புக்கள் அதிகம் என்கிறார்.

இதற்காக அவர் 11000 பேரை ஆய்வுக்குட்படுத்தினார். பொதுவாகப் பலரும் தலைவலி, எரிச்சல் உணர்வு, சோர்வு போன்றவற்றால் அவதிப்படுவதை அவர் கண்டறிந்தார்.

இன்று உலகளாவிய ரீதியில் 42 சதவீதமானவர்கள் செல்லிடத் தொலைபேசியைப் பயன்படுத்துகின்றனர் என்று மற்றுமொரு ஆய்வு கூறுகிறது.

செல்லிடத் தொலைபேசியைப் பயன்படுத்தும் போது அதிலிருந்து வெளியாகும் கதிரியக்கம் மனிதர்களை வெகு விரைவில் பாதிக்கின்றது.

குறிப்பாக மூளையில் உள்ள செல்களின் தொழிற்பாட்டை இக்கதிரியக்கம் தற்காலிகமாகக் குழப்பி விடுகின்றது. இதனால் தலைவலி போன்ற நோய்கள் ஏற்படலாம் என்கின்றார்.

இவை மூளைப்புற்று நோய்க்கான அறிகுறிகள் என்றும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

அண்மைய செய்தி ஒன்றில் தொட்டதெற்கெல்லாம் செல்லிடத் தொலைபேசியைப் பயன்படுத்துவோர்களுக்குக் கண்புற்று நோய் ஏற்படவும் வாய்ப்புண்டு என விஞ்ஞானிகள் புதிதாக ஒரு குண்டைத் தூக்கிப் போட்டுள்ளார்கள்.

கண்ணின் "குவிவியல்" படலத்தின் மீது காணப்படும் "மெலேனொசைட்ஸ்" என்ற செல்களை இக்கதிரியக்கம் தாக்கி அவற்றைத் தாறு மாறாக வளரச் செய்கிறதாம் இதனால் அந்தப்பகுதியில் புற்று நோய் ஏற்பட மும்மடங்கு வாய்ப்புண்டு எனவும் விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

சரி இந்த அபாயத்தில் இருந்து தப்பிக்கொள்ள வழியே இல்லையா? இப்படிக் கேட்பவர்கள் தற்காலிகமாகச் சில வழிமுறைகளைக் கடைப்பிடிக்கலாம்.

- செல்லிடத் தொலைபேசியைக் காதருகில் வைத்துப் பேசுவதைவிட "ஹெட்போனை" காதருகில் மாட்டிக் கொள்ளலாம்.
- தேவையற்ற நேரங்களில் செல்லிடத் தொலை பேசிகளின் இயக்கத்தை நிறுத்தி வைக்கலாம்.
- அவசியம் தேவையானவர்களுக்கு மட்டும் செல்லிடத் தொலைபேசிகளின் எண்ணைக் கொடுக்கலாம். இதனால் செலவும் குறையும்.

செல்லிடத் தொலைபேசிகள் பாதுகாப்பானவையாக மாற்றப்படும் வரை இவையே தற்காலிக பாதுகாப்பு வழிமுறைகள்.

- ஜெ. பிறேம்குமார்

# பிரேத அறையில் போதை செய்த வேலை!

பிரேதங்களை 'எம்பாம்' (கெடாமல் வைத்திருக்க) செய்வதைத்தான் கேள்விப் பட்டிருக்கின்றோம். உயிருள்ள மனிதனையே 'எம்பாம்' செய்யத் தயாரான ஒரு சம்பவம் குறித்து கேள்விப்பட்டிருக்கின்றீர்களா? நீர்கொழும்பு – கொழும்பு பிரதான பாதைக்கருகிலுள்ள ஒரு மலர்ச்சாலையில் இந்த விநோத சம்பவம் நடைபெற்றுள்ளது.

சம்பவதினம் இரவு தனது உதவியாளருடன் பிரேதமொன்றைப் பிரதம ஊழியர் எம்பாம் செய்து முடித்தார்.

அதேவேளை டெலிபோன் மணி அலறியது. மறுபக்கம் மலர்ச்சாலை முதலாளி "இன்னொரு பிரேதம் வருகிறது விடிவதற்குள் அதனையும் எம்பாம் செய்து விடுங்கள்" என உத்தரவு பிறப்பித்தார்.

ஓ.கே என சம்மதம் தெரிவித்துவிட்டு "நான் கொஞ்சம் வெளியே போய்வருகிறேன்" எனத் தனது உதவியாளருக்குக் கூறிவிட்டுச் சென்றார் பிரேத "எம்பாம்" வல்லுநர்.

வெளியே சென்றவர் நீண்ட நேரம் திரும்பி வராததால் உதவியாளர் அயர்ந்து தூங்கிவிட்டார்.

வெளியே சென்றவருக்கு "மூக்கு முட்ட" மதுபோதை. அந்த நிலையிலும் முதலாளியின் உத்தரவு ஞாபகத்துக்கு வரவே வேகமாக மலர்ச்சாலைக்குத் திரும்பினார். அங்கு படுத்திருந்த தனது உதவியாளரைக்கூட அவருக்கு அடையாளம் தெரியவில்லை. குறிப்பிட்ட பிரேதத்தைக் கொண்டு வந்து விட்டார்கள் என்று எண்ணி, படுத்திருந்த உதவியாளரின் "சேர்ட்டை"க் கழற்றி 'எம்பாம்' செய்யத் தயாரானார்.

நல்ல வேளை! நித்திரை கலைந்த உதவியாளர் விஷயத்தை உடனே ஊகித்துக் கொண்டார். மரண பயத்துடன் குளறினார். கதவைத் திறந்து கொண்டு வெளியே ஓடி உயிர் பிழைத்துக் கொண்டார்.

## சமாதானம்

குறிவைத்தே கோடரியால்
வெட்டிச் சாய்த்தார்.
கொள்கையில்லா அரசியலார்
மக்கள் நட்டை!
நரிகுணத்தார் நம்நாட்டில்
பெருகியதால்
அரிதாகிப் போனதன்றோ
ஆத்ம பந்தம்!

தாலாட்டுப் பாடாமல்
குழந்தை தூங்கும்
தாய்ப்பாலே இல்லாமல்
பிள்ளை வாழும்
வாலாட்டும் தெருநாயும்
வாஞ்சை காட்டும்
வரலாறு கண்டதன்றோ
நமது நாடு!

வந்தேறு குடிகள் என்ற
வரட்டுவாதம்
சொந்தச் சகோதரர்களிடம்
இனியும் வேண்டாம்!
முந்தைய விஜயன் முன்னோர்
யாவரும்
இந்தப்பூமிக்குஇடம்பெயர்ந்து
வந்தவரே!

மலையேறித் தலை பறிக்கும்
மாரியம்மா
தலை நிறைய பொதி சுமக்கும்
தர்மதாஸ
வலை போட்டு மீன்பிடிக்கும்
மரியதாஸூம்
நிலையான கொள்கையிலே
ஒன்றுபட்டால்
நிசிக்குள்ளே வந்திடாதோ
சமாதானம்!

ஓடும் நதி மாவலியால்
மத்தி வாழும்!
பாடும் மீன் வாவியினால்
கிழக்கு வாழும்!
காடு சேர்ந்த கழனியினால்
தெற்கு வாழும்!
கடல் சூழ் தீவுகளால்
வடக்கு வாழும்!

வளமான வாழ்வு தனை
மண்ணில் தேடு!
பலமான எதிர்காலம்
கண்ணில் உண்டு!
உளமாரச் சிந்தித்து
ஒன்றுபட்டால்
களம் சென்று மாய்கின்ற
'கதையே' மாறும்!

வதைப்பட்டார்
வாழ்க்கையிலே
வசந்தம் வேண்டும்!
சதை உண்ணும் 'கழுகுகள்'
சாக வேண்டும்!
'புதைகுழிகள்
பெருக்கெடுக்கும்
போரே வேண்டாம்!
கதை புதிதாய் எழுதிடுவோம்
கருணை கொண்டே!

ஏர் உழவன் வழிகாட்ட
எருது போகும்!
ஊர் தலைவன் வழிகாட்ட
நாடு வாழும்!
யார் இங்கே வழிகாட்டும்
உத்தமர்கள்
சேர்ந்திடனும் அவர் பின்னே
செழிப்பு நோக்கி!

புத்தன் வந்தபூமியிலே
போரே வேண்டாம்!
புனித தேசம் செழித்திடனும்
போரே வேண்டாம்!
சுத்தும் கடல் சூழ உள்ள
நமது தேசம்
சத்தமின்றி காணவேண்டும்
சமாதானம்!

நா. ஜெயபாலன்

## வருவையா?

இருமுறை முகம் திருப்பி இழுத்துமே
மூச்சை விட்டாய்!
ஒரு செடி கொடிகள் தான் உண்டா? உயர் மரம் காய்
பூ உண்டா?
பெருமனை மாடி உண்டா? பேசிடா வாய்தான்
உண்டா?
வருவை யாம் மீண்டும் என்றார், வாழ்த்துவோம்
புயலே வா வா!

சீற்றமேன் மூக்கைச் சீறிச் சிந்திய நோக்கமென்ன?
காற்றெனும் சட்டைதன்னைக் கழற்றியேன் புயலைப்
போட்டாய்?
ஆற்றலைக் காட்டுதற்கா? அச்சத்தை ஊட்டுதற்கா?
கூற்றுவன் நினைவை நெஞ்சில் கொள்ளட்டும்
என்பதற்கா?

இடமதைத் தெரிந்தாய், மங்கும் இலங்கையில்
ஏற்றவாறே!
வட கிழக்ககதியாகி வதைபடும் மாந்தர் தம்மை
அடக்குதாம் செயற்கைவாதம், அடக்குவாய்
இயற்கைப் பூதம்!
ஒடுக்கவா நீயும் சேர்ந்தே ஒத்துழைக்கின்றாய், வாழ்க!

மாங்காயைக் கூட்டி அள்ளி மடுவெட்டிப்
புதைத்தாயிற்று!
தேங்காயில் வழுக்கல் கண்டு திருவலைபின்
வாங்கிற்று!
தாங்காத குழைகொப்பெல்லாம் சாம்பலுக்
கெதிர்ப்பேகாட்டும்!
ஏங்குதே நெஞ்சம் உன்னால், என்று நீ தென்றல்
ஆவாய்?


இ. தமிழரசி

## பெருமைப்படு

எழுந்து நட
பெண்ணே!
எதிர்காலம் உனதே!
பெண்ணாய்ப்
பிறந்தது பாவம் என்று
வஞ்சகர்கள்
சொன்னது
பொய்யாகும் காலத்தில்
பிறந்ததற்காய்
பெருமைப்படு!

பெண் புத்தி பின்புத்தி
என்றவர்கள்
புத்தியில் இருந்தது
எவரும் "மண்" என்று
தெரிந்தவர்
காலத்தில பிறந்ததற்காய்
பெருமைப்படு!
ஆனால் ஒன்று!
இன்னும் சில
பெண்கள்
பொய்மரபுக்குள்ளேயே
வாழ்கிறார்கள்!
அவர்களுக்காய்
குரல்கொடு!

'இளம் ஊதா பூ'




## உண்மைகள்!

வேகமாக பரவுவது
வதந்தி!
வேதனை தருவது
பிரிவு!
சாகாமல் வாழ்வது
உண்மை!
சந்தி சிரிக்க வைப்பது
பொய்மை!
தாகம் தீர்ப்பது
தண்ணீர்!
தரித்திரம் தருவது
சோம்பல்!
போகம் தருவது
ரோகம்!
போதை தருவது
சோகம்!
போதால் வருவது
அழிவு!

அ. அரசரெத்தினம்

# புத்தளம் சாக்கடை நகரம் என்ற சாபக்கேடு மாறாதா?

## கால்வாயில் நீர்தேக்கம்; அசுத்தம்; அசிங்கம்; துர்நாற்றம்; சுகாதாரத்துக்குக் கேடு!

புத்தளத்தில் சாக்கடைக்கால்வாய் ஒன்று கடந்த சுமார் பத்து வருடங்களாகச் சகிக்க முடியாத துர்நாற்றத்தை எங்கும் பரப்பி மக்களுக்குப் பெரும் தொல்லை கொடுத்து வருகிறது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனித்தால்தானே! அழுக்குகளை அகற்றிக் கால்வாய் சுத்தம் செய்யப்படுவதில்லை. மேன்மேலும் அழுக்குகள் நிறைந்து துர்நாற்றம் அதிகரித்து வருகிறது.

சுகாதாரத்திற்கும் பெரும் கேடு ஏற்பட்டிருக்கிறது. நுளம்புத் தொல்லை தாங்கமுடியாது.

தாங்கள் செய்த பாவமோ இது என்று மக்கள் தங்களைத் தாங்களே சபித்துக் கொள்கிறார்கள்.

விஷயமறிந்தவர்கள் ''சுடர்ஒளி'' இந்த விஷயத்தைப் பிரசுரித்து நாடறியச் செய்தால் நிச்சயம் பலன் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் ''சுடர்ஒளி'' யுடன் தொடர்பு கொண்டார்கள்.

''சுடர்ஒளி'' விசேஷ பிரதிநிதி ஒருவர் நேரில் சென்று நிலைமையை அவதானித்தார். படங்களும் எடுத்தார். மூக்கைப் பொத்திக் கொண்டே கால்வாய் அருகில் நிற்கவேண்டிய நிர்ப்பந்தம். குமட்டல் வேறு. அந்த அளவுக்கு துர்நாற்றம்.

சுமார் 300 அடிக்கு மேற்பட்ட நீளமானது இச்சாக்கடைக் கால்வாய். இப்பகுதி மக்களின் சுகாதாரத்திற்குப் பெரும் சவாலாக அமைந்துள்ளதுடன் சுற்றாடலுக்குப் பெரும் அச்சுறுத்தலாகவும் இருக்கிறது.

புத்தளம் நகரின் மன்னார் வீதியில் அமைந்துள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தின் பின்னால் இச் சாக்கடைக் கால்வாய் ஆரம்பமாகிறது. பல வளைவுகளைக் கடந்து சென்று மறுபடியும் மன்னார் வீதியிலுள்ள சாஹிரா தேசியக் கல்லூரி முன்பாக முடிவடைகிறது.

சுமார் மூன்று அடி அகலமானது இந்தச் சாக்கடைக் கால்வாய். பல இடங்களிலும் இடிந்து மூடப்பட்டுக் கிடக்கிறது. அதனால், கழிவு நீரும் அதனோடு சேர்ந்து கழிவுப்பொருட்களும் ஓட முடியாமல் பல வருட காலம் தேங்கி நிற்கின்றன. கழிவுப் பொருட்களில் பல அழுகி உருக்குலைந்து போகின்றன. அதனால் அந்தப் பொருட்களில் இருந்து எழும் துர்நாற்றம் தண்ணீரையும் நாற்றமடிக்க வைக்கிறது. பொதுமக்கள் சகிக்கமுடியாமல் தவிக்கிறார்கள்.

கடும் கோடை காலங்களிலும் கூட இச் சாக்கடைக் கால்வாயில் அசுத்த நீர் நிரம்பிக் காணப்படுகிறது. ஆயின் மழைக் காலங்களில் எப்படி இருக்கும் என்று சொல்ல வேண்டிய அவசியமே இல்லை.



வழிந்தோட வேண்டிய சாக்கடைக் கால்வாயின் அசுத்த நீரும், கழிவுகளும் இப்படி தேங்கிக் கிடந்தால் தொற்று நோய்கள் பரவுவது வெகு சுலபம்தானே..!

நீண்ட காலமாக இப்பகுதியில் வாழும் பேக்கரி உரிமையாளர் ஒருவர் இது குறித்து கருத்து தெரிவிக்கையில் பின்வருமாறு கூறினார்.

சுமார் 10 வருட காலத்துக்கு முன்பு இச் சாக்கடைக் கால்வாய் அப்போதைய நகர பிதாவால் அமைக்கப் பட்டது. சுமார் 3 அடி அகலத்தில் குறைந்த பட்சம் 300 அடி வரைக்கும் பல ஒழுங்கைகள் வழியாக இக் கால்வாய் அமைக்கப் பட்டது. எனினும் கழிவு நீர் வழிந்தோடும் படியாக அமைக்கப்படவில்லை.

கழிவு நீர் இருக்குமிடம் பள்ளத்திலும் நீர் ஓடும் இடம் உயரத்திலும் வரக்கூடியவாறு கால்வாய் அமைக்கப்பட்டுவிட்டது. அப்படியானால் கழிவு நீர் எப்படி வழிந்தோடும்? வருடக் கணக்கில் தண்ணீரும் கழிவுகளும் தேங்கி நிற்கின்றன. நுளம்புகள் உற்பத்தியாகின்றன. அதனால் இப்பகுதியில் வாழும் நாம் எல்லோரும் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகிறோம்.

இதைப் பல முறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டுவந்தோம். எனினும் இதுவரை எதுவுமே நடக்கவில்லை. இப்படி அவர் கூறினார்.

இது குறித்து இந்தச் சாக்கடைக் கால்வாயின் மையத்தில் குடியிருக்கும் மாகாண அமைச்சர் ஒருவரின் சாரதி தகவல் தருகையில் கூறியதாவது:-

''கடந்த பல வருடங்களாக நாம் பெரும் நரக வேதனையை அனுபவித்து வருகிறோம். இந்தச் சாக்கடைக் கால்வாயின் அசுத்த நீரும் கழிவுகளும் எமது வீட்டின் முன்னே வருடக்கணக்கில் தேங்கி நிற்பதால் நாம் பெரும் துன்பத்தை அனுபவிக்கின்றோம்.

சில வேளைகளில் ஒருவிதமான புழுக்கள் உற்பத்தியாகி எமது வீட்டினுள்ளும் படையெடுக்கின்றன. சிறிது மழை பெய்தாலும் எமது வீட்டின் முற்றம் அசுத்த நீரில் மூழ்கி விடுகின்றது. எமது குறை என்றுதான் தீருமோ?'' இப்படி அவர் கவலை தெரிவித்தார்.



புத்தளம் நகர மத்தியில் (9ஆம் வட்டாரம்) பல வருடங்களாக தேங்கி நிற்கும் சாக்கடைக் கால்வாயில் பல விதமான கழிவுப் பொருட்களும் அழுகிய நிலையில் கிடப்பதைப் படத்தில் காண்க.

இந்தக் கால்வாய் மட்டுமல்ல, புத்தளத்தின் மற்றும் பல வீதிகளின் ஓரங்களில் கழிவு நீர் ஓடுவதற்காக அமைக்கப்பட்டுள்ள கான்களும் உருக்குலைந்து காணப்படுகின்றன. அவற்றிலும் தண்ணீர் ஓடாமல் தேங்கி நிற்கிறது. அழுக்குகள் மண்டிக் கிடக்கின்றன. குறிப்பாக நூர் மஸ்ஜித் வீதிக் கானைச் சொல்லலாம். படுமோசம்.

தண்ணீர் தேங்கி நின்றால் மலேரியா, டெங்கு போன்ற நோய்கள் பரவும் என எச்சரிக்கை செய்யும் சுகாதாரத் துறையினர் ஏன் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி மக்களை நோய்களிலிருந்து பாதுகாக்க முடியாது? இது பாதிக்கப்படும் மக்களின் கேள்வி. பதில் சொல்வார் இல்லை.

— புத்தளத்தான்

## ஜெகோவாவின் சாட்சிகள் இல்லம் மீது தாக்குதல் எனப் புகார்

கற்பிட்டி பிரதேச சபைக்குட்பட்ட மாம்புரி கிராமத்தில் அமைந்துள்ள ''ஜெகோவாவின் சாட்சிகள் (Jehovahs Witnesses) என்னும் மதப்பிரிவின் இறை இல்லத்தை வன்முறைக் கும்பலொன்று தாக்கி சேதப்படுத்தியுள்ளதாகப் புகார் செய்யப்பட்டிருக்கிறது.

''மாம்புரி கிராமத்திலுள்ள எமது இறை 'இல்லத்தை சுமார் 300 பேர் கொண்ட கும்பலொன்று முற்றுகையிட்டது. முற்றுகையைத் தொடர்ந்து இல்லம் தாக்குதலுக்குள்ளானது. வீட்டின் கண்ணாடி ஜன்னல்கள் அடித்து நொறுக்கப்பட்டன. மின்சார விநியோகமும், நீர் விநியோகமும் வன்முறையாளர்களால் துண்டிக்கப்பட்டன.

எங்களது வேத நூலான பைபிளையும், மற்றும் பைபிள் பாட பிரசுரம் போன்றவற்றையும் தீயிட்டு எரித்தனர்.

அத்துடன் எங்களது பாவனையில் இருந்து வந்த கிணற்றை மண்போட்டு மூடமுனைந்தார்கள்.

வன்முறையாளர்கள் மேற்கொண்ட அடாவடித் தனத்தால் பல்லாயிரக்கணக்கான ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது'' என்று புகார் செய்யப்பட்டிருக்கிறது.

கிறிஸ்தவமத குரு ஒருவரே இந்தச் சம்பவத்துக்குப் பின்னணியில் இருந்ததாக குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.


நியூ திவ்யா ஜுவலர்ஸ்



உங்கள் கனவில் மின்னிய
தங்க நகைகள்
மணவாழும் வேளையில்
உங்கள் அங்கங்கள்
எங்கள் தங்கங்களால் மின்னட்டும்...
NEW DHIVIYA JEWELLERS
42-C, Galle Road, Wellawatte, Colombo - 06.
Tel: 508501, 505065
Specialist in 22kt. Gold Jewellery

Tex City



தலைநகரில்
புடவை, ஷல்வார் கமிஸ் விற்பனையில்
தனக்கென தனிப்பெயர் பெற்ற
பிரபல்யமான ஸ்தாபனம்!
நாகரீக புடவை உலகின்
முன்னோடிகள்
இன்றே விஜயம் செய்யுங்கள்!
றெக்ஸ் சிட்டி
இல. 42A,


நியூ திவ்யா ஜுவலர்ஸ்



உங்கள் கனவில் மின்னிய
தங்க நகைகள்
மணவாழும் வேளையில்
உங்கள் அங்கங்கள்
எங்கள் தங்கங்களால் மின்னட்டும்...
NEW DHIVIYA JEWELLERS
42-C, Galle Road, Wellawatte, Colombo - 06.
Tel: 508501, 505065
Specialist in 22kt. Gold Jewellery